


கல்கி
KALKI செப்டம்பர் 30, 1956
4 அணு


சாவித்திரி
எப்பொழுதும் உபயோகிப்பது
லக்ஸ்
டாய்லெட்
சோப்
"தூய்மையான சோப்புக்கு
மாத்திரமே அத்தகைய
வெண்மை உண்டு"
என்கிறார் அவர்
முற்றிலும் பரிசுத்தமானது!
லக்ஸ் டாய்லெட் சோப்பின்
பாலொத்த வெண்மை அதன்
அகத் தூய்மைக்கு அடை-
யாளம்! தூய, வெண்ணிற
முள்ள இந்த சோப்பை
நீங்களே உபயோகித்துப்
பாருங்கள். மிருதுவான,
சுகந்தமணம் கமழும் அதன்
நுரை எவ்விதம் உங்கள் சரு
மத்தைப் பராமரிக்கிறது...
எத்தகைய எழில் ஊட்டு
கிறது என்பதை அதி விரை
வில் நீங்களே கண்டு கொள்
வீர்கள். பூரண உடல் வனப்
புக்கு, சிக்கனம் வாய்ந்த
பெரிய சைஸ் வில்லையை
உபயோகியுங்கள்.
LUX
LUX TOILET SOAP
சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்
LTS. 488-50 TM

மலர் 16
இதழ் 9


கல்கி

பொருளடக்கம்

புரட்டாசி 15

செப்டம்பர் 30, 1956


"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.




பத்திரமாக அதை பைல் செய்யுங்கள்

உங்களுக்கு தேவையான சமயத்தில், அந்த தஸ்தாவேஜுகளை வெகு சுலபமாக எடுத்துக் கொள்ளலாம்...ஆல்வின் பைலிங் காபினெட்டுகளில் இது ஒரு சௌகரியம். பார்வைக்கு அழகாகவும், தானாகவே பூட்டிக் கொள்ளும் விசையும், சுலபமாக திறந்து மூடுவதற்காக பால் பேரிங்குகளும் ஒருங்கே அமைக்கப் பெற்றவை. உள்ளே வைக்கப்பட்ட சாமான்களை, நெருப்பு, திருட்டு, பூச்சிகள் முதலியவற்றிலிருந்து பாதுகாக்கின்றன.

விலை ரூபாய் 320/- தான்



டிரான்ஸ்பர் பாக்ஸ்கள் 10½"×5"×15" அளவில் [illegible] விலை ரூ. 12/-



கார்டு இன்டெக்ஸ் காபினெட்டுகள் [illegible] 1, 2, 4, [illegible] விலை ரூ. 28/- முதல்

ஹைதராபாத்
ஆல்வின்
மெடல் ஒர்க்ஸ் லிட்.

சென்னை, திருவாங்கூர்-கொச்சின் & ஆந்திர ராஜ்யத்திற்கு ஏஜண்டுகள்:
மெஸர்ஸ் அடிஸன் & கம்பெனி பிரைவேட் லிமிடெட்
158, மவுண்டு ரோடு, சென்னை – 2

கூர்க் & மைசூர் ராஜ்யத்திற்கு ஏஜண்டுகள்:
மெஸர்ஸ் அடிஸன் & கம்பெனி பிரைவேட் லிமிடெட்
செயின்ட் மார்க்ஸ் ரோடு, பெங்களூர்

கீழ்க்கண்ட ஊர்களிலுள்ள டீலர்களிடமும் கிடைக்கும்:
சிதம்பரம், நெல்லூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, மதுரை
சேலம், பாண்டிச்சேரி, பொள்ளாச்சி, மட்டாஞ்சேரி & கோயமுத்தூர்



மலர் 16
இதழ் 9

தமிழ்த்திரு நாடு தன்னைப் – பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

துன்முகி௵
புரட்டாசி 15

நல்ல எதிர்க் கட்சி வேண்டும்

பாரத தேசத்திலே தேர்தல் சமயம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு கட்சியும் மகாநாடுகள் கூட்டித் தனது பலா பலத்தைச் சோதித்து வருகிறது. சிலர் சில கட்சிகளுக்குக் கூடாத நட்பை யெல்லாம் ஏற்படுத்திப் பலப்படுத்தப் பார்க்கிறார்கள். ஆனால் அவை யெல்லாம் நடக்காத காரியங்கள். இந்தச் சமயத்தில் நம் அகக் கண்முன் தோன்றும் காட்சி என்ன?

நம்முடைய பாரததேசம் எனும் தோட்டத்தில் ஒரே ஒரு மரம் நிற்கிறது!

அதனுடைய வேர் சரித்திரத்தில் ஆழ்ந்து ஊன்றியும் அதனுடைய கிளைகள் மிகப் பெரியதாகவும் அடர்த்தியாகவும் பரவியும் நிற்கிறது.

இதை யாரும் அசைக்க முடியாது. இதுவே நம்முடைய காங்கிரஸ் கட்சி!

அதனுடைய நிழலின் கீழ் வேறு எந்தச் செடியும் கொடியும் மரமும் வளர்வதற்கு இடமில்லை. பொது ஜனங்களுடைய அன்பே சூரிய வெளிச்சம். வேறு செடிகளுக்கு அந்த வெளிச்சம் பட்டுவிடாமல் காங்கிரஸ் மரத்தின் நிழல் அடர்ந்து நாலாபுறமும் பரவி விழுகிறது.

ஆனால் மரத்தில் போதிய காய்ப்பு இல்லை. இதுவே பொது மக்களுடைய குறை. இதற்கு என்ன செய்வது என்பதே காங்கிரஸில் பற்றுக் கொண்டவர்களின் இப்போதைய கவலை.

மரத்தை வெட்டலாகாது; எருப்போட்டு வேருக்கு நீர் பாய்ச்ச வேண்டும்.

மரத்தின் வேர் மரத்துக்கு உயிர். காங்கிரஸ் மரத்தின் வேர் காங்கிரஸ் கமிட்டிகளும், காங்கிரஸில் வேலை செய்யும் ஊழியர்களும், அவர்களிடம் வேலை வாங்கும் ஸ்தல காங்கிரஸ் அதிகாரிகளும்தான்.

இவர்களை இப்போது கவனிப்பார் யாருமில்லை. எதேச்சாதிகாரம் நடைபெற்று வருகிறது.

இந்த நிலைமைக்கு மருந்து யார் காணப் போகிறார்கள்?

வைத்தியர்களுக்கே நோய் பரவிப் பீடித்திருக்கும் போது அவர்கள் என்ன மருந்து கண்டுபிடித்துச் சொல்லப் போகிறார்கள்? செய்யப் போகிறார்கள்?

ஒரு நல்ல எதிர்க் கட்சி இருந்தால்தான் காங்கிரஸில் சூடு ஏறி ரத்த ஓட்டம் பிறக்கும்.

காங்கிரஸ் தனக்கு ஒரு எதிர்க் கட்சியைத் தானே உண்டாக்கிக் கொள்ள முடியுமா? காங்கிரஸினுடைய காரியங்களில் தவறு காண்பவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து எதிர்க் கட்சியை உண்டாக்க வேண்டும்.

இதற்குத் தைரியம் வேண்டும்; பொறுமை வேண்டும்; உறுதி வேண்டும்.

பிரிட்டிஷ் ஆதிக்கத்தை எதிர்த்த காங்கிரஸ்காரர்களுடைய தைரியம், பொறுமை, உறுதி இந்தக் குண விசேஷங்களைப் பெற்றவர்கள்தான் காங்கிரஸ் கட்சியை எதிர்க்க முடியும்.

கிளிப்பிள்ளைகளைப் போல் காங்கிரஸ் கொள்கைகளையே சொல்லிக் கொண்டு, வெறும் வாயை மெல்லுகிறவர்களால் ஒன்றும் செய்ய முடியாது!

ஈ. வே. ரா. வின் விளக்கம்

வாழ்க்கையில் பல அதிசயங்கள் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன! இப்படிப்பட்ட அதிசய நிகழ்ச்சிகளைக் காணும்போது நல்லவர்கள் "ஆண்டவன் திருவுள்ளம் அப்படி" என்பார்கள்; அல்லது "அவன் லீலை" என்பார்கள்.

அவன் திருவுள்ளம் என்றோ, அவன் லீலா விநோதம் என்றோ கருதும்படியான நிகழ்ச்சியொன்று சமீபத்தில் நிகழ்ந்தது. இப்படி நாம் சொன்ன அளவிலேயே, பலருக்குத் திரு ஈ.வே. ராமசாமிப் பெரியாரின் 78-வது பிறந்த நாள் விழாவுக்குக் குன்றக்குடி அடிகளார் தலைமை வகித்த நிகழ்ச்சிதான் நினைவுக்கு வரும்! ஆனால் நாம் அதைக் குறிப்பிடவில்லை.

வட சென்னையில் இரண்டு வாரங்களுக்கு முன்பு ராஜாஜி தமிழ்ப் பெருமக்களை எச்சரிக்கை செய்தார். "திரு ஈ. வே. ரா. நாஸ்திகர் என்று எண்ணிக் கொண்டிருக்காதீர்கள். அவர் பிரசாரம், இயக்கம் எல்லாம் வெற்றி பெற வேண்டும் என்று தினமும் கடவுளை வேண்டிக் கொண்டுதான் வருகிறார். அதனால் அவர் செய்யும் பிரசாரத்தைப் பற்றி விவாதித்துக் கொண்டு பொழுதை வீணாகக் கழித்து, நீங்கள் கடவுளை வணங்காமற் போய் விட்டீர்களானால் நீங்கள்தான் நாஸ்திகராகிப் போவீர்கள்!" என்றார்.

ராஜாஜி கூறியது முற்றிலும் உண்மை என்பது இப்போது ஊர்ஜிதமாகிவிட்டது. திரு பெரியாரே அதை ஊர்ஜிதம் செய்துவிட்டார். நாம் கடவுள் இல்லை என்று ஒரு போதும் சொல்லவே இல்லை என்றும் ஹிந்து மதத்தில் உள்ள பல தெய்வ வழிபாட்டைத்தான் தம்மால் அங்கீகரிக்க முடியவில்லை என்றும்; கிறிஸ்தவ, முஸ்லிம் மதங்களில் ஒரு தெய்வக் கொள்கைதான் நிலவுகிறது; அதனால் அந்தச் சமயங்களைத் நாம் எதிர்க்கவில்லை என்றும் தமது பிறந்த தின விழாவில் கூறியிருக்கிறார்.

ஹிந்து சமயத்தைச் சரியாகப் பெரியார் தெரிந்து கொள்ளவில்லை. வழிபாட்டுக்குத்தான் பல மூர்த்திகள் ஏற்பட்டிருக்கின்றன. பல மூர்த்தி வழிபாடு ஒரு தெய்வக் கொள்கைக்கு முரண் அல்ல. அத்வைதம் பேசிய சங்கரர்தான் கோவிந்தனையும், பார்வதியையும் பரமேசுவரனையும் பக்தியோடு பாடினார். ஒவ்வொரு சிவஸ்தலத்துக்கும் சென்று தீந்தமிழில் நெஞ்சை யுருக்கும் பக்திப் பாடல்கள் செய்த மணிவாசகப் பெருமான்தான் "ஒழிவற நிறைந்த ஒருவ போற்றி!" என்றார். மேற்கண்ட உண்மைகளை காந்திமகான் ஒரு கிறிஸ்துவப் பாதிரியாருக்கு மிக அருமையாக விளக்கிக் கூறியிருக்கிறார்.

ஈசனுடைய இலக்கணங்களைச் சொல்ல இயலாது. அதுவே ஈசனுடைய பெரிய ஒரு இலக்கணம். இலக்கணங்களுள் எண்ணிக்கையும் ஒன்று. அவன் ஏகன்; அவனே அநேகன்; காலமாவது இடமாவது எண்ணிக்கையாவது அவனைக் கட்டுப்படுத்தாது.

இல்லாத ஊருக்கு வழி!

சூயஸ் கால்வாயை இப்போது யாரும் அடைத்து விடவில்லை. அதில் போக்குவரத்து முன்னைவிட அதிகமாகவே நடைபெற்று வருகிறது. வாய்க்கால் வழியாகப் போக்குவரத்துக்குத் தடை ஏற்படும் என்று அனாவசியமாக ஒரு பீதியைக் கிளப்பி, இல்லாத ஒரு பிரச்னையை உண்டாக்கிக் கொண்டு வல்லரசுகள் கஷ்டப்பட்டு வருகிறார்கள்.

இப்போது வாய்க்கால் பிரச்னை எதுவும் இல்லை; தங்களுக்கு அவமானம் ஏற்பட்டு விட்டதே என்பதுதான் வல்லரசுகளின் பிரச்னையாகி யிருக்கிறது!

ஆகவே, இந்தப் பிரச்னையை இப்போது ஐக்கியமில்லாத ஐக்கிய நாடுகள் சபைக்கு விட்டுவிட முடிவு செய்திருக்கிறார்கள். ஐ.நா. சபையில் காஷ்மீர் பிரச்னையோடு இதுவும் ஒன்றாகச் சேர்த்துக் கட்டி வைக்கப்படலாம்.


அதுவே நல்லது. வாய்க்காலில் வழக்கம் போல் எல்லா தேசக் கப்பல்களும் செல்லும். செலுத்த வேண்டிய கட்டணங்களைத் தகராறு செய்யாமல் எகிப்து சர்க்காருக்குச் செலுத்தி வந்தால் எவ்விதத் தடையும் தடங்கலும் இல்லாமல் உலக வியாபாரம் நடைபெறும். உலகத்தில் சமாதானம் கலையாமல் எல்லாரும் அவர்களுடைய உள் நாட்டு விவகாரங்களைக் கவனிப்பார்கள்.

சமீபத்தில், சென்ற ஞாயிற்றுக் கிழமை லண்டனில் உலகப் பிரசித்தி பெற்ற கோவிலான செயிண்ட் பால் கத்தீட்ரலில் எல். ஜே. காலின்ஸ் பெரியார் ஒரு பிரசங்கம் செய்தார். அன்று ராஜாஜி கோகலே மண்டபத்தில் சொன்னதையே பாதிரியார் தமது பிரசங்கத்தில் பிரிட்டிஷ் மக்களுக்கு எடுத்துச் சொன்னார்.

"கத்தியை வீசுவதில் பயனில்லை. அதனால் தீமையே விளையும். பழைய ஏகாதிபத்திய சாம்ராஜ்ய மனப் பான்மையைக் காட்ட வேண்டாம். ஏசுநாதர் சொன்ன வழியைப் பின்பற்றுங்கள். நாஸருக்குப் பலமில்லை என்றும் உங்களுக்குப் பலம் அதிகமிருக்கிறது என்றும் எண்ணி, கர்வப்பட்டு எகிப்தை மிரட்டும் முறையைக் கைவிட்டு விடுங்கள்" என்று உபதேசித்தார்.

மொத்தத்தில், இல்லாத பிரச்னையை உண்டாக்கிக் கொண்டு அவமானப் பட்டதும், மத்திய ஆசிய மக்களுடைய வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டதும் தான் பிரிட்டிஷ் அரசாங்கம் சூயஸ் விஷயத்தை இவ்வளவு பெரிய பிரச்னையாக்கியதில் அடைந்த லாபம்!

மின்சாரத் தறிப் பிரச்னே



ராஜாஜியின் வாழ்த்து!

கோயமுத்தூரில் காந்தி மகான் பிறந்த அக்டோபர் 2-ம் தேதி நடைபெறும் கைத்தறி நெசவாளர் மகாநாட்டுக்கு ராஜாஜி பின் வரும் வாழ்த்துச் செய்தியை அனுப்பியிருக்கிறார் :—

அரசாங்கம் நூலையும் துணிகளையும் கணக்கிடுகிறார்கள். மக்களை எண்ணவில்லை. உயிர்களையல்லவோ கணக்கெடுத்துப் பார்க்க வேண்டும். நாடு என்பது ஒரு அவிபக்த குடும்பம். மின்சாரத் தறிகளைத் தோற்றுவித்தால் நெசவுத் தொழில் குடும்பங்களுக்கு ஆபத்தாகும். நெசவுக் குடும்பங்கள் மின்சாரம் உபயோகித்தால் யாரும் வேண்டாமென்று சொல்லவில்லை. வேறு முதலாளிகள் அல்லவா மின்சாரத் தறிகளை அமைக்கப் போகிறார்கள். நெசவுக்காரர்கள் பிழைப்புக்கு இது ஆபத்தாகும். அந்தக் குடும்பங்களைப் பிறகு யார் ரட்சிப்பார்கள்? தேர்தலுக்குப் பின் பார்த்துக் கொள்ளலாமென்று இந்தப் பிரச்னையை ஒத்திப் போடுவது மோசம்.

எல்லா நெசவுக்காரர்களும் ரிஜிஸ்தர் செய்து கொள்ள வேண்டும் என்கிறார்கள். விவசாயிகளையெல்லாம் ரிஜிஸ்தர் செய்து கொள்ளச் செய்ய முடியுமா? அதைப் போலவேதான் தறிக்காரர்களும்.

இந்த யோசனைகள் எல்லாம் தவறு. தறிகளுடைய எண்ணிக்கையைக் குறைத்துக் காட்டி, தேச நிர்வாகம் செய்வதற்கு இது வழி. இது என்னுடைய அபிப்பிராயம். நீங்கள் சுயமாக யோசனை செய்யுங்கள்.

ஒட்டக்கூத்தன் பாட்டு!

மயிலே, மயிலே இறகு போடு என்றால் போடுமா? வர்த்தகர்களில் தங்கள் பொறுப்பையும் கடமையையும் உணர்ந்து நியாயமாக நடந்து கொள்வோர் இருக்கிறார்கள். யுத்த காலத்திலிருந்து கறுப்பு மார்க்கெட் வியாபார ருசி கண்டவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். திடீர் திடீரென்று குறிப்பிட்ட உணவுப் பொருள்களின் விலைகள் உயருவதற்கு அத்தகையோருடைய பதுக்கல் செப்பிடு வித்தையே காரணம் என்று அதிகாரிகள் கூறுகின்றனர். அதனால்தான் விலைகள் இறங்கும்படி செய்யத் தாங்கள் கைக்கொள்ளும் முறைகள் கோரிய பலனைக் கொடுப்பதில்லையென்று சமாதானம் சொல்லுகிறார்கள்.

மூன்று வாரங்களுக்கு முன் ராஜ்ய சபையில் பேசிய இந்திய சர்க்கார் உணவு மந்திரி ஸ்ரீ அஜித் பிரஸாத் ஜெயின் ஓர் உறுதி கூறினார். "இன்னும் இரண்டு வாரங்களில் உணவுப் பொருள்களின் விலைகள் இறங்கியே தீரும். அதற்குள் வர்த்தகர்கள் உணவு தானியங்களைக் குறைந்த விலைக்கு விற்க முன்வரவில்லையெனில், அவர்கள் மிகவும் கஷ்டத்துக்கு உள்ளாக நேரிடும்" என்று எச்சரிக்கை செய்தார். 'ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்' என்ற கதையாக முடிந்திருக்கிறது. மந்திரி கூறிய கெடுவுக்கு மேல் பல நாட்கள் சென்று விட்டன. ஆனால், விலைகள் முன்னிருந்ததைக் காட்டிலும் இன்று மேலும் உயர்ந்திருக்கின்றனவேயன்றிக் குறையவில்லை!

பாரத நாட்டின் சுபிட்சத்துக்கு முதல்படியாக, வெளிநாடுகளிலிருந்து கோடிக் கணக்கான ரூபாய்கள் பெறுமானமுள்ள



'கல்கி' காந்தி ஜயந்தி மலர்

இந்தியாவின் தந்தை காந்தி மகாத்மாவின் புனித ஜன்ம தின விழா அக்டோபர் மாதம் இரண்டாம் தேதி முதல் தேசமெங்கும் கொண்டாடப் படுகிறது. உலக அரங்கில் அஹிம்சை தீபத்தை ஏற்றி வைத்த புண்ணிய புருஷரின் ஜெயந்தி விழாவை அமெரிக்கா முதல் ஆஸ்திரேலியா வரை உலக நாடுகள் முழுதும் பக்தியுடன் கொண்டாடுகிறார்கள்.

மகாத்மாஜியின் ஜன்ம விழாவை முன்னிட்டு அக்டோபர் மாதம் 7-ம் தேதி வெளியாகும் 'கல்கி' காந்தி ஜயந்தி மலராக வெளிவருகிறது. காந்திஜியின் மணிமொழிகளும், அவருடைய அருமை பெருமைகளை விளக்கும் அரிய கட்டுரைகளும், இன்னும் பல விசேஷ அம்சங்களும் தாங்கி 96 பக்கங்களுடன் வெளியாகும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.



உலகத்திலுள்ள ஜனங்கள் யாவருக்கும் போதும் படியாக சில பொருள்கள் அவசியம். உதாரணமாக ஆகாரம், துணிகளின் தேவை. பலர்களின் முயற்சிகளையும், கைத்திறனையும் ஒன்றாக்கி அத்தியாவசியமான பண்டங்களை அடைய முடிகிறது.

இன்று, பாரதத்தில், ஒவ்வொரிடத்திலும், அப்படிப்பட்ட முயற்சிகளை பிரத்தியக்ஷமாகக் காண்கிறோம். மனிதனையும், இயந்திரத்தையும் இணைத்து, ஒவ்வொரு துறையிலும் நல்ல பலன்களை அடைகிறோம்.

விவசாயத்தில், செழிப்பான விளைவுகள் பெற முன்னோரின் உபாயங்களையும் இயந்திரபந்தங்களின் சேர்க்கையையும் கையாண்டு நல்ல பலனும் ஏற்படுகிறது. லக்ஷக்கணக்கான ஜனங்களின் பொருட்டு, புராதனமான சாதனங்களையும், தொழில் நுணுக்கங்களையும் ஒன்று சேர்த்து பொருத்தி நவீன இயந்திரங்களின் சாதனைகளால், அதிகமாகவும், மேலான வஸ்திரங்களையும் உண்டாக்குகிறோம். வளர்ச்சியின் சின்னங்கள் எங்கும் காணப்படுகிறது.

இம்மாதிரி ஒன்றுபட்ட வழக்கங்களின் வளர்ச்சிக்கு மூலாதாரம் எங்கள் பெட்ரோலியம் பொருள்களின் இடைவிடா சப்ளைதான்.

ஸ்டான்வாக் – வளர்ச்சிக்கென்றே நிற்கும் பெயர்


செப்டம்பர் 28ந் தேதி முதல்
சென்னையிலும் மற்றும் தென்னாட்டெங்கும்
கல்பனாவின்
ரம்பையின்
காதல்
டைரக்ஷன்:
R.R.சந்திரன்
G H RAO

உணவுப் பொருள்கள் இறக்குமதியாவது நிற்க வேண்டுமென்று அடிக்கடி நேருஜி கூறி வந்தார். இறக்குமதியைக் கைவிட்டு நிலைமை சீர்ப்படுவதற்குப் பல வருஷங்களாயின. ஆனால், சமீபகாலமாக மறுபடியும் பர்மா, சீனா, அமெரிக்கா முதலிய நாடுகளிலிருந்து அரிசியும் கோதுமையும் இறக்குமதி செய்யும் படியான அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அப்படி யிருந்தும் அரிசி விலையும், அதை அடுத்து, மற்ற உணவுப் பொருள்களின் விலைகளும் உயர்ந்து கொண்டே போகின்றன.

போதாக் குறைக்கு, ஒன்றிரண்டு ஆண்டுகளாகப் பாரத நாட்டில் உணவு உற்பத்தி குறையத் தொடங்கியிருக்கிறது.

தற்போதைய நிலைமை மேலும் மோசமாகி விடாமல் இருப்பதற்காக, ''அரிசி, கோதுமை முதலிய மற்ற உணவுத் தானியங்களை ஏற்றுமதி செய்யக் கூடாது என்று சர்க்கார் முழுத் தடை விதித்திருக்கிறார்கள்'' என்றும் சில தினங்களுக்கு முன் இந்திய சர்க்கார் உணவு மந்திரி கூறினார். ஆனால், அதே சமயம் அரிசியிலிருந்து செய்யப்பட்ட உணவுப் பண்டங்களை ஏற்றுமதி செய்ய அதிகாரிகள் அனுமதித்திருக்கிறார்கள். அரிசியில்லாமல் அந்தப் பண்டங்களை உற்பத்தி செய்ய முடியுமா? இவ்விதமாக வியாபாரிகளின் உணவுதானியப் பதுக்கலும், சர்க்காரின் முன்னுக்குப் பின் முரணான நடவடிக்கைகளும் இறுதியில் ஏழை மக்களின் தலையில் விடிகின்றன. விலைவாசிகள் குறைவதற்கும் போதிய உணவு தானியங்கள் சர்க்கார் வசம் இருப்பதாகவும் விலைவாசி சீக்கிரமே இறங்கி விடுமென்றும் மந்திரிகள் அடிக்கடி கூறிவருகிறார்கள். சட்டியில் இருந்தும் அகப்பையில் வராமலிருக்கும் காரணம் தான் தெரியவில்லை! பொது மக்களின் கஷ்டம் ஒரு புறமிருக்க, ஏற்கெனவே அடிப்படை சர்க்கார் சிப்பந்திகள் சம்பளம் போதவில்லை என்று முறையிட்டு வரும் இச்சமயத்தில், விலைவாசிகளின் உயர்வைத் தடுக்கச் சர்க்கார் முன் வராவிடில் மேற்படி சிப்பந்திகளின் நிலைமை இன்னும் மோசமாகிவிடும் அல்லவா?

இலக்கியச் செல்வம்

ஆங்கிலம் படித்தவரிடையே தமிழ் என்றால் ஒரு அலட்சியம் ஒரு காலத்திலே தமிழ் நாட்டில் நிலவி வந்தது. இந்த வியாதியைப் போக்கித் தமிழ்த்தாயின் வெற்றிக் கொடியை ஆங்கில மோகம் கொண்டவரிடை நிலை நாட்டிய பெருமை ரஸிகமணி டி. கே. சி. அவர்களைச் சாரும். அவர்களுக்கு அடுத்தாற்போல் ரஸிகமணியின் அடிச்சுவட்டிலே இப் பணியைப் புரிந்து வருபவர் ஆங்கிலப் பேராசிரியர் அ. சீநிவாசராகவன் அவர்கள்.

தற்சமயம் பேராசிரியர் அ. சீநிவாசராகவன் தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரியில் பிரின்ஸிபாலாகப் பணியாற்றி வருகிறார். ஆங்கிலப் பேராசிரியராகப் பணிபுரிந்து வருகிறார். இருப்பினும் ''தமிழ் பேசா நாளெல்லாம் பிறவா நாளே'' என்ற உயரிய கருத்துக்கொண்டு தமிழ்த் தொண்டு செய்து வருகிறார். முப்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ்ச் சங்கங்கள் கூடும் இடங்களில் எல்லாம் அ. சீநிவாசராகவன் போய்ச் சேர்ந்து உற்சாகமாகப் பங்கெடுத்துக் கொள்வார். அங்கு கருத்துக்கினிய அரிய செந்தமிழ்ச் சொற்பொழிவு நிகழ்த்தி ''இவ்வளவு நல்ல தமிழ் பேசுபவர் ஆங்கிலப் பேராசிரியராக இருக்கவே முடியாது'' என்ற கெட்ட பெயர் சம்பாதித்துக் கொண்டு வந்திருக்கிறார்! ஆங்கிலப் பேராசிரியர்கள் கூடுமிடங்களிலே அ. சீநிவாசராகவன் பெற்றுள்ள பெயரும் புகழும் பார்க்கும்போது இவரே முதல் ஆங்கிலப் பேராசிரியர் என்பது புலனாகும். இவரது ஆங்கிலப் புலமையினாலே சென்னை சர்வகலாசாலையின் சிண்டிகேட் சபையில் மிக முக்கியமான அங்கம் வகிக்கிறார்.



பேராசிரியர் அ. சீநிவாசராகவன்

இப்படி ஆங்கிலப் புலமையும் தமிழ்ப் புலமையும் பெற்ற பேராசிரியர் உலக இலக்கியங்களின் அருஞ் செல்வங்களை யெல்லாம் நீந் தமிழில் வாரந்தோறும் 'கல்கி' வாசகர்களுக்கு நல்கப் போகிறார் என்னும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


ரஸிகமணி டி. கே. சி. அவர்கள் தமிழின் பெருமை மற்ற இலக்கியங்களைப் பார்த்தால் தான் தெரியவரும் என்று கூறுவார். அம்முறையிலேயே விளக்குவார். ரஸிகமணியின் இலக்கியச் சோலையிலே வளர்ந்தவர் பேராசிரியர் அ. சீநிவாசராகவன். ரஸிகமணியைப் போலவே தமிழையும் ஆங்கிலத்தையும் ஒப்பிட்டுப் பேசும் ஆற்றல் படைத்தவர். அவர் எழுதும் ''இலக்கியச் செல்வம்'' என்ற கட்டுரைகளை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறோம். இந்தக் கட்டுரைத் தொடர் அக்டோபர் 7ம் தேதி 'கல்கி' காந்தி ஜயந்தி மலரில் ஆரம்பமாகிறது.


மூன்றெழுத்து வளர்த்த



4

வெள்ளி பஸ் ஒன்று துள்ளிக் குதித்து வந்தது. லாரியும் ஜீப்பும் கதகளி நடனம் புரிந்தன. பிளிமத்கார் 'பிரமாதம்! பிரமாதம்!' என்றது. சவர்லே சீட்டி அடித்து சினிமாப் பாட்டு பாடியது. காடிலாக்கும், பியூக்கும் கைகோத்துக் கொண்டு தெம்மாங்கு பாடின. பர்கூஸன் நிலத்தில் நில்லாமல் குதித்தது. மதுரை நடுச் சாலையில் "தமிழ் நாட்டில் தொழில் வளம் பெருக்குவோம்" என்று 'கோரஸ்' பாடிக் கொண்டு பெட்போர்ட், பார்கோ பஸ்கள் ஓடின. "ஆழ உழுது உணவைப் பெருக்குவோம்" என்றது டிராக்டர். "என்ன விசேஷம்?" என்று கேட்டது சென்னையில் இருந்து வந்த ஒரு ஸ்டேஷன் வாகன். "நான் போய் வருகிறேன்!" என்று சொல்லி விட்டு 'விர்'ரென்று புறப்பட்டது ஒரு டி. வி. எஸ். லாரி.





தமிழ் நாட்டுப் பஸ் பிரயாணிகள் எல்லாரும் சேர்ந்து "பஸ்களில் சிறந்தது டி. வி. எஸ். பஸ்தான்" என்று முடிவு கூறியதைக் கேட்டுத்தான் டி. வி. எஸ். தொழிற்சாலையில் உள்ள மோட்டார் வாகனங்கள் யாவும் இவ்வாறு குதூகலப்பட்டன.

டி. வி. எஸ். பஸ்களுக்கு வந்த பெருமையைப் பற்றி மற்ற பஸ்கள் அவ்வளவாகப் பொறாமைப் படவில்லை. பாரத நாட்டுப் பஸ் லாரி போக்குவரத்துக்களுக்குள்ளே சிறப்பு வாய்ந்த டி. வி. எஸ்.க்கு இந்தக் கௌரவம் வந்ததைக் குறித்து எல்லா பஸ்களும் மகிழ்ந்தன.



** ** ** **


மோட்டார் தொழிலுக்கும் எனக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை நேயர்கள் அறிந்திருக்க மாட்டார்கள். ஏனென்றால் இந்த விஷயம் எனக்கே சில காலத்துக்கு முன்புதான் தெரியவந்தது. என் ஜாதகத்தைப் பரிசீலனை செய்த ஒருவர் ஏதேதோ வாய்க்குள் முணுமுணுத்து விட்டு, 'அடாடா!' என்று கையை உதறினார். பிறகு "இந்த ஜாதகன் ஒரு மணி நேரம் முன்னதாய்ப் பிறந்திருந்தால் பிரசித்தி பெற்ற போர்டு மோட்டார் தொழில் ஸ்தாபனத்துக்கே தலைவராக இருந்திருக்க வேண்டும்!" என்றார். அது முதல் அமெரிக்காவுக்குப் போய் என்னுடைய தொழில் ஸ்தாபனத்தை — அதாவது ஒரு மணி நேர அவசரத்தினால் இழந்து விட்ட போர்டு மோட்டார் தொழில் ஸ்தாபனத்தைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் என் மனத்திலிருந்தது. அந்த ஆவல் அமெரிக்காவுக்குப் போகாமலே தீர்ந்து விட்டது. மதுரையில் மூன்றெழுத்து வளர்த்து வரும் டி. வி. எஸ். மோட்டார் தொழில் ஸ்தாபனத்தைப் பார்த்தவுடனேயே என் ஆசை பறந்துபோய் விட்டது.

தற்சமயம் டி. வி. எஸ். தொழில் ஸ்தாபனத்தின் ஆதரவில் 308 பஸ்களும், 53 லாரிகளும் ஓடுகின்றன. பஸ்கள் மட்டும் மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், கோட்டயம் ஆகிய இடங்களில் சுமார் நூற்று ஒன்பது வழிகளில் ஓடிக்கொண்டிருக்கின்றன. நாள் ஒன்றுக்கு 41,268 மைல்கள் ஓடுகின்றன. பல ஆயிரக் கணக்கான மக்கள் அதில் பிரயாணம் செய்கிறார்கள். குறித்த நேரத்தில் குறித்த இடத்திலிருந்து புறப்பட்டுச் சேரவேண்டிய இடத்துக்குக் காலம் தவறாமல் போய்ச் சேருகிறார்கள்.

லாரிகளும் முப்பத்து இரண்டு பாதைகளில் ஓடுகின்றன. சென்னை நகரிலும், சென்னைக்குத் தெற்கில் உள்ள ஜில்லாக்களிலும், திருவாங்கூர் கொச்சியிலும், மைசூர் ஆந்திரா ஆகிய




ரதி.



மோட்டார் தொழில்





இடங்களிலும் ஓடுகின்றன. தினம் ஒன்றுக்கு 9,484 மைல்கள் ஓடுகின்றன. இந்தியாவிலேயே மிகச் சிறந்த முறையில் பார்சல் லாரிகள் ஓட்டுபவர்கள் டி. வி. எஸ். மோட்டார் தொழில் ஸ்தாபனத்தார்தான் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

டி. வி. எஸ். பஸ்களில் பிரயாணம் செய்து பார்த்த பிறகு எட்டு மந்திரிகள் இருந்து ராஜ்யபரிபாலனம் செய்யும் சென்னை நகரில் ஓடிக்கொண்டிருக்கும் சர்க்கார் பஸ்களைப் பற்றி நினைக்காமல் இருக்க முடியாது.

சென்னை நகரில் ஒவ்வொரு பஸ் நிற்கும் இடங்களிலும் மக்கள் பஸ்ஸை எதிர் பார்த்து நிற்பதும், நகரின் பல இடங்களில் பஸ்கள் நடுச் சாலைகளில் ஓடாமல் பழுதாகி நிற்கும் அலங்கோலமும் ஞாபகத்துக்கு வராமல் போகாது. அப்படி வந்தால், ஒரே சமயத்தில் ஒன்றன்பின் ஒன்றாக எல்லா பஸ்களும் வந்து நிற்கும் வேடிக்கையும் ஞாபகம் வரத்தான் செய்யும். இதையெல்லாம் எண்ணிப் பார்த்தபோது 'இந்த சர்க்கார்' பஸ்களை 'நல்ல முறையில் நடத்த முடியாதா?' என்ற கேள்வி மனத்தில் எழுந்தது. அந்தக் கேள்வியை டி.வி.எஸ். தொழிலாளி ஒருவரிடம் கேட்டு வைத்தேன்.





பகீரதன்

'' அதென்ன அப்படிக் கேட்கிறீர்கள்? நல்ல முறையில் நடத்தலாம்! மக்கள் மனம் குளிரும்படியாகவும் லாபகரமாகவும் நடத்தலாம்'' என்றார் அந்த டி. வி. எஸ். தொழிலாளி.

'' அது எப்படி?'' என்று ஆவலோடு கேட்டேன்.

'' நாங்கள் செய்வதுபோல் கடமை உணர்ச்சியுடன் தொழில் செய்ய வேண்டும்.''

'' நீங்கள் என்ன அப்படிச் செய்து விடுகிறீர்கள்?''


'' பஸ்களை அன்றாடம் ஓட்டும் டிரைவர்கள் அந்த அந்த பஸ்ஸில் என்ன குறை இருக்கிறது என்பதைப் பற்றித் தொழிற்சாலையில் உள்ள புத்தகத்தில் எழுதிவிட வேண்டும். தொழிற்சாலையில் உள்ளவர்கள் அன்றே அந்தக் குறைகளைக் கவனித்து விடுவார்கள். டிரைவர்களிடமிருந்து பஸ்ஸைப் பற்றி எந்தக் குறையும் வராவிட்டாலும் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை நாங்களே ஒவ்வொரு பஸ்ஸையும்அதன் இயந்திரங்களையும் இதர பாகங்களையும் கவனிப்போம். ஏதேனும் குறைகள் கண்டு பிடிக்கப்பட்டால் அந்த பஸ் டிரைவர் தம் கடமையைச் செய்யவில்லைஎன்பதற்காகக் கண்டிக்கப்படுவார்!''






'' சென்னையில் அப்படி இல்லையோ?''

'' அது பெரிய சமுத்திரம். தொழிற்சாலையில் உள்ள இன்ஜினியருக்கும் டிரைவருக்கும் சரியான தொடர்பு கிடையாது. அதிகாரிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் இடையே சரியான சூழ்நிலை கிடையாது. பிரயாணிகளுக்கும் கண்டக்டர்களுக்கும் மத்தியில் நல்ல ஒற்றுமை கிடையாது. மக்களுக்கும் மந்திரிகளுக்கும் சம்பந்தம் கிடையாது.''



'' பேஷ், பேஷ்! அப்புறம்?''

''அப்புறம் என்ன? டிரைவர்கள் பஸ்ஸைப் பற்றிய பழுதுக் குறிப்புகளையும் எழுதுவது இல்லை. அப்படி எழுதினாலும் அவை சரியாகப் பழுது பார்க்கப் படுவதில்லை. ஒருவருக்கும் பொறுப்பு உணர்ச்சி இல்லை. டிரைவர்களைக் கண்டிக்கும் அதிகாரம் தொழிற்சாலை இன்ஜினியர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை. ஏதோ ஆண்டவன் புண்ணியத்தில் சர்க்கார் பஸ்கள் ஓடுகின்றன.''




'' அது எப்படியோ போகட்டும். இங்குள்ள தொழிலாளர்களுக்கெல்லாம் சம்பளம் எப்படி?''

'' சர்க்கார் கொடுப்பதை' விட அதிகமாகவே கொடுக்கிறார்கள். 'பிராவிடண்ட்' நிதி, வீடு வசதிகள் எல்லாம்

உண்டு. வைத்திய வசதிகளுக்கும் குறைவில்லை. அத்துடன் மாதம் நூற்று ஐம்பது ரூபாய் சம்பளத்துக்குக் குறைவாக வருமான முள்ளவர்களின் பிள்ளைகளுக்கு எஸ். எஸ். எல். ஸி. வரையில் படிப்புக்கு வேண்டிய செலவுகளை டி. வி. எஸ். ஸ்தாபனமே கொடுத்து வருகிறது. பத்து வருஷங்கள் வேலை செய்த ஒவ்வொரு தொழிலாளிக்கும் ஒரு கடிகாரம் கொடுத்துக் கௌரவிக்கிறார்கள். இதுவரை ஆயிரம் பேருக்குமேல் பத்து வருஷப் பரிசுக் கடிகாரம் பெற்றிருக்கிறார்கள். இதற்காக மட்டும் டி.வி.எஸ். ஸ்தாபனம் ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் செலவு செய்திருக்கிறது.''




டி. வி. எஸ். தொழிலதிபர்கள்
1. ஸ்ரீ டி. எஸ். கிருஷ்ணா



'' அடே அப்பா! ஒரு லட்சம் ரூபாய்க்குக் கடிகாரமே வாங்கி வழங்கி இருக்கிறார்களா? ரொம்பவும் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. அப்படியானால் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் இங்கேயே நீடித்து வேலை செய்து வருகிறார்கள் என்று தெரிகிறது'' என்றேன்.

'' ஆமாம்; இல்லையென்றால் ஆயிரம் பேர் எப்படிக் கடிகாரம் வாங்கிக் கொள்ள முடியும்? கடுமையான குற்றம் செய்தால் தவிர தொழிலாளர்கள் வேலையை விட்டு நீக்கப்பட மாட்டார்கள். அது கூட எங்கள் தொழிற் சங்கத்தின் மூலமே நடைபெறுகிறது.''




2. ஸ்ரீ டி. எஸ். சந்தானம்
4. ஸ்ரீ ஆர். ரத்தினம்

''தொழிற் சங்கமா?''

''ஆமாம். நாங்கள் ஒரு தொழிற் சங்கம் வைத்திருக்கிறோம். அதற்குச் சொந்தமாக ஒரு கட்டடம் கூட இருக்கிறது. இந்தச் சங்கத்தில் டி. வி. எஸ். தொழிலாளர்கள் எல்லாரும் ஒன்று திரண்டு நிற்கிறோம். எங்கள் குறைகளையும், நாங்கள் செய்யும் தவறுகளையும் தொழிற் சங்கத்தின் மூலமே தீர்த்துக்கொள்கிறோம். தொழிலாளருக்கும் முதலாளிகளுக்கும் இடையே நல்ல உறவு நிலை பெற்று வருகிறது. இன்னும் எங்களுக்காகப் பொழுது போக்குக்கூடம், கூட்டுறவுப் பண்டகசாலை, கூட்டுறவு பாங்கு எல்லாமே இருக்கின்றன.''

3. ஸ்ரீ டி. எஸ். சீனிவாசன்
5. ஸ்ரீ ஆர். ராமச்சந்திரன்



''தொழிற் சங்கத் தலைவர், காரியதரிசி இவர்களை எப்படித் தேர்ந்தெடுக்கிறீர்கள்?''

''ஓட்டு முறைதான். இதில் எல்லாம் நாங்கள் வைத்தது தான் சட்டம்.''

''உங்களுக்கு உங்கள் முதலாளிகளிடம் எந்தவிதமான குறையும் இடையாதோ!''



''எந்த நியாயமான வேண்டுகோளுக்கும் எங்கள் முதலாளிகள் இணங்கி விடுவார்கள். எங்கள் வேண்டுகோளுக்கு மேலேயே தாராளமாகக் கொடுத்து வருகிறார்கள்.''

''இதர தொழிற் சங்கங்களைப்போல், உங்கள் சங்கத்தைப் பற்றி வெளியில் யாருக்கும் தெரியவில்லையே!''



கோவை இன்கம்டாக்ஸ் ஆபீஸர் ஸ்ரீ எஸ். ராமஸ்வாமி அய்யர் பி. காம். அவர்கள் குமாரி சௌ. லலிதாவுக்கும் கல்கத்தா மெஸர்ஸ் அல்பெஸ்டாஸ் சிமெண்ட் (பிரைவேட்) லிமிடெட்டைச் சார்ந்த ரெஸ்ஸிவி ஆர்.எஸ். கிருஷ்ணன் அவர்களுக்கும் கோவையில் மே மாதத்தில் திருமணம் நடைபெற்றது.

வாழ்க, மணமக்கள் !

''நாங்கள் வீண் சண்டை போடுவதில்லை. எங்கள் சங்கம் எங்கள் நன்மைக்காகவே பாடுபடுகிறது. நாங்களும் வாழவேணும்; எங்கள் தொழில் ஸ்தாபனமும் வளரவேணும் என்று நாங்கள் நினைத்துவருகிறோம்!'' என்றார் அந்தத் தொழிலாளி. அவர் அணிந்திருந்த 'டிப்டாப்'பான உடையை ஒருதரம் உற்றுப் பார்த்து விட்டு ''இதுகூட டி. வி. எஸ். ஸ்தாபனம் கொடுப்பதுதானா? மிகச் சுத்தமாக இருக்கிறதே!'' என்றேன்.

''சுத்தமாக இருப்பதற்கு என்ன? வருஷத்துக்கு இரண்டு 'செட்' உடைகள் கொடுக்கிறார்கள். அவைகள் வருஷா வருஷம் சேர்ந்து இப்பொழுது எங்களிடம் நாலு ஐந்து 'செட்' உடைகள் இருக்கின்றன'' என்றார்.

அப்பொழுது எனக்கு நமது சர்க்கார் பஸ் தொழிலாளர்கள் பல இடங்களில் ஒட்டுப் போட்ட உடைகள் அணிந்து நிற்கும் பரிதாபக் காட்சிதான் நினைவுக்கு வந்தது!

டி. வி. எஸ். பஸ் போகும் சாலைகளில் இரும்பு ஆணிகளும், மாடு, குதிரை லாடங்களும் இல்லாமல் இருக்கப் பார்த்துக் கொள்கிறார்களாம். லாடமோ, ஆணியோ பஸ் லாரி எதுவானாலும் அதன் சக்கரத்தில் குத்தி விட்டால் காற்று இறங்கி, வண்டிகள் ஓட முடியாமல் போய் விடுமல்லவா? அப்புறம் குறித்த நேரத்தில் குறித்த இடத்துக்கு லாரிகளோ பஸ்களோ செல்ல முடியாதல்லவா? அதற்காக அமெரிக்காவில் இருந்து ரோடுகளில் உள்ள இரும்பைப் பொறுக்கும் இயந்திரம் ஒன்றை வரவழைத்திருக்கிறார்கள். இந்தக் காந்தசக்தி யந்திரத்தை மோட்டாரில் பொருத்திவிட்டுச் சாலையில் ஓட்டினால் சாலையில் கிடக்கும் பழைய இரும்பு ஆணிகள், லாடங்கள் எல்லாம் அதன் காந்த சக்தியினால் இழுத்துக் கொண்டு விடுகின்றன. இவ்வாறு செய்வதால் எண்பது சதவிகிதம் மோட்டார் டயருக்கு ஏற்படும் அபாயத்தைத் தடுத்துக் கொள்கிறார்கள். இதனால் பல லட்சம் ரூபாய்களையும் மிச்சப் படுத்துகிறார்கள்.

டிரைவர்கள் பஸ்ஸையோ லாரியையோ நினைத்தபடி எல்லாம் ஓட்ட முடியாமல் இருப்பதற்காக 'டெக்கோகிராப்' என்ற கருவியை ஒவ்வொரு காரிலும் வைத்திருக்கிறார்கள். வண்டி மணிக்கு எத்தனை மைல் வேகத்தில் ஓடியது, எங்கெங்கெல்லாம் நின்றது என்பதை அது கண்டுபிடித்துக் காட்டி விடுகிறது.


இத்துடன் பொது மக்களுடைய நலனிலும் அவர்கள் உயிரிலும் அதிக அக்கறை கொண்டிருக்கிறார்கள். சர்க்கார் செய்ய வேண்டிய காரியங்களை டி. வி. எஸ். ஸ்தாபனத்தார் மிகுந்த அக்கறையுடன் செய்து வருகிறார்கள். மக்களுக்குச் சாலையின் போக்குவரத்து விதிகளைப் பற்றியும், அவர்கள் சாலை விதிகளை எவ்வாறு கடைப்பிடிக்கவேண்டும் என்பதைப் பற்றியும் கூறி வருகிறார்கள்.

தெரு முனையில் நின்று பிரசாரம் செய்கிறார்கள். பள்ளிப் பிள்ளைகளை அழைத்து வந்து சாலைகளில் எப்படி நடக்கவேண்டும் என்று சொல்லிக் கொடுக்கிறார்கள். பொது மக்களைக் கூட்டிவைத்துச் சாலை விதிகளை மீறுவதால் ஏற்படும் கஷ்டங்களை நாடகமாக நடித்து அவர்கள் மனத்தில் பதியும்படி காட்டுகிறார்கள். இந்தப் பிரசாரத்துக்காக டி. வி. எஸ். ஸ்தாபனம் ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்து வருகிறது.

டி. வி. எஸ். ஸ்தாபனம் மக்களுக்குச் சாலை விதிகளைப் போதிப்பதில் எடுத்துக் கொண்டிருக்கும் சிரத்தைக்காக அவர்களுக்குத் தமிழ்ப் பெரு மக்கள் சார்பாக நன்றியும் வணக்கமும் தெரிவித்துக் கொண்டேன்.

இவ்வாறு டி.வி.எஸ். ஸ்தாபனம் செய்து வரும் அதிசயங்களைப் பற்றிச் சொல்லிக் கொண்டே போகலாம். இருந்தாலும் அதன் அதிபர்களின் முதல்வர் ஸ்ரீ டி. எஸ். ராஜம் அவர்களின் திறமையைப் பற்றியும், அவர் சகோதரர்களின் ஆற்றலைப்பற்றியும் கூறிவிட்டு இந்தக் கட்டுரையை முடிக்க விரும்புகிறேன்.

''வலது கையினால் கொடுப்பது இடது கைக்குத் தெரியக் கூடாது'' என்று சொல்வது



உண்டு. இது வலது கை வழங்கும் தர்மத்தை இடது கை தடை செய்யப் போகிறதே என்ற பயத்துக்காக அல்ல. பெயருக்கும் புகழுக்கும் விளம்பரத்துக்கும் ஆசைப்படாமல் செய்யும் தர்மமே உயர்ந்த தர்மம் என்பதற்காகத் தான். இவ்வாறு விளம்பர ஆசை இல்லாமல் சிறப்பான தர்மம் செய்பவர்களில் ஒருவர் ஸ்ரீ டி. எஸ். ராஜம். தர்மத்தைத் தொழில் மூலமாகவே செய்து வருகிறார். பல பொது ஸ்தாபனங்களுக்கும் மிகத் தாராளமாக நன்கொடை அளித்து உதவி வருகிறார்.

அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய இடங்களில் சுற்றுப் பிரயாணம் செய்து நல்ல தொழில் அனுபவம் பெற்றவர். அந்த அனுபவத்தை உலகம் பார்த்து வியக்கும்படி காரியங்கள் செய்துவருகிறவர். மதுரை, ராமநாத

புரம் வர்த்தக சங்கத்தின் தலைவராக இருந்து வர்த்தகத் துறைக்குத் தம்மாலான தொண்டைச் சிறப்புடன் செய்து வருகிறார்.

அவருக்கு மணி என்றால் மணிதான். இந்த நேரத்தில் இந்தக் காரியம் நடக்க வேண்டும் என்றால் நடந்தே ஆக வேண்டும். அதற்கு இமய மலையே தடையாக இருந்தாலும் அதைத் தகர்த்து எறிந்து விடுவார். இப்படிப்பட்ட அபாரமான ஆற்றல் படைத்தவராக இருந்தாலும் பார்ப்பதற்கு மிகவும் சாதுவாகவே தோற்ற மளிப்பார். பிறர் பார்த்து வியக்கும் வண்ணம்செய்யும் அவர் காரியங்களிலும் சிறிதும் பதற்றம் இருக்காது.



டி. வி. எஸ். தொழிற் சங்கக் காரியதரிசி ஸ்ரீ பொம்மையா.

தாம் மேற்கொண்டிருக்கும் மோட்டார் தொழிலை ஒரு பொதுநலப் பணியாக, தேச சேவையாக எண்ணிப் பணியாற்றி வருகிறார்.

இவ்வாறு மிகவும் அடக்கமாக மக்களுக்குத் தொண்டாற்றி வரும் தொழிலதிபர் ஸ்ரீ டி. எஸ். ராஜம் அவர்கள்தான் நமது இந்த இதழ் அட்டையை அலங்கரிக்கிறார்.

அவருடைய சகோதரர்களான ஸ்ரீ டி. எஸ். கிருஷ்ணா, ஸ்ரீ டி. எஸ். சந்தானம், ஸ்ரீ டி. எஸ். சீனிவாசன் ஆகியவர்களும் அவருடைய புதல்வர்கள் ஸ்ரீ ஆர். ரத்தினம், ஸ்ரீ ஆர். ராமச்சந்திரன் இருவரும் அவருக்குத் துணையாக நின்று டி. வி. எஸ். ஸ்தாபனத்தின் வளர்ச்சிக்கும் புகழுக்கும் அரும்பாடு பட்டு வருகிறார்கள்.

எல்லாருமே தாங்கள் மேற்கொண்டிருக்கும் தொழிலைப் பற்றிய நுணுக்கங்களை உணர்ந்தவர்கள். அதற்கான பட்டமும் அனுபவமும் பெற்றவர்கள். அவர்களுடன் டி. வி. எஸ். தொழிற்சாலைகளிலும், காரியாலயங்களிலும் தொண்டாற்றுபவர்களும் நல்ல திறமைசாலிகள். ஆனாலும், தொழிற்சாலையிலும் காரியாலயத்திலும் இருக்கும் கண்டிப்பையும், அதே சமயத்தில் தொழிலாளர்களுக்கும், குமாஸ்தாக்களுக்கும், இதர உத்தியோகஸ்தர்களுக்கும் டி. வி. எஸ். தொழிலதிபர்கள் அளித்து வரும் சலுகையையும் பார்க்கும்போது இப்படிப்பட்ட தொழிலதிபர்களே நமது தேசத்துக்குத் தேவை என்று கூறத் தோன்றுகிறது.

சாதாரணத் தொழிலாளியாக டி. வி. எஸ். தொழிற்சாலைக்குள் வந்தவர்கள் சிலர் இரண்டாயிரம் ரூபாய் சம்பளம் வாங்கும் அளவுக்கு உயர்ந்திருக்கிறார்கள் என்றால் திறமை ஒன்றுக்கே டி. வி. எஸ். ஸ்தாபனத்தின் அதிபர்கள் மதிப்புத் தருகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறதல்லவா?

இந்தத் தொழில் ஸ்தாபனத்தைப் பணம் படைத்த செல்வர்கள் ஒரு தடவை நன்றாகப் பார்த்து விஷயத்தைப் புரிந்து கொண்டு விட்டார்களானால், பிறகு அவர்களுடைய உள்ளம் பணம் சம்பாதிப்பது. அதைச் சம்பாதிக்க உதவும் தொழிலாளர்களுக்குத் தாராளமாக வழங்குவதுதான் என்பதைப் புரிந்துகொண்டு விடும் என்பதில் ஐயமில்லை.

"நாடு தொழில் வளம் பெற வேண்டும். தொழிலாளர்களின் வாழ்க்கை வசதிகள் பெருக வேண்டும்" என்று எத்தனையோ நாளாய்ப் படித்தும் எழுதியும் வந்த எனக்கு மதுரையம்பதியில் மூன்றெழுத்து வளர்த்து வரும் மோட்டார் தொழிலின் பெருமையைப் பார்த்தபோது தொழில் வளம் பெற்று, தொழிலாளர்களின் நலன்கள் பெருகியதாகவே தோன்றியது! இந்தப் பெரிய பாரத நாட்டோடு மதுரையில் உள்ள டி. வி. எஸ். தொழில் ஸ்தாபனத்தை ஒப்பிட்டுப் பார்த்தால் தொழில் வளத்தின் சிறு பகுதிதான் அது என்று எல்லாரும் சொல்லுவார்கள். அந்தச் சிறு பகுதியைப் பார்த்ததிலிருந்தே தொழில் வளம் பெற்று, தொழிலாளர் நலன் பெருகினால் நாடு எவ்வளவு ஆனந்தமாய், அற்புதமாய் இருக்கும் என்பதைக் கற்பனை செய்து கொள்ளுதல் சாத்தியமாகிறது.

பிரார்த்தனைக் கூட்டங்கள்

— கிண்டி ராஜபவனம் —

காந்தி மண்டபத்தில்

செப்டம்பர் 28-ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5-30 மணிக்கு

நாகஸ்வர இன்னிசை; தக்கர்பாபா வித்தியாலய மாணவர்களால் நூற்பு யக்ஞம் துதி கீதங்கள்; கீதை பாராயணம்; ராமநாம பஜனை

அக்டோபர் 2-ம் தேதி காந்தி ஜயந்தியன்று

ஸ்ரீமதி [illegible] கீர்த்தனபதி ஜானகிபாய் அவர்களின் "நந்தன் சரித்திரம்" காலட்சேபம் விரிவான முறையில் மாலை 5-30 முதல் 7-30 மணி வரை நடைபெறும்

பிரார்த்தனைக் கூட்டங்களில் ராஜாஜி அவர்கள் கலந்து கொள்வார்கள்

தமிழகத்தின் தனிப்பெரும் வாத்தியம்

ஏழுநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னால் தஞ்சைப் பெரிய கோயிலின் முன்பு ஓர் அதிசய சம்பவம் நிகழ்ந்தது. பிரகதீசுவரர் ஆலயத்தின் வெளிப் பிராகாரத்தில் தேன் அருவியாகப் பொழிவது போன்ற ஓர் இனிய நாதம் எழுந்தது. கர்நாடக சுத்தமான நாட்டையும், மல்லாரியும் நடபைரவியும் ஆலயத்தையும் அதன் சுற்றுப் புறத்தையும் நாதவெள்ளத்தில் ஆழ்த்தின. கோயிலின் விக்கிரகங்களும், அறுபத்து மூவர் சிலைகளும், (செவிட்டு சண்டிகேசுவரர் உள்பட) அந்த இனிய நாதத்தில் லயித்துச் சிரக்கம்பம் செய்தன.

ஊர் பெயர் தெரியாத தெய்விக அருள் பெற்ற நாககர வித்துவான் ஒருவர் அன்று கர்நாடக சங்கீதத்துக்கே உரிய ராஜ வாத்தியத்தைக் கையிலே எடுத்தார்; ஆண்டவன் சந்நிதியிலே அரங்கேற்றம் செய்யத் தொடங்கினர். தோடியும் சங்கராபரணமும், காம்போதியும், கல்யாணியும், பைரவியும், பூர்வி கல்யாணியும், நாட்டையும், மல்லாரியும், பிலகரியும், பூபாளமும், தன்யாசியும், ஸாவேரியும் அந்த அபூர்வ வாத்தியத்திலிருந்து அற்புத உருவங்களுடன் வெளிப்பட்டன. பிரகதீசுவரர் ஆனந்த பரவசமுற்றார். நாயன்மார்கள் மெய்சிலிர்த்தார்கள். பஞ்சபூதங்கள் பரவசமுற்றன. அண்டசராசரங்கள் அசைவற்று நின்றன!

அந்த ஆதி நாகஸ்வர வித்துவான் முதன் முறையாகக் கையாண்ட வாத்தியத்துக்குப் பாரி என்று பெயர் வழங்கலாயிற்று. பாரி வாத்தியமே பிற்காலத்தில் திமிரி வாத்தியம் என்று பெயர் பெற்றது. பாரி என்றும் திமிரி என்றும் வழங்கி வந்த வாத்தியமே இப்போது நாகஸ்வரம் என்று அழைக்கப்படுகிறது.

தமிழகத்தை நினைக்குந் தோறும் தேவாலயங்களும், அங்கே ஒலிக்கும் நாகஸ்வர இசையும் தான் நினைவுக்கு வரும். இன்னும் கல்யாணங்களும், ஊர்வலங்களும், சுவாமி புறப்பாடும், நாகஸ்வர இசையுடன் ஒன்று கலந்து விட்ட இன்ப நிகழ்ச்சிகளாகும்.

* *

திருச்சி ரேடியோ நிலையத்தார் சென்ற ஞாயிற்றுக்கிழமை இரவு 7-30 மணியிலிருந்து 8-30 மணி வரை நாகஸ்வரத்தின் வரலாற்றை மிகவும் கவர்ச்சியான ஒரு நிகழ்ச்சியாக நடத்தினர்கள்.

பழம்பெரும் வித்வான்களான கோரநாடு நடேச பிள்ளை, செம்பொன்னார் கோயில் ராமசாமி பிள்ளை, மன்னார்குடி சின்ன பக்கிரியா பிள்ளை, மதுரை பொன்னுசாமி பிள்ளை இவர்களுடைய வாசிப்பைத் தாம் நேரில் கேட்டு மகிழ்ந்த விவரங்களையும் தவில் வாத்தியத்தில் பிரக்கியாதி பெற்ற அம்பாசமுத்திரம் கண்ணுச்சாமி பிள்ளை, வழுவூர் முத்துவீரு பிள்ளை, நீடாமங்கலம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை, மலைக்கோட்டை பஞ்சாமி பிள்ளை இவர்களுடைய வாசிப்பைக் கேட்டு மகிழ்ந்த விவரங்களையும் பெரம்பலூர் ஸ்ரீ அங்கப்ப பிள்ளை அருமையாகக் கூறினர்.

பின்னர் நாகஸ்வரம் செய்வதில் ஐம்பத்திரண்டு ஆண்டு அனுபவம் பெற்ற ஸ்ரீ டி.கே. சுப்பிரமணிய ஆச்சாரியார் ஆச்சா மரத்தினால் செய்யப்படும் நாகஸ்வரம் கட்டையாக இருந்து பிறகு படிப்படியாகக் குழல் உருவம் பெறும் அதிசயத்தைக் கூறினர். இந்த வேலை முடிந்ததும் ஊதும் குச்சியான சீவாளிக்கு இன்னொரு நிபுணரிடம் போக வேண்டும். சீவாளி செய்வதில் நிபுணரான ஸ்ரீ நாராயணசாமி பிள்ளை கொருக்கந்தட்டி லிருந்து சீவாளி செய்யும் முறைகளையும் அதைப் பதப்படுத்தும் முறைகளையும் கூறியபோது, 'இந்தச் சின்னஞ் சிறு குச்சிக்கு இத்தனை வேலையா!' என்று தோன்றியது. இத்தனை சிரமத்துக்கும் உழைப்புக்கும் பிறகு ஆச்சா மரத்திலிருந்து அதிசய உருவெடுக்கும் நாககரக் கருவி அச்சாவாக இருப்பதில் ஆச்சரியம் என்ன?— "சாவி"

தலைநகரில் புது ஹோட்டல்


பாரததேசம் சுதந்திரம் அடைந்த பிறகு உலகத்திலே பாரதத்தின் செல்வாக்கு வருஷத்துக்கு வருஷம் பெருகிக் கொண்டிருக்கிறது. அதனால் பாரதத்தின் தலைநகரான டில்லிக்கு மேல் நாட்டிலிருந்து வருவோர் போவோரின் எண்ணிக்கையும் பெருகத் தொடங்கி விட்டது. அவர்களின் சுக சௌகரியங்களுக்கு ஏற்ற, மேல் நாட்டு முறையில் அமைக்கப்பட்ட ஹோட்டலுக்குப் பெரும் அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இந்தத் தேவையை நிறைவுசெய்யும் பொறுப்பைத் திரு ஒபிராயும் அவர்களுடைய நண்பர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். திரு ஒபிராயும், வெளிநாட்டுப் பெரும் ஆகாய விமானக் கம்பெனியார்களும் சேர்ந்து இந்திய மூலதனத்தின் உதவியோடு புதுடில்லியில் "ஈஸ்ட் இந்தியா ஹோட்டல்ஸ் லிமிடெட்" என்று நவநாகரிக வசதிகள் கொண்ட பெரிய ஹோட்டல் நிர்மாணிக்கப் போகிறார்கள். இந்தப் புது ஹோட்டல் கம்பெனிக்குப் பாரத சர்க்கார் டில்லியில் ஒரு நல்ல இடத்தை ஒதுக்கியிருக்கிறார்கள். இரண்டு கோடி ரூபாய் அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்துடன் இக்கம்பெனி ஆரம்பமாகிறது. இக் கம்பெனியின் பங்குகள் வாங்க விரும்புபவர்கள், இக் கம்பெனியைப் பற்றிய எல்லா விவரங்கொண்ட அறிக்கை இவ்விதழின் 10 முதல் 23 பக்கங்களில் காணலாம். இக் கம்பெனியின் பங்குகள் பொதுமக்கள் செப்டம்பர் 24ம்தேதி காலை 10-30 மணியிலிருந்து அக்டோபர் மாதம் 8ம் தேதி வரை வாங்கலாம். ஆனால் டைரக்டர்கள் உசிதப்படி அக்டோபர் 3-ம் தேதிக்குப் பின் பங்குகள் வாங்குவது நிறுத்தப்படலாம்.

* * இந்த பிராஸ்பக்டஸின் பிரதி ஒன்று, 1956ஆம் கம்பெனிகள் சட்டத்தின் 60-வது பிரிவில் கோரப்பட்ட தஸ்தாவேஜுகளுடன் இணைக்கப்பட்டு மேற்கு வங்காள கம்பெனிகள் ரிஜிஸ்ட்ராரிடம் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுது வெளியிடப்படும் பங்குகளில் வியாபாரம் செய்வதற்கும் நாளடைவில் ஒரு அதிகார பூர்வமான விலையை நிர்ணயிப்பதற்கும் அனுமதி பெறுவதற்காக பம்பாய் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுக்கு விண்ணப்பம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த வெளியீட்டுக்காக மத்திய சர்க்காரின் சம்மதம் கிடைத்து விட்டது. சம்மதமளித்த உத்தரவின் முழு பிரதி ஒன்று கம்பெனியின் தலைமை ஆபீஸில் பொதுஜனங்களின்

பி ரா ஸ்

தி ஈஸ்ட் இந்தியா

(1913ம் வருஷம் இந்திய கம்பெனிகள்



அதிகாரம் பெற்ற மூலதனம்	ரூ. 2,00,00,000
இது பின்கண்டவிதம் பிரிக்கப்பட்டிருக்கிறது:	
(1) ஒவ்வொன்றும் ரூ.100 விலை கொண்ட 1,00,000 6% வரியில்லா க்யுமுலேடிவ் ப்ரிபரன்ஸ் பங்குகள்	ரூ. 1,00,00,000
(2) ஒவ்வொன்றும் ரூ.10 விலை கொண்ட 10,00,000 சாதாரண பங்குகள்	ரூ. 1,00,00,000
	ரூ. 2,00,00,000
வெளியிடப்பட்டது	
ஒவ்வொன்றும் ரூ. 10 விலை கொண்ட 1,00,756 சாதாரண பங்குகள் (செலுத்தப்பட்ட பங்குகள் ரூ.55,128)	ரூ. 10,07,560

பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கிறது. இந்திய சர்க்கார் இந்தச் சம்மதம் அளித்ததால் கம்பெனியின் எந்தத் திட்டங்களின் நிதி நிலைமைக்கு அல்லது அது சம்பந்தமாகக் கொடுக்கப்பட்ட வாசகம் அல்லது தெரிவிக்கப்பட்ட அபிப்பிராயத்தின் சேர்மைக்கு இந்திய சர்க்கார் எந்த விதத்திலும் பொறுப்பு வகிக்காது. சந்தாக்கள் 1956 செப்டம்பர் 24-ந் தேதி காலை 10-30 மணியிலிருந்து 1956 அக்டோபர் 8-ந் தேதி வரை வசூல் செய்யப்படும். ஆனால், இந்த வசூல் டைரக்டர்களின் உசிதப்படி முன்னுடியே நிறுத்தப்படலாம். என்றாலும் 1956 அக்டோபர் 3-ந் தேதிக்கு முன்னால் நிறுத்தப் படமாட்டாது.

* * *

ப க் ட ஸ்

ஓட்டல்ஸ் லிமிடெட்

சட்டம் VII-ன் கீழ் நிறுவப்பட்டது)

இப்பொழுது வெளியிடப்படுவது

ஒவ்வொன்றும் ரூ. 100 சம மதிப்பு கொண்ட 30,000 6% வரியில்லா க்யுமுலேடிவ் ப்ரிபரன்ஸ் பங்குகள்	ரூ.	30,00,000
மற்றும் ஒவ்வொன்றும் ரூ. 10 விலை கொண்ட 5,99,244 சாதாரண பங்குகள்	ரூ.	59,92,440
	ரூ.	1,00,00,000

இதில் ராய் பகதூர் ஒபிராயும் அவருடைய நண்பர்களும் ஒவ்வொன்றும் ரூ. 10 சம மதிப்புக் கொண்ட 99,244 சாதாரண பங்குகளை ரொக்கப் பணம் செலுத்தி எடுத்துக் கொள்ளச் சம்மதித்திருக்கிறார்கள்.

மேலும், விற்பனை கம்பெனிக்கு ஸ்ரீ நகரில் இருக்கும் ஒபிராய் பாலஸ் ஓட்டல் என்ற ஓட்டலின் ஸ்தாவர ஜங்கம சொத்துக்களை அசல் விலைக்கு வாங்குவது சம்பந்தமாக மொத்தம் ரூ. 15,10,654-14-3 மதிப்பில் ரூ. 15,00,000 ஒவ்வொன்றும் ரூ. 10 சம மதிப்புக் கொண்ட 1,50,000 சாதாரண பங்குகள் ஒதுக்கப்படுவதன் மூலம் செலுத்தப்படும். மீதித் தொகையான ரூ. 10,654-14-3 விற்பனை கம்பெனிக்கு ரொக்கமாகச் செலுத்தப்படும்.

தற்போதைய வெளியீடு

மீதமுள்ள ரூ. 10 விலை கொண்ட 3,50,000 சாதாரண பங்குகளும் ரூ. 100 விலை கொண்ட 30,000 6% (வருமான வரியில்லாத) க்யுமுலேடிவ் ப்ரிபரன்ஸ் பங்குகளும் பொது ஜன சந்தாவுக்கு வெளியிடப்பட்டிருக்கின்றன.

ப்ரிபரன்ஸ் மற்றும் சாதாரண பங்குகளுக்குப் பின்கண்ட விதம் பணத்தைச் செலுத்த வேண்டும்.

ப்ரிபரன்ஸ் பங்கு ஒவ்வொன்றுக்கும் ரூ. 25-0-0 விதம் விண்ணப்பத்துடன் மற்றும்,

ப்ரிபரன்ஸ் பங்கு ஒவ்வொன்றுக்கும் ரூ. 25-0-0 விதம் முதல் கோரிக்கையின் பேரிலும் மீதியை இரண்டு சம தவணைகளிலும் செலுத்த வேண்டும். ஆனால் கோரிக்கைகளுக் கிடையேயும் மற்றும் விண்ணப்பத்துக்கும் முதல் கோரிக்கைக்கும் இடையேயும் ஒவ்வொரு தடவையும் இரண்டு மாதங்களுக்குக் குறையாத இடைக்காலம் இருக்கும்.

சாதாரண பங்கு ஒவ்வொன்றுக்கும் ரூ. 2-8-0 விதம் விண்ணப்பத்துடன், மற்றும்

சாதாரண பங்கு ஒவ்வொன்றுக்கும் ரூ. 2-8-0 விதம் முதல் கோரிக்கையின் பேரிலும் மீதியை இரண்டு சம தவணைகளிலும் செலுத்த வேண்டும். ஆனால் கோரிக்கைகளுக்கிடையேயும் மற்றும் விண்ணப்பத்திற்கும் முதல் கோரிக்கைக்கும் இடையேயும் ஒவ்வொரு தடவையும் இரண்டு மாதங்களுக்குக் குறையாத இடைக்காலம் இருக்கும்.

ப்ரிபரன்ஸ் பங்குகளுக்காகக் குறைந்தபட்சமாக 5 பங்குகள் அல்லது அதன் பெருக்குத் தொகைக்காகவும் சாதாரண பங்குகளானால் 10 பங்குகளுக்கு அல்லது அதன் பெருக்குத் தொகை பங்குகளுக்காக விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டும்.

பிராஸ்பக்டஸ்ஸும் விண்ணப்ப பாரங்களும் இந்த வெளியீட்டின் புரோக்கர்களிடமும் கீழ்க்கண்ட பாங்குகளிலும் அவைகளின் கிளைக் காரியாலயங்களிலும் கம்பெனியின் ரிஜிஸ்டர்ட் ஆபீஸிலும் கிடைக்கும்.

1. ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, சாந்தினி சௌக், டெல்லி.
2. சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா லிட்., சாந்தினி சௌக், டெல்லி.
3. பஞ்சாப் நேஷனல் பாங்க் லிட்., ஸிவில் லைன்ஸ், டெல்லி.
4. மெர்க்கன்டைல் பாங்க் ஆப் இந்தியா லிட்., சாந்தினி சௌக், டெல்லி.

பூர்த்தி செய்த விண்ணப்ப பாரங்களைக் கட்டணத்துடன் இந்த வெளியீட்டின் புரோக்கர்களுக்கோ அல்லது பாங்குகளுக்கோ அல்லது கம்பெனியின் ரிஜிஸ்டர்ட் ஆபீஸுக்கோ சந்தா வசூல் நிறுத்தப்படுவதற்கு முன்னால் சேர்த்துவிட வேண்டும்.

பங்குகள் ஒதுக்கப்படாவிட்டால் டிபாஸிட்டுப் பணம் முழுவதுமாக வாபஸ் செய்யப்படும். கேட்டதற்கும் குறைவாகப் பங்குகள் ஒதுக்கப்படுமானால் பிரயோஜனப் படாத மீதிப் பணம் வாபஸ் செய்யப்படும். டைரக்டர்களுக்கு எந்த விண்ணப்பத்தையும் முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ காரணம் கூறாமல் நிராகரித்துவிட உரிமை உண்டு. ஒதுக்கப்பட்ட பங்குகளுக்காகச் செலுத்த வேண்டிய சமயத்தில் ஏதாவது பணம் செலுத்தத் தவறினால் ஏற்கெனவே செலுத்தியிருந்த பணமும் பங்குகளும் பறிமுதல் செய்யப்படும். பங்குகள் வெளியிடப்பட்டதும் கம்பெனியின் மெமோராண்டம் & ஆர்ட்டிக்கிள்ஸ் ஆப் அஸோஸியேஷனின் ஷரத்துகளுக்குட்பட்டிருக்கும். இதன் பிரதியைக் கம்பெனியின் ரிஜிஸ்டர்ட் ஆபீஸில், ஆபீஸ் நேரங்களில் பார்வையிடலாம். பங்கு சர்டிபிகேட்டுகள் பங்குகள் ஒதுக்கப்பட்ட தேதியிலிருந்து 3 மாதங்களுக்குள் வழங்கப்படும்.

டைரக்டர்கள்

	பெயரும் விலாசமும்	டைரக்டரா யிருக்கும் ஸ்தாபனங்கள்
1	**சர் பிரென்மித்ர. Kt.** தொழிலதிபர் 2, ஹங்கர் போர்ட் தெரு கல்கத்தா	ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவின் மத்திய போர்டு, இந்தியன் லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷனின் மத்திய போர்டு, மெம்பர், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் கிழக்குப் பகுதி, மேற்கு வங்க நிதி கார்ப்பொரேஷன், எஞ்சலோ பிரதர்ஸ் லிமிடெட், மஹிந்திரா அண்டு மஹிந்திரா லிட். மற்றும் இதரவை.
2	**ஸ்ரீ எம். எல். கைத்தான்** சொலிஸிட்டர் 226/1, லோயர் சர்குலர் ரோடு கல்கத்தா	பாட்டா ஷூ கம்பெனி லிட்., அஸோஸியேட்டட் ஓட்டல்ஸ் ஆப் இந்தியா லிட்., சௌத் இந்தியா இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிட்., ஸ்ரீ திக்விஜயா உல்லன் மில்ஸ் லிட்., சௌரிங்கி ப்ராபர்ட்டீஸ் லிட்., மற்றும் இதரவை.
3	**ஸ்ரீ ராம்நிவாஸ் ராம்நாராயண்ருயா** தொழிலதிபர் பாங்க் தெரு பம்பாய்	தி பின்லே மில்ஸ் லிட்., தி நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிட்., தி பாங்க் ஆப் இந்தியா லிட்., ஆந்திரா வாலி பவர் சப்ளை கம்பெனி லிட்., தி போனிக்ஸ் மில்ஸ் லிட்., மற்றும் இதரவை.
4	**ஸ்ரீ முரார்ஜி வைத்யா** வியாபாரி இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்ஸ், லால்பாக் பம்பாய்	பாலன்ஸ் லிட்., தி நேஷனல் எலக்ட்ரிகல் இண்டஸ்ட்ரீஸ் லிட்., தி கிரெஸண்ட் அயர்ன் அண்டு ஸ்டீல் கார்ப்பொரேஷன் லிட்., தி பம்பாய் சில்க் மில்ஸ் லிட்., தி இந்தியன் சர்வேயர்ஸ் லிட். மற்றும் இதரவை.
5	**ஸ்ரீ எம். ஏ. சிதம்பரம்** வியாபாரி செட்டிநாடு ஹவுஸ் ராஜா அண்ணாமலைபுரம் மதராஸ்	சௌத் இந்தியா இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிட்., இந்தியன் அலுமினியம் கம்பெனி லிட்., ஆட்டோமொபைல் ப்ராடக்ட்ஸ் ஆப் இந்தியா லிட்., தென்னிந்திய வர்த்தகச் சங்கம், மதராஸ் இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பொரேஷன் லிட். மற்றும் இதரவை.
6	**ராய் பஹதூர் எம். எஸ். ஓபிராய்** வியாபாரி மெய்டன்ஸ் ஓட்டல் டில்லி	அஸோஸியேட்டட் ஓட்டல்ஸ் ஆப் இந்தியா லிட்., சௌரிங்கி ப்ராபர்ட்டீஸ் லிட்., இந்தியன் டிரேட் அண்டு ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிட்., ஓட்டல்ஸ் (1938) பிரைவேட் லிட்., மெர்க்குரி டிராவல்ஸ் (இந்தியா) பிரைவேட் லிட். மற்றும் இதரவை.
7	**சர் உஷாநாத் ஸென்** வியாபாரி வெஸ்ட்ர்ன் கோர்ட் புது டில்லி	அஸோஸியேட்டட் ஓட்டல்ஸ் ஆப் இந்தியா லிட்., லோலான் ப்ரிவரீஸ் லிட்., நியூ விக்டோரியா மில்ஸ் லிட்., இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் பப்ளிக் ஒபினியன் மற்றும் இதரவை.
8	**ஸ்ரீ டி. ஆர். ஓபிராய்** வியாபாரி ஓட்டல் இம்பீரியல் புது டில்லி	அஸோஸியேட்டட் ஓட்டல்ஸ் ஆப் இந்தியா லிட்., நார்த்தர்ன் இந்தியா கேட்டரர்ஸ் பிரைவேட் லிட்., ஓட்டல்ஸ் (1938) பிரைவேட் லிட்., மெர்க்குரி டிராவல்ஸ் (இந்தியா) பிரைவேட் லிட்., எவரெஸ்ட் ஓட்டல்ஸ் லிட். மற்றும் இதரவை.

பாங்கர்கள்

1. ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, சாந்த்னி சௌக், டெல்லி.
2. சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா லிட்., சாந்த்னி சௌக், டெல்லி.
3. பஞ்சாப் நேஷனல் பாங்க் லிட்., ஸிவில் லைன்ஸ், டெல்லி.
4. மெர்க்கன்டைல் பாங்க் ஆப் இந்தியா லிட்., சாந்த்னி சௌக் டெல்லி.

சட்டபூர்வமான ஆடிட்டர்கள்

ஜி. பாசு & கோ., சார்ட்டர்ட் அக்கவுன்டன்ட்ஸ், கல்கத்தா

பிராஞ்சு ஆடிட்டர்கள்

ஏ. எப். பெர்குஸன் & கோ., சார்ட்டர்ட் அக்கவுன்டன்ட்ஸ், புதுடெல்லி

புரோக்கர்கள்

மெர்வான்ஜி பொமன்ஜி டலால்
அலஹாபாத் பாங்க் பில்டிங், அப்போலோ தெரு, போர்ட், பம்பாய்-1

பாட்லிவாலா அண்டு கரானி
யூனியன் பாங்க் பில்டிங், டலால் தெரு, போர்ட், பம்பாய்-1

ஸ்டீவர்ட் அண்டு கம்பெனி
7, ராயல் எக்சேஞ்சு பிளேஸ், கல்கத்தா

ஹர்பான்ஸ் சிங் மேத்தா அண்டு கம்பெனி
33, சிகல் பில்டிங்ஸ், பார்லிமென்ட் தெரு, தபால் பெட்டி நெ. 300, புது டில்லி

டலால் அண்டு கம்பெனி, நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்ஸ், மதராஸ்-1

மானேஜிங் ஏஜண்டுகள்

ஓபிராய் ஓட்டல்ஸ் (இந்தியா) பிரைவேட் லிட்., கல்கத்தா

ஸொலிஸிட்டர்கள்

ஆர். டிக்ஸன் அண்டு கம்பெனி, 29, நேதாஜி சுபாஷ் ரோடு, கல்கத்தா

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்

17-பி, சௌரிங்கி ரோடு, கல்கத்தா

டிவிடெண்ட், மூலதனம் மற்றும் வோட்டு உரிமைகள்

கம்பெனியின் பிரபரன்ஸ் மற்றும் சாதாரண பங்குகளுக்குள்ள உரிமைகள், சலுகைகள் மற்றும் கட்டுப்பாடுகளும், கடன் வாங்குவது, மேலும் பங்குகளை ஏற்படுத்துவது பற்றி வரம்புகள் முதலானவைகளின் சுருக்கமான விவரம் பின்வருமாறு:

டிவிடெண்டுகள்

எந்த ஒரு நிதி வருஷத்திற்கும் அல்லது வேறு எந்தக் காலத்திற்கும் பகிர்ந்து கொடுப்பதற்காக கம்பெனி நிர்ணயிக்கும் லாபங்கள் முதலில், பிரபரன்ஸ் பங்குதாரர்களுக்கு அந்தச் சமயத்தில் செலுத்தப்பட்டிருக்கும் மூலதனத்திற்கு வருஷத்திற்கு 6 சதவித (வருமான வரியில்லாத) நிர்ணய க்யுமுலேடிவ் பிரபரன்ஸ் டிவிடெண்டு அளிக்கப்படும். டு லாபத்தில் மீதித் தொகை சாதாரண பங்குதாரர்களுக்கு அவர்கள் வைத்திருக்கும் சாதாரண பங்குகளுக்காகச் செலுத்தப் பட்டிருக்கும் பணத்திற்கேற்ற விகிதாசாரத்தில் பகிர்ந்து கொடுக்கப்படும்.

மூலதனம்

கம்பெனி கலைக்கப்பட்டாலும் கலைக்கப்படாமலிருந்தாலும் மெம்பர்களுக்குப் பகிர்ந்து கொடுப்பதற்காகக் கிடைக்கும் ஆஸ்திகள் முதலில் பிரபரன்ஸ் பங்குதாரர்களுக்கு அவர்கள் அந்த பிரபரன்ஸ் பங்குகளுக்காகச் செலுத்தப்பட்டிருக்கும் பணத்தைத் திருப்பிக் கொடுப்பதற்காகவும் அத்துடன் டு பங்குகளுக்கு, டிவிடெண்டு நிர்ணயிக்கப்பட்டாலும் நிர்ணயமாகாமலிருந்தாலும் அதற்கு ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்ட டிவிடெண்டு பாக்கி அல்லது குறைபாடுகள் ஏதாவது இருந்தாலும் அதற்குச் சமமான ஒரு தொகையைச் செலுத்துவதற்காகவும் பயன்படுத்தப்படும். இந்தத் தொகை கம்பெனியின் கலைப்பு ஆரம்பிக்கும் காலம் வரை கணக்கிடப்பட்டுச் செலுத்தப்படும். இது தவிர பிரபரன்ஸ் பங்குகளுக்கு கம்பெனியின் சொத்துக்கள் அல்லது லாபங்களில் பங்கு கொள்ள உரிமை கிடையாது. சொத்துக்களின் மீதித் தொகை சாதாரண பங்குதாரர்களுக்கு அவர்கள் வைத்திருக்கும் அந்த சாதாரண பங்குகளுக்காகச் செலுத்தப்பட்டிருக்கும் பணத்துக்கேற்ற விகிதாசாரத்தில் பகிர்ந்து கொடுக்கப்படும்.

வோட்டளித்தல்

பிரபரன்ஸ் பங்குதாரர்களுக்கு ஜெனரல் மீட்டிங் நோட்டீஸ்கள் பெற அருகதையுண்டு. ஆனால் அவர்களுக்குக் கீழ்க்கண்ட சந்தர்ப்பங்களைத் தவிர மற்ற சமயங்களில் டு மீட்டிங்கில் வோட்டளிக்க உரிமை கிடையாது.

(1) பிரபரன்ஸ் பங்குகளுக்கான டிவிடெண்டு அல்லது டிவிடெண்டின் ஒரு பகுதி மீட்டிங் ஆரம்பத் தேதிக்கு முன்னால் இரண்டு வருஷங்களுக்குக் குறையாத ஒரு மொத்த காலத்திற்குச் செலுத்தப்படாமலிருந்தால், அல்லது

(2) மீட்டிங் அலுவல்களில், பிரபரன்ஸ் பங்குதாரர்களின் உரிமையை நேரடியாகப் பாதிக்கும் வகையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் (கம்பெனியைக் கலைக்க வேண்டுமென்றோ அல்லது கம்பெனியின் பங்கு மூலதனத்தைத் திருப்பிக் கொடுக்கும்படியோ அல்லது அதைக் குறைக்க வேண்டுமென்றோ நிறைவேற்றப்படும் ஒரு தீர்மானம் பிரபரன்ஸ் பங்குதாரர்களின் உரிமைகளை நேரடியாகப் பாதிப்பதாகக் கருதப்படும்.)

வோட்டளிக்க உரிமையுள்ள ஒவ்வொரு மெம்பருக்கும் (தனி நபரானால்) அவர் நேரில் அல்லது பிராக்ஸி மூலம் பிரசன்னமாயிருந்தாலும் அல்லது (ஒரு கார்ப்பரேஷனாயிருந்தால்) ஒரு பிரதிநிதி மூலம் அல்லது பிராக்ஸி மூலம் பிரசன்னமாயிருந்தாலும் கைகாட்டி ஒரே ஒரு வோட்டளிக்க உரிமை உண்டு. வோட்டளிக்கும்போது சாதாரண மற்றும் பிரபரன்ஸ் பங்குதாரர்களுக்கான வோட்டுரிமை 1956 வருஷம் கம்பெனிகள் சட்டத்தின் 87-வது பிரிவில்

குறிப்பிட்டபடி இருக்கும். எந்த மெம்பரின் பங்குகளுக்காகக் கோரிக்கைப் பணமோ அல்லது அந்தச் சமயத்தில் செலுத்த வேண்டிய பணமோ செலுத்தப்படாமலிருந்தால் அல்லது அந்த பங்குகளுக்கு கம்பெனி எந்தவிதமான உரிமை அல்லது லீன் பெற்றிருந்தாலும் அந்த மெம்பருக்கு மீட்டிங்கில் நேரிலோ அல்லது பிராக்ஸி மூலமோ பிரசன்னமாயிருக்கவோ அல்லது வோட்டளிக்கவோ அருகதை கிடையாது.

உரிமைகளில் மாறுதல்கள்

எந்த வகை பங்குகளுக்கும் உள்ள விசேஷ உரிமைகள், அந்த வகைப் பங்குகள், வெளியிடப்பட்ட அளவில் முக்கால் பங்கு பேர்களின் சம்மதத்தை எழுதி வாங்கி மாற்றப்படலாம், அல்லது ரத்துச் செய்யப்படலாம், அல்லது அந்தப் பங்குதாரர்களின் கூட்டம் ஒன்றைத் தனியாகக் கூட்டி ஒரு விசேஷத் தீர்மானத்தின் மூலம் மாற்றப்படலாம், அல்லது ரத்துச் செய்யப்படலாம்.

பங்குகளை மாற்றுவதற்குக் கட்டுப்பாடுகள்

முழுதும் செலுத்தப்பட்ட பங்குகளை மாற்றுவதற்குக் கட்டுப்பாடுகள் கிடையாது. ஆனால் டைரக்டர்கள் அங்கீகரிக்காத ஒரு நபருக்கு ஒரு பகுதி செலுத்தப்பட்ட பங்குகளைப் பதிவு செய்வதற்கு டைரக்டர்கள் மறுக்கலாம். மேலும் எந்தப் பங்குகளுக்காவது கம்பெனிக்கு லீன் இருந்தால் அந்தப் பங்குகளை மாற்றுவதற்கும் டைரக்டர்கள் மறுக்கலாம்.

கடன் வாங்கல்

1956-ம் வருஷம் கம்பெனிகள் சட்டத்தின் 293-வது பிரிவில் விதிக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாட்டுக்குட்பட்டு டைரக்டர்கள் தங்கள் எல்லா அதிகாரங்களையும் பிரயோகித்துப் பணம் கடன் வாங்கலாம். மேலும் கம்பெனியின் வியாபாரத்தை, சொத்தை அல்லது கோரப்படாத மூலதனத்தை அல்லது அதன் ஒரு பாகத்தை அடமானம் வைக்கலாம், அல்லது கட்டுப்படுத்தலாம், மேலும் டிபென்சர்களையும் இதர செக்யூரிட்டிகளையும் வெளியிடலாம்.

பிராஸ்பக்டஸ்

நோக்கங்கள்

தி ஈஸ்ட் இந்தியா ஓட்டல்ஸ் லிமிடெட் பொதுவாக மெமோராண்டம் ஆப் அஸோஸியேஷனில் குறிப்பிட்ட நோக்கத்திற்காகவும் குறிப்பாக ஓட்டல்கள், ரெஸ்டாரண்டுகள் மற்றும் அது சம்பந்தமான வியாபாரங்களை நடத்துவதற்காகவும் 1949 மே 26உ. நிறுவப்பட்டது.

புது டில்லியில் ஓட்டல் நிர்மாணத் திட்டம்

புது டில்லியில் நிறுவப்படும் ஓட்டலில் லௌஞ்ச், பார் ரூம், டைனிங் ரூம், பாங்க்வெட் ரூம், கான்பரன்ஸ் ரூம், நீச்சல் குளம், ஷாப்புகள், ரெஸ்டாரெண்டுகள், நைட் கிளப்புகள் முதலான பொதுப்படையான ரூம்கள் இருக்கும். ஓட்டல் முழுவதும் ஏர்கண்டிஷன் செய்யப்பட்டு மிக நவீனமான மேற்கத்திய முறைகளில் உபகரண வசதிகள் அமைக்கப்படும். மேலும் பேக்கரி, கன்பக்ஷனரி, லாண்டரி, ஐஸ் மற்றும் மினரல் நீர் உற்பத்திச்சாலைகள் போன்ற இறுதுணை ஸ்தாபனங்களும் இருக்கும். மொத்தத்தில் இந்த ஓட்டல் ஒரு சிறிய டவுனைக் காட்சி அளிக்கும். 200 அறைகளும் 375 படுக்கைகளும் இருந்து எங்கும் இல்லாத ஒரு சிறந்த ரக ஓட்டலாக அமையும். இதைத் தவிர இந்த ஓட்டல் ஏராளமான நபர்களுக்கு வேலை கொடுக்கும். இந்தத் திட்டத்தின் மூலம் நாட்டின் வெளிநாட்டுப் பரிவர்த்தனை பணத்தில் கணிசமான அளவுக்கு வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. புது டில்லியில் மதுரா ரோடில் நன்கு அமைந்திருக்கும் ஒரு நிலம் இந்திய சர்க்காரால் கம்பெனிக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலம், 109 அடி உயரத்தில் ஒரு நவீன ஒன்பது மாடி ஓட்டல் நிறுவுவதற்காக ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் காண்ட்ராக்டின் நிபந்தனை விதிகளை பிராஸ்பக்டஸில் "சொத்துக்கள் சம்பந்தப்பட்ட காண்ட்ராக்டுகள்" என்ற தலைப்பில் காணலாம்.

ஓபிராய் பாலஸ் ஓட்டல், ஸ்ரீநகர்

திட்டங்களில், ஓட்டல்ஸ் (1938) பிரைவேட் லிமிடெட்டிடமிருந்து ஸ்ரீ நகரில் (காஷ்மீர்) ஓபிராய் பாலஸ் ஓட்டலின் அடங்கிய ஸ்தாவர ஜங்கம சொத்துக்களை வாங்குவதும் அடங்கியிருக்கிறது. இதற்காக விற்பனை கம்பெனியிடம் நடந்த பேச்சு வார்த்தைகள் முடிவடைந்து விட்டன. விற்பனை கம்பெனி, ஸ்ரீநகரில் இருக்கும் ஓட்டலுக்கு 'ஓபிராய் பாலஸ் ஓட்டல்' என்ற பெயரை எந்தக் கட்டணமும், செலவும் இல்லாமலும் உபயோகித்துக் கொள்ள கம்பெனிக்கு அனுமதி அளிக்கச் சம்மதித்திருக்கிறது. ஓபிராய் பாலஸ் ஓட்டல் 1955 ஜூன் மாதத்திலிருந்து வியாபாரத்தைத் தொடங்கியது. அது உலகின் மிகச் சிறந்த சுகவாச ஓட்டல்களில் ஒன்றாகக் கருதப்பட்டு வருகிறது. சர்வதேசப் பிரயாணத்தில் ஈடுபட்டிருக்கும் முக்கிய கனவான்களும் சமீபத்தில் இந்த ஓட்டலில் தங்கிய சோவியத் யூனியனைச் சேர்ந்த மார்ஷல் புல்கானினும் ஸ்ரீ நிகோலாய் க்ருஷேவும் இந்த ஓட்டலைப் பெரிதும் புகழ்ந்து பேசியிருக்கிறார்கள். ஓபிராய் பாலஸ் ஓட்டல் ஹரிசிங் மஹாராஜாவின் பழைய அரண்மனையில், டால் ஏரிக்கரையில் 50 ஏகரா நிலத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. ஓட்டல் 150 கட்டில்களுடன் மிகவும் ஆடம்பரமான வசதிகள் பெற்று, ஏரியையும் மலைகளையும் எதிர் நோக்கிய வண்ணம் அமைந்திருக்கிறது. இந்த ஓட்டல் இன்று காஷ்மீரில் ஒரு முதல்தரமான ஓட்டலாகப் பணியாற்றி வருகிறது. பிரதேசங்கள் அபிவிருத்தியடைந்த வசதிகளுடன் எவ்வாறு அபிவிருத்தி யடைகின்றன என்பதை இந்த ஓட்டலின் ஆரம்பகால வெற்றி குறிக்கிறது. ஆரம்பகாலத்திலிருந்து ஓட்டல் எப்பொழுதுமே நிறைந்து இருக்கிறது. ராய்பகதூர் ஓபிராய், பழைய அரண்மனையில் ஓட்டல் வைத்து நடத்துவதற்காக அதை மாற்றிப் புதுப்பித்துப் பத்து வருஷங்களுக்குக் குத்தகைக்கு எடுத்திருக்கிறார். குத்தகைக் காலம் முடிந்ததும் மேலும் 10 வருஷங்களுக்குக் குத்தகையை அவர் இஷ்டப்படி புதுப்பித்துக் கொள்ளலாம். இது சம்பந்தமாக ஏற்பட்ட மூலதனச் செலவின் சுருக்கமான விவரம் கீழே தரப்பட்டிருக்கிறது.

பர்னிச்சர் பிட்டிங்ஸ், கட்லரி பீங்கான் கிளாஸ் முதலியன	ரூ.	6,22,563	12	9
மெஷினரி & பாய்லர்கள் முதலியன	,,	42,927	6	6
எலக்டிரிக் இன்ஸ்டலேஷன்	,,	85,377	11	3
ஸானிட்டரி இன்ஸ்டலேஷன்	,,	2,81,823	13	0
கட்டிடத்தின் ஒரு பிரிவு கட்டுவதற்கு	,,	4,73,962	2	9
அரண்மனை மற்றும் கனித் தோட்டத்தின் குத்தகைச் செலவுகள்	...	4,000	0	0

ஆடிட்டர்களின் சர்டிபிகேட்டு:

மேற்கூறிய ஆஸ்கிக் ஓட்டல்ஸ் (1938) பிரைவேட் லிமிடெட்டின் கணக்குப் புத்தகங்களில், அவைகளுக்குக் குறிக்கப்பட்ட மேற்படி மதிப்புகளில் காணப்படுகின்றன என்று பிரமாணம் அளிக்கிறோம்.

பலன்கள்

அதிக ஓட்டல்களுக்கான வசதி

புது டெல்லியிலும் ஸ்ரீ நகரிலும் ஓட்டல்களுக்குக் கிராக்கி அதிகமாக இருக்கிறது. இந்த இரண்டு நகரங்களிலும் தற்சமயம் உள்ள ஓட்டல் வசதிகள் வெளிநாடுகளிலிருந்து சுற்றுப் பிரயாணத்தில் ஏராளமாக வரும் ஜனங்களுக்குப் போதுமானதாக இல்லை. இப்போது இருக்கும் ஓட்டல்கள் எப்போதும் போல் நிறைந்திருக்கின்றன. மேலும் இடவசதி கிடைப்பதில் எப்போதுமே சிரமமாயிருக்கிறது.

உலகின் பெரிய அரசியல் தலைநகரங்களில் ஒன்றாக இன்று ஸ்தானம் வகித்துவரும் புதுடெல்லியில் மேற்கூறிய நிலைமை நீடித்து வருகிறது. உதாரணமாக, இந் நகரில் கடந்த டிசம்பர் மாதத்தில் நடந்த இந்தியத் தொழில் கண்காட்சி சமயத்தில் ஏற்பட்ட நெருக்கடி காரணமாக ஓட்டல்களில் இடமே கிடைக்காமற் போய்விட்டது. டெல்லியில் இருக்கும் ஓட்டல்களில் தற்சமயம் 900 அறைகள்தான் இருக்கின்றன. இந்திய சர்க்காரின் டூரிஸ்ட் டிவிஷன், போக்குவரத்து மந்திரி இலாகாவின் அபிப்பிராயப்படி மேலும் 1,100 அறைகள் தேவையாயிருக்கின்றன. புதுடெல்லியில் நமது புதிய ஓட்டல் கட்டி முடிந்ததும், கட்டப்பட்டுவரும் மற்றொரு ஓட்டலுடனும் கூடி தேவையில் பாதி அளவைத்தான் பூர்த்தி செய்ய முடியும். எனவே மொத்தத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு மேலும் 500 அறைகளுக்கு வசதி இருக்கிறது.

வரும் ஆண்டுகளில் குறிப்பாக டெல்லியிலும் ஸ்ரீநகரிலும் ஓட்டல் வசதிகளின் சுமை அதிகரித்து மோசமடையும் போல் தெரிகிறது. அரசியல், பொருளாதார மற்றும் கலாசாரத் துறைகளில் ஏற்பட்டுவரும் அபிவிருத்திகள் காரணமாக நம் நாட்டுக்கு வெளி நாடுகளிலிருந்து விஜயம் செய்வோரின் எண்ணிக்கை பெரும் அளவுக்கு அதிகரித்துப்போகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அரசியல் கோஷ்டிகள்

அரசியல் அரங்கில் இந்தியாவின் நிலை உலக தேசங்களின் இடையே மிகவும் உயர்ந்திருக்கிறது. ஆசியாவில் இந்தியா தலைமை ஸ்தானத்தில் நிற்கிறது. உலகின் சமாதானத்தை நிலைநிறுத்துவதற்குக் கீழ்நாடுகளும் மேல்நாடுகளும் டெல்லியைப் பார்த்த வண்ணம் நிற்கின்றன. இதன் விளைவாக, நம் நாட்டுக்கு உலகின் பிரபல அரசியல் வாதிகள் அடிக்கடி விஜயம் செய்து போயிருக்கிறார்கள். வருஷா வருஷம் வெளிநாட்டு ஸ்தானிகர்கள், ஆசியா, தூரக் கிழக்கு நாடுகளுக்குப் பொருளாதாரக் கூட்டுறவு, உலக சுகாதார ஸ்தாபனம், சர்வ தேச நிதிக்குழு, புனர் நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச பாங்க், சர்வதேசத் தொழில் ஸ்தாபனம் முதலான யு. என். ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் இந்தியாவுக்கும் அதன் தலைநகருக்கும் விஜயம் செய்வது அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. சென்ற வருஷம் மார்ஷல் டிட்டோ, சவூதி அரேபியா அரசர், நேபாள மன்னரும் ராணியும், சோவியத் சர்க்காரின் தலைவர்கள், ஈரான் ஷாவும் ராணியும், யு. எஸ். ராஜாங்கக் காரியதரிசி ஸ்ரீ ஜான்பாஸ்டர் டல்லஸ், மற்றும் மவுண்ட்பாட்டன் பிரபுத் தம்பதிகள் உள்பட ஏராளமான ராஜாங்க விருந்தினர்கள் இந்தியா வழியாகப் பிரயாணம் செய்த விஷயம் யாவரும் அறிந்ததே.

வர்த்தக கோஷ்டிகள்

பொருளாதாரத் துறையில் இந்தியா வெகுவாக முன்னேறியிருக்கிறது. அதன் விவசாயம், தொழில், வர்த்தகம், பாங்கிங் மற்றும் இன்ஷ்யூரன்ஸ் யாவும் முன்னேறியிருக்கின்றன. இப்பொழுது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் பெரிய திட்டங்களை ஆரம்பித்து வைக்கும் தறுவாயில் நாடு அமைந்திருக்கிறது. இந்தத் திட்டங்கள் வெளிநாட்டு வியாபாரிகள், முதலாளிகள், தொழில் நுணுக்க நிபுணர்கள், வர்த்தகத் தூதுகோஷ்டிகள் முதலானோரை மிகவும் கவர்ந்துள்ளன. இவர்கள் தங்கள் நாடுகளின் சரக்குகளுக்கு ஆர்டர்கள் வாங்கவும், வியாபார உறவு ஏற்படுத்திக்கொள்ளவும் நம் நாட்டுக்கு விஜயம் செய்கிறார்கள். சமீப காலத்தில் இந்தியாவுக்கு வர்த்தகத் தூதுகோஷ்டிகள் விஜயம் செய்ததன் பலனாக வெளி நாடுகளுடன் வர்த்தகம் விஸ்தரிக்கப்பட்டிருப்பதுடன் சுற்றுப்பிரயாண மனப்பான்மையும் அதிகமாக வளர்ந்திருக்கிறது. இந்த விஸ்தரிப்பில், ஓட்டல் தொழில் வருங்காலத்தில் பெரும் பங்கெடுத்துப் பணியாற்றுவதற்குப் பெரும் வசதி இருக்கிறது. உள்நாட்டிலும்கூடத் தொழில் வளர்ச்சி காரணமாகப் பல விற்பனை ஸ்தாபனங்கள் அமைத்துக்கொள்ள ஏதுவாகி, அவைகளின் பிரதிநிதிகளின் மூலம் முதல்தரமான ஓட்டல்களுக்கு ஆதாயமான வாடிக்கையாளர்கள் ஏற்பட்டிருக்கிறார்கள்.

கலாச்சார தூதுகோஷ்டிகள்

கலாச்சார தூதுகோஷ்டிகள் பரிவர்த்தனை, வெளிநாட்டு விஞ்ஞானிகளின் விஜயங்கள், மற்றும் கல்வி நிபுணர்கள் மற்றும் டூரிஸ்டுகளின் எண்ணிக்கை யாவும் அதிகரித்துள்ளன. இவைகளால் முக்கிய நகரங்களின் ஓட்டல் இடவசதிகளில் நெருக்கடி ஏற்பட்டிருப்பது மட்டுமின்றி விருந்துபசாரங்கள், வரவேற்புகள் முதலியனவும் பெருகியுள்ளன. மேற்கூறிய வைபவங்களுக்கு வரும், மிகவும் பாதுபாடறிந்த விருந்தினர்களுக்குகந்த முறையில் சரியான

சௌகரிய சாதனங்களுடன் அமைந்த ஆடம்பர ஓட்டல்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருப்பதுடன் நாட்டில் தொலை தூரங்களில் இருக்கின்றன. இந்த நிலைமையால் ஈஸ்ட் இந்தியா ஓட்டல்ஸ் லிமிடெட் உத்தேசித்திருக்கும் முறையில் ஓட்டல் வியாபாரம் நடத்துவதற்கு அனுகூலமான வசதி ஏற்பட்டிருக்கிறது.

வெளிநாட்டு மார்க்கெட்

கடந்த பத்து ஆண்டுகளில் விமானப் பிரயாணத்தில் ஏற்பட்டுள்ள பிரம்மாண்டமான விஸ்தரிப்பிலிருந்து உலக மக்களிடையே பிரயாண மனப்பான்மை வளர்ந்திருக்கிறது. 1945-ல் உலக விமானங்களில் 9.3 மிலியன் பிரயாணிகள் 375 மிலியன் மைல்களுக்குப் பிரயாணம் செய்திருக்கிறார்கள். 1955-ல் இந்த எண்ணிக்கை 69 மிலியன் பிரயாணிகளாகவும் 1,407 மிலியன் மைல்களாகவும் உயர்ந்துவிட்டது. இந்தச் சுற்றுப் பிரயாணத்தில் ஏற்பட்டுள்ள விஸ்தரிப்புக்கு முக்கிய காரணம் என்னவென்றால் அமெரிக்காவில் குடும்பங்களின் வருமானங்கள் பெரும் அளவுக்கு உயர்ந்திருக்கின்றன. யு. எஸ். ஸில் மட்டும், பெரியவர்களான காலத்தில் வாழ்க்கையில் ஒரு தடவை உலகைச் சுற்றிப் பிரயாணம் செய்வதற்குப் போதுமான வருமானம் பெற்றுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை 14 மிலியன்கள் ஆகும். இது, கீழே குறிப்பிடப்பட்ட விதம் உலகின் பல பாகங்களுக்குச் சுற்றுப் பிரயாணம் செய்யும் யு. எஸ். டூரிஸ்டுகளின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு முக்கிய காரணமாக இருக்கிறது.

துருக்கி

1951-ல் துருக்கியில் 370 வட அமெரிக்கர்கள் பிரவேசித்துள்ளதாகத் துருக்கி கஸ்டம்ஸ் இலாகாவில் பதிவாகியிருக்கிறது. 1955-ல் இந்த எண்ணிக்கை 13,000 ஆக உயர்ந்துவிட்டது.

எகிப்து

1951-ல் 3,700 வட அமெரிக்கர்கள் அந்த நாட்டில் இறங்கியிருப்பதாகத் தஸ்தாவேஜுகள் கூறுகின்றன. 1955-ல் இந்த எண்ணிக்கை 23,000 ஆகப் பெருகியது.

ஜப்பான்

1951-ல் 700 வட அமெரிக்கர்கள் ஜப்பானுக்கு விஜயம் செய்தார்கள். 1954-ல் 44,300 வட அமெரிக்கர்கள் விஜயம் செய்தார்கள்.

ஆஸ்ட்ரியா

1951-ல் 61,800 வட அமெரிக்கர்கள் ஆஸ்ட்ரியாவுக்கு விஜயம் செய்தார்கள். 1955-ல் 1,19,000 வட அமெரிக்கர்கள் விஜயம் செய்தார்கள்.

இத்தாலி

1952-ல் 3,94,000 வட அமெரிக்கர்கள் இத்தாலிக்கு விஜயம் செய்தார்கள். 1953-ல் இந்த எண்ணிக்கை 5,54,000 ஆகும்.

இந்த நாடுகளில் வெளிநாட்டவர்கள் விஜயம் செய்ததால் இந்த நாடுகளின் வெளிநாட்டுப் பரிவர்த்தனை வருமானத்தைக் குறிக்கும் புள்ளி விவரங்கள் கிடைக்கவில்லை. ஆனாலும் ஜப்பானின் வருமானத்தைக் கொண்டு சுற்றுப் பிரயாண வசதிகள் மூலம் கிடைக்கக்கூடிய வருமானத்தை ஊகிக்க முடியும். 1952-ல் இந்தச் சுற்றுப் பிரயாண இனத்திலிருந்து அந்த நாட்டில் கிடைத்த டாலர் வருமானம் 8.2 மிலியன் டாலர்கள். இது 1953-ல் 33·00 மிலியன் டாலர்களாகவும் 1954-ல் 39·00 மிலியன் டாலர்களாகவும் உயர்ந்து விட்டன.

உல்லாசப் பிரயாணமும் வியாபாரப் பிரயாணமும் உலகின் பெரிய வியாபாரமாக மாறியிருக்கின்றன. இவை ஆதாயமிக்கதாயுமிருக்கின்றன. பிரயாணிகளின் போக்குவரத்துக்கான தடைகளை நீக்குவதற்கும் அந்நிய பரிவர்த்தனை வருமானங்களை அதிகரித்துக் கொள்வதற்கும் வெளிநாட்டுப் பிரயாணிகளின் அடிப்படைத் தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்வதில்தான் திறவுகோல் அமைந்திருக்கிறது.

யு. கே. மற்றும் யு. எஸ். ஏ. வின் சர்வதேச விமானக் கம்பெனிகள் ஏராளமான அளவில் ஜெட் விமானங்களை 1958-ல் டெலிவரிக்காக ஆர்டர்கள் கொடுத்திருக்கின்றன. இந்த விமானங்கள் ஒவ்வொன்றும் வருஷா வருஷம் அட்லாண்டிக் குறுக்கே எஸ். எஸ். க்வீன் மேரி கப்பலைப் போல அதே அளவில் பிரயாணிகளை ஏற்றிச் செல்லக்கூடியவை என்று கூறப்படுகிறது. இதிலிருந்து வெளிநாட்டுச் சுற்றுப்பிரயாணம் எதிர்காலத்தில் மேலும் விஸ்தரிப்படைவதற்கான அறிகுறிகளைத் தெரிந்து கொள்ளலாம்.

இத்தகைய சர்வதேச போக்குவரத்து விஸ்தரிப்பால் இந்தியாவும் நிச்சயமாகப் பலனடையப் போகிறது. 1960-ல் டெல்லியில் இத்தகைய போக்குவரத்து 200 சதவீதம் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. டெல்லியில் ஓட்டல் தொழில் இந்தத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக ஓட்டலில் இடவசதியைப் போதுமான அளவுக்கு விஸ்தரிக்க வேண்டும்.

சுற்றுப்பிரயாணத்தில் சர்க்காரின் சிரத்தை

வெளிநாட்டுப் பிரயாணிகளுக்குச் சௌகரியம் அளிப்பதன் முக்யத்துவத்தை இந்திய சர்க்கார் உணர்ந்திருக்கிறது. இந்தத் துறையில் பல முயற்சிகளை ஆரம்பித்திருக்கிறது. மிக நவீன ஓட்டல்களை நிர்மாணிப்பதற்கு ஊக்கமளித்திருக்கிறது. பிரயாணிகளுக்குச் சௌகரியங்கள் அளிக்கும்நோக்கத்துடன் விமானம்மற்றும் ரயில்போக்குவரத்து வசதிகளை அபிவிருத்தி செய்திருக்கிறது. மேலும் பிரயாணிகளுக்குத் தொல்லை கொடுக்கும் கட்டுப்பாடுகளையும் விதிமுறைகளையும் பெரும் அளவுக்கு நீக்கியிருக்கின்றனர். நம் சர்க்கார் பிரயாணிகளுக்கு உதவி அளிப்பதற்காக இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் பல டூரிஸ்ட் சென்டர்களைத் திறந்திருக்கிறது.

காஷ்மீர் சர்க்காரும் கூட சுற்றுப்பிரயாணத்துக்கு ஊக்கமளிப்பதில் சிரத்தை கொண்டுள்ளது. ஏனெனில் அந்நியப் பரிவர்த்தனை வருமானம் சம்பாதிப்பதில் இது முக்கியமானதாக ருகவாகியுள்ளது. காஷ்மீர் ராஜ்ய டூரிஸ்ட் டிபார்ட்மெண்ட் டைரக்டரின் அறிக்கையின்படி 1955-ல் 55,000 டூரிஸ்டுகள் காஷ்மீருக்கு விஜயம் செய்தார்கள். நடப்பு வருஷத்தில், 1,00,000 டூரிஸ்டுகள் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ராஜ்ய சர்க்கார் டூரிஸ்டுகளுக்காகப் போதுமான இடவசதிக்கும் போக்குவரத்துக்கும் ஏற்பாடு செய்து வருகிறார்கள். டான் மார்க்கையும் குல்மார்க்கையும் இணைப்பதற்காக ரோப்வேக்கள் நிறுவப்பட்டு வருகின்றன. ஸ்ரீநகரில் உலகில் மிகப் பெரியதான ஒரு டூரிஸ்ட் சென்டர் விரைவில் ஏற்படுத்தப்படும். ராஜ்ய சர்க்கார் அந்நிய கம்பெனிகளின் ஒத்துழைப்புடன் பல்வேறு இடங்களில் படகு கம்பெனிகளைத் திறக்க உத்தேசித்திருக்கிறார்கள். மேலும் குளிர்கால விளையாட்டுக்களை 1947-க்கு

முந்தின அளவில் மீண்டும் ஏற்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. பிரயாணிகளுக்குச் சௌகரியங்கள் அளிப்பதற்காக ராஜ்ய சர்க்கார் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 105 லட்சங்களை ஒதுக்கியிருக்கிறது.

சுருங்கக்கூறின் அதிகரித்துப்போகும் வெளிநாட்டுப் பிரயாணிகளின் எண்ணிக்கை, ஓட்டல் இடவசதியில் பற்றாக்குறை, ஆடம்பர ஓட்டல்களின் பஞ்சம், ஓட்டல் தொழிலுக்குச் சர்க்கார் அளிக்க விரும்பும் உதவி ஆகியவைகளின் பலனாக இன்று புது ஸ்தாபனங்கள் அமைப்பதற்குப் பல வாய்ப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த நிலைமையில் தன்னைப் பொருத்திக் கொள்வதற்காகவே ஈஸ்ட் இந்தியா ஓட்டல்ஸ் லிமிடெட் கூட்டப்பட்டிருக்கிறது.

ஆதரவாளர்கள்

இந்த கம்பெனியை ஆதரித்து ஆரம்பிப்பவர் ராய்பஹதூர் எம். எஸ். ஓபிராய். இந்த சேவைக்காக அவர் எந்தவிதமான லாபமோ அல்லது ஊதியமோ பெறுவதில்லை. ராய்பஹதூர் ஓபிராய் கம்பெனிக்காக, சர்க்காருக்கு முன்பணமாகக் கொடுப்பதற்கும், கட்டிட காண்ட்ராக்டருக்கும், ஆர்கிடெக்டுகளுக்கும் கொடுப்பதற்காக ரூ. 7,77,000 கொடுத்திருக்கிறார். இந்தப் பணத்தை கம்பெனியிடமிருந்து திரும்பிப் பெறுவதற்கு அவருக்கு அருகதை உண்டு. மேலும் கம்பெனிக்காகச் செய்து கொள்ளப்படும் காண்ட்ராக்டுகளின் எல்லாப் பொறுப்புகளுக்கும் கம்பெனியிடமிருந்து நஷ்ட ஈடு பெற உரிமை உண்டு.

ஓபிராய் கோஷ்டியின் ஆதரவு

இந்த இரண்டு ஓட்டல்களுக்கும் ஓபிராய் ஓட்டல் சங்கிலித் தொடரின் ஆதரவு அளிக்கப்படும். இந்த ஓபிராய் ஓட்டல்கள் சர்வதேசப் புகழும் குறிப்பாக ஐரோப்பாவிலும் யு. எஸ். ஏ.விலும் பிரயாண ஏஜண்டுகளிடம் தொடர்பு உள்ளவை. ஒரே ஒரு ஓட்டலுக்குத் தன் சொந்த முயற்சிகளிலேயே வெற்றிபெறுவது மிகவும் சிரமமான காரியமாகும். ஆனால் ஒரு கோஷ்டி ஓட்டல்களுக்கு, கோஷ்டி நிர்வாக அனுகூலங்களுடன் முதல் போட்டவர்களுக்கு வெற்றியையும் பந்தோபஸ்தையும் அளிக்கும். ஈஸ்ட் இந்தியா ஓட்டல்ஸ் லிமிடெட்டின் இரண்டு ஓட்டல்களின் நிர்வாகமும் 1956 கம்பெனிகள் சட்டத்தின் விதிகளுக்குட்பட்டு மானேஜிங் ஏஜண்டுகளிடம் ஒப்படைக்கப்படும், மானேஜிங் ஏஜண்டுகள் முதல் வருஷ நடவடிக்கைகளுக்காக எந்தவிதமான ஊதியத்தையும் கோரமாட்டார்கள்.

ஓபிராய் ஓட்டல்கள்

இந்தியா

1. ஓட்டல் இம்பீரியல், புதுடில்லி.
2. ஓட்டல் செஸில், சிம்லா.
3. மெய்டன்ஸ் ஓட்டல், டெல்லி.
4. ஸ்விஸ் ஓட்டல், டெல்லி.
5. ஓட்டல் மவுண்ட் வியூ, சாண்டிகர்.
6. கிராண்ட் ஓட்டல், கல்கத்தா.
7. ஓட்டல் மவுண்ட் எவரஸ்ட், டார்ஜிலிங்.
8. பாம் பீச் ஓட்டல், கோபால்பூர். ஆன்-ஸீ.
9. ஓபிராய் பாலஸ் ஓட்டல், ஸ்ரீநகர், காஷ்மீர்.
10. கிளார்க்ஸ் ஓட்டல், சிம்லா.

பாகிஸ்தான்

11. பாலெட்டிஸ் ஓட்டல், லாகூர்.
12. பிளாஷ்மன்ஸ் ஓட்டல், ராவல்பிண்டி.
13. டீன்ஸ் ஓட்டல், பெஷாவார்.
14. செஸில் ஓட்டல், முரீ.

கிழக்கில் 14 ஆடம்பர ஓட்டல்கள் அடங்கிய மிகப்பெரிய சங்கிலித் தொடர் ஸ்தாபனமான ஓபிராய் கோஷ்டி சுக சௌகரியத்திற்குச் சகல வசதிகளையும் அளித்துவருவதால் சர்வதேசப் பிரயாணிகளின் விடுதியாகப் புகழ்பெற்றிருக்கிறது. அதன் தனிப்பட்ட சேவைக்கும், பரிவுக்கும், நேசபாவத்திற்கும் உலக முழுவதும் பிரசித்திபெற்றிருக்கிறது. இந்த ஓட்டல்களின் நிர்வாகத்தின் முக்கிய நிர்வாகியாக ஸ்ரீ ஓபிராய் பல வருஷங்களாகத் தாம் பெற்ற பரந்த அனுபவத்தை ஈஸ்ட் இந்தியா ஓட்டல்ஸ் லிமிடெட்டுக்கு அளிக்க முன் வந்திருக்கிறார். அவருடைய மேற்பார்வையிலும் நிர்வாகத்திலும் கம்பெனி அலுவல்களை ஆரம்பித்த சமயத்திலிருந்தே வெற்றி அடையப்போவது திண்ணம். ஆரம்பக் காலத்தில் கம்பெனியின் நலன்களைக் கவனித்துக்கொள்வதற்காக ஸ்ரீ ஓபிராயிடம் இப்போது வேலையிலிருக்கும் சில ஊழியர்களின் அனுபவப் பலனும் கிடைக்கும். இந்தியமயமாக்கும் கொள்கைக்கேற்ப இளைஞர்களை வெளிநாடுகளில் ஓட்டல் பள்ளிகளில் பயிற்சிக்கு அனுப்புவதற்காக ஒரு திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. இதனால் கம்பெனிக்கு அனுபவமும் தேர்ச்சியும் பெற்ற ஊழியர்கள் இருப்பார்கள்.

இன்டர்-கான்டினென்டல் ஓட்டல்ஸ் கார்ப்பரேஷன் (யு. எஸ். ஏ.) ஒத்துழைப்பு:

பான் அமெரிக்கன் ஒர்ல்ட் ஏர்வேஸின் சொந்தமான சப்ஸிடியரி கம்பெனியாக இருக்கும் இன்டர்-கான்டினென்டல் ஓட்டல் கார்ப்பரேஷன், அமெரிக்க சர்க்கார் கேட்டுக் கொண்டதற்கிணங்க, குறிப்பாக வெளிநாடுகளில் புதிய ஓட்டல்களை திட்டமிட்டு நிர்மாணித்து நிதி உதவி அளித்து நடத்துவதற்காகச் சில வருஷங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டது. சிநேகபாவமான அந்நிய தேசங்களின் பொருளாதார அமைப்பை அபிவிருத்தி செய்வதற்கான யு. எஸ். சர்க்காரின் கொள்கையை யொட்டி 'சர்வதேச ஒத்துழைப்பு நிர்வாகத்தினர்' பல நாடுகளில் தொழில் துவக்க உதவித் திட்டத்தை நடத்தும்படி பான் அமெரிக்கன் ஒர்ல்ட் ஏர்வேஸுக்கு அதிகாரம் அளித்தது.

பான் அமெரிக்கன் ஒர்ல்ட் ஏர்வேஸ் ஒன்றுதான் தற்சமயம் உலகைச் சுற்றிலும் விமான பிரயாண சர்வீஸை நடத்துகிறது. இந்தியாவும் குறிப்பாகப் புது டெல்லியும் உலக சுற்றுப் பிரயாணத்தில் கவர்ச்சிகரமான ஸ்தலங்களாக இருக்கின்றன. பான் அமெரிக்கன் ஒவ்வொரு வாரமும் 5 உலக சுற்றுப் பிரயாணங்களை ஒவ்வொரு திசையிலும் நடத்துகிறது. பிரதி ஒரு திசைப் பிரயாணத்தின்போது 84 நாடுகளில் இறங்கி அமெரிக்கச் சுற்றுப் பிரயாணிகளின் மொத்தத் தேவைகளில் 80% பூர்த்தி செய்கிறது. அதன் பிரயாணிகளின் சௌகரியங்களையும் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்காக உலகின் பல பாகங்களிலும் முதல்தரமான ஓட்டல்களை நிறுவியிருக்கிறது.

பான் அமெரிக்கன் ஒர்ல்ட் ஏர்வேஸ் அதன் உலக சுற்றுப் பிரயாணத்துக்காக 1958 முதல் புதிய ஜெட் விமானங்களை உபயோகப்படுத்தப் போகிறது. இதர விமானக்

கம்பெனிகளும் இதைப் போன்ற விமானங்களை விடப்போகின்றன. இந்த விமானங்கள் ஒவ்வொன்றிலும் 120 பிரயாணிகள் ஒரே சமயத்தில் பிரயாணம் செய்யலாம். இது இப்போதுள்ள விமானங்களின் கொள்ளளவைக் காட்டிலும் 100% அதிகமானது. ஒரு பூர்வாங்க ஆராய்ச்சியில், 1955-ல் இருந்ததைக் காட்டிலும் 200% அதிகமான பிரயாணிகள் போக்குவரத்து எதிர்பார்க்கப்படுகிறது. பான் அமெரிக்கன் ஓர்ல்ட் ஏர்வேஸ் இந்தியாவில் அமெரிக்க தரங்களுக்குச் சமமான முதல் தர ஓட்டல் வசதியைப் பெறுவதில் ஆவல் கொண்டிருக்கிறது. இந்தக் கம்பெனி விமானப் பிரயாணிகளுக்கும் அதன் சிப்பந்திகளின் உபயோகத்துக்காகவும் அத்தகைய முதல்தரமான வசதியைச் செய்து கொடுக்கும் நிலையில் இருக்கிறது.

ஓட்டலை ஆரம்பிக்கிறவர்கள் புதுடெல்லியின் ஓபிராய் ஓட்டல்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்டின் நிர்வாகத்தில் இருக்கும் ஓட்டல்களுக்கு இன்டர்-கான்டினென்டல் ஓட்டல்ஸ் கார்ப்பரேஷனின் ஆதரவு பெறும் நோக்கத்துடனும் அவர்களின் காலத்துக்கேற்ற தொழில் நுணுக்க ஞானத்தைப் பெறும் நோக்கத்துடனும் அந்த கார்ப்பரேஷனுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி வருகிறார்கள். இந்த ஏற்பாடுகள் மூலம் புதிய கம்பெனிக்கு அதன் ஓட்டல்களுக்குத் தவறாமல் ஜனங்கள் விஜயம் செய்வது காரிய சாத்தியமாகும். மேலும் இந்த ஏற்பாடுகள் மூலம் இந்திய சிப்பந்திகளுக்கு யு. எஸ். ஏ.வில் பயிற்சி அளிக்கப்படும். இன்டர்-கான்டினென்டல் ஓட்டல்ஸ் அவர்களின் தொழில் நுணுக்க சிப்பந்திகளை அவசியமானால் ஆரம்பக் காலத்தில் கொடுத்துதவும். மேலும் கம்பெனிக்கு, பான் அமெரிக்கன் ஓர்ல்ட் ஏர்வேஸின் எல்லா 400 காரியாலயங்கள் முழுவதிலும் டெலி-டைப் முறையில் ரிசர்வேஷன் செய்யும் வசதிகள் அளிக்கப்படும்.

சந்தாதாரர்களுக்கு விசேஷ சலுகைகள்

ப்ரிபரன்ஸ் மற்றும் சாதாரண பங்குகளின் ஒவ்வொரு சந்தாதாரருக்கும் அவர் கேட்டுக் கொள்வதன் பேரில் ஓபிராய் தங்கக் கார்டு வழங்கப்படும். இந்தக் கார்டு வைத்திருப்பவர்கள் எல்லாச் சௌகரிய வசதிகளுக்கும் அருகதை பெறுவதுடன் புதுடெல்லியிலும் ஸ்ரீநகரிலும் இருக்கும் கம்பெனியின் ஓட்டல்களிலும் மற்றும் இதர இடங்களில் பிற்காலத்தில் கட்டப்படும் அல்லது வாங்கப்படும் ஓட்டல்களிலும் அறைகளுக்கான கட்டணங்களில் 10% தள்ளுபடி பெறுவார்கள். மேலும் இந்த ஓபிராய் தங்கக்கார்டு வைத்திருப்பவர்களுக்கு இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் கோஷ்டியைச் சேர்ந்த இதர எல்லா ஓட்டல்களிலும் மேற்கூறிய 10% தள்ளுபடி அளிக்கப்படும். இந்தச் சலுகைகளைத் தவிர தங்கக் கார்டு வைத்திருப்பவர்களுக்குக் கம்பெனியின் ஓட்டல்களிலும் இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் ஓபிராய் கோஷ்டியைச் சேர்ந்த இதர எல்லா ஓட்டல்களிலும் தனிப்பட்ட முறையில் விசேஷமான சேவையும் கவனிப்பும் அளிக்க வாக்களிக்கப்படுகிறது. இந்த ஒப்பற்ற சேவையின் காரணமாக, தங்கக் கார்டு வைத்திருக்கும் ஒவ்வொருவருக்கும் இந்த ஓட்டல்களில் வந்து தங்கும் காலத்தில் முதலாளியின் ஸ்ரத்தை ஏற்படும். ஒரு தங்கக் கார்டு வழங்கப்பட்ட தேதியிலிருந்து 5 வருஷங்களுக்குச் செல்லாகும். கம்பெனிகளாயிருந்தால் அவர்கள் இந்தத் தங்கக் கார்டின் உபயோகத்துக்கும் சலுகைகளுக்காகவும் ஒரு நபரை நியமிக்க வேண்டும். தனி நபர்கள் அல்லது இதரர்கள் பங்குகளைக் கூட்டுப் பெயர்களில் வைத்திருந்தால் முதலில் கூறப்பட்டிருக்கும் பெயருக்கே தங்கக் கார்டை உபயோகிக்கவும் சலுகைகளை அநுபவிக்கவும் அருகதை அளிக்கப்படும்.

வெளியீட்டின் வசூல்கள்

டெல்லி மற்றும் காஷ்மீரில் ஓட்டல் திட்டங்களுக்கு, அவைகளின் எல்லாத் துணை ஸ்தாபனங்களுடன் அபிவிருத்தி செய்யப்பட்ட பிறகு மொத்தம் ரூ. 1,25,00,000 செலவாகும். உடனடியாகத் தேவைப்படும் தொகையின் மதிப்பு ரூ. 1,00,00,000. ஆனால் இந்தத் தொகைக்குள் திட்டத்தைப் பரிபூரணமாக நிறைவேற்றி விடலாம் என்பதை அழுத்தந் திருத்தமாகக் கூறவேண்டும். இதனால் துணை ஸ்தாபனங்கள் இல்லாமல் ஓட்டல் வியாபாரம் எந்த விதத்திலும் பின்னடையாது. ஏனென்றால் இந்த ஸ்தாபனங்களைப் பிற்காலத்தில் ஏற்படுத்திக் கொண்டாலும் போதுமானதுதான். ஆனால் இவைகள் ஓட்டல்களின் திறமையையும் வருவாயையும் பெரிதும் உயர்த்தும் என்பதில் சந்தேகமே இல்லை. மொத்த மூலதனச் செலவு கீழ்க்கண்டவாறு இருக்கும்.

பங்கு மூலதனம் மூலம்

(A) 30,000, 6% வரியில்லா க்யுமுலேடிவ் ப்ரிபரன்ஸ் பங்குகள், ஒவ்வொன்றும் ரூ. 100 வீதம்	ரூ.	30,00,000
7,00,000 சாதாரண பங்குகள் ஒவ்வொன்றும் ரூ. 10 வீதம்	ரூ.	70,00,000
	ரூ.	1,00,00,000

(B) கம்பெனியின் சொத்துக்களின் மீது, டைரக்டர்களாக முடிவு செய்யப்படும் பிரகாரம் ரூ. 25 லட்சங்களுக்கு டிபென்ச்சர்களை வழங்கி அல்லது கம்பெனியின் பாங்கர்களிடமிருந்து அல்லது இதர இனங்களிலிருந்து அத் தொகையைக் கடன் வாங்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய கடனை மார்க்கெட் நிலவரங்களை அனுசரித்து வருஷத்துக்கு 6%க்கு மேல் போகாத வட்டி விகிதத்தில் பெறமுடியும் என்று டைரக்டர்கள் எதிர்பார்க்கிறார்கள். தற்சமயம் கடனை ஓட்டல் திட்டம் பூர்த்தியான பிறகு அல்லது பூர்த்தியாகும் கட்டத்திலும் வியாபாரம் முழு அளவுக்கு நடந்து கொண்டிருக்கும் ஒரு பிற்காலத் தேதியில் வாங்குவதற்கு யோசனை செய்யப்பட்டிருக்கிறது. பிற்காலத்தில் வாங்குவதால் லாபங்களைக் கொண்டு வட்டி செலுத்துவதுடன் கடன் அசல் தொகையைத் திருப்பிக் கொடுப்பதற்காக வருஷத்துக்கு ரூ. 2½ லட்சங்கள் வீதம் ஒதுக்கி வைக்கவும் முடியும்.

(C) ரூ. 4,40,000 என்று மதிப்பிடப்பட்டிருக்கும் செலாவணி மூலதனத்துக்காக ஸ்ரீநகரில் நடத்தும் ஓட்டலின் லாபத்தில் ஒரு பாகத்திலிருந்தும் மானேஜிங் ஏஜண்டுகளால் வட்டியில்லாமல் கடன் கொடுக்கப்படும் பணத்திலிருந்தும் கொடுக்கப்படும்.

நிதிகள் கீழ்க்கண்ட முறையில் செலவு செய்யப்படும் :

(a) புது டெல்லியில் ஓட்டல் கட்டுவதற்கு

நிலமும் கட்டடமும்	ரூ.	54,81,210
எலக்டிரிகல் மற்றும் சானிட்டரி இன்ஸ்டலேஷன்கள், லிப்டுகள், ஏர்கண்டிஷனிங் (உத்தேசச் செலவு)	ரூ.	33,00,000
பர்னிச்சர், பீங்கான், கட்லரி, கண்ணாடிப் பண்டங்கள், ஜமுக்காளங்கள், சமையல் பாத்திரங்கள், லினன், அடுப்புகள், லாண்ட்ரி இயந்திரம் முதலியன (உத்தேசச் செலவு)	ரூ.	19,68,790
(b) ஸ்ரீ நகரில் ஒபிராய் பாலஸ் ஓட்டலின் ஆஸ்திகள்	ரூ.	15,10,655
(c) இந்த வெளியீட்டிற்கான செலவுகள்	ரூ.	3,00,000
(d) செலாவணி மூலதனம் (உத்தேசத் தொகை)	ரூ.	4,39,345
	ரூ.	1,30,00,000

உத்தேச லாபங்கள்

புது டெல்லியில் ஒபிராய் ஓட்டல் கோஷ்டியைச் சேர்ந்த ஓட்டல் இம்பீரியலின் வியாபாரத்தில் கிடைக்கக்கூடிய லாபங்களைக் கொண்டு நம் லாபங்களை உத்தேசமாக நிர்ணயித்துக் கொள்ளலாம். இந்த ஓட்டலுக்கு 1952-53, 1953-54, 1954-55 மற்றும் 1955-56 ஆண்டுகளில் கிடைத்த வருமானமும் ஏற்பட்ட செலவும் கீழே அட்டவணையில் சுருக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. இந்த எண்கள் மேற்கூறிய ஓட்டலுக்குச் சொந்தக்காரர்களான அஸோஸியேடட் ஓட்டல்ஸ் ஆப் இந்தியா லிமிடெட்டின் கணக்குப் புத்தகங்களிலிருந்து எடுக்கப்பட்டவை.

ஓட்டல் இம்பீரியல், புதுடெல்லி

மொத்த கட்டில்கள் 150

சராசரியாக உபயோகிக்கப்பட்டவை 92%

வருமானம்

(லட்சக் கணக்கில் ரூபாய்கள்)

	1952-53	1953-54	1954-55	1955-56
போர்டு & லாட்ஜிங் முதலியன	21·17	21·85	24·03	26·53
வாடகை மற்றும் சில்லறை இனவரவுகள் முதலியன	1·94	1·79	2·68	3·09
மதுபானங்கள் விற்பனை	6·11	6·06	6·55	7·33
	29·22	29·70	33·26	36·95

செலவுகள்

	1952-53	1953-54	1954-55	1955-56
உணவு, ஸ்தாபனம், வாடகை, வரிகள் இன்ஷ்யூரன்ஸ் மற்றும் சில்லறை இனங்கள்	20·28	20·34	23·23	20·27
	8·94	9·36	10·03	16·68

லாபம்

வருமானத்திற்கு ஏற்பட்ட செலவு விகிதாச்சாரம் 1952.53ல் 69.3; 1953-54ல் 68.4; 1954-55ல் 69.8; மற்றும் 1955-56ல் 54.8 ஆனபடியால் 1952-53, 1953-54 மற்றும் 1954-55 இந்த மூன்று வருடங்களில் சுமார் 30% லாபமும் 1955-56ல் சுமார் 45% லாபமும் கிடைத்திருப்பதை மேற்படி அட்டவணையிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

புதுடெல்லியில் கட்டப்படவிருக்கும் ஓட்டலில் 200 அறைகளும் 375 கட்டில்களும் இருக்கும். வருஷத்தில் நாள் ஒன்றுக்குச் சராசரியாக 230 பேர்கள் தங்குவார்கள் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ நகரில் இருக்கும் ஒபிராய் பாலஸ் ஓட்டலில் 90 அறைகளும் 150 கட்டில்களும் இருக்கின்றன. 8½ மாதங்களில் நாள் ஒன்றுக்குத் தங்கும் பேர்களின் சராசரி எண்ணிக்கை 80 என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

இந்த இரண்டு ஓட்டல்களிலும் தங்கும் நபர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட உத்தேச லாபங்கள் கீழே வருமானம் மற்றும் செலவு விவரமாதிரி நமூனாவில், ஓட்டல்திட்டம் முடிவடைந்தபிறகு முதல்வருஷத்திற்குக் காட்டப்பட்டிருக்கின்றன.

(ரூபாய்கள் லட்சக் கணக்கில்)

	புது டெல்லி ஓட்டல்	பாலஸ் ஓட்டல் ஸ்ரீநகர்	மொத்தம்
மொத்த இடவசதி	375 கட்டில்கள்	150 கட்டில்கள்	
சராசரியாக உபயோகிப்பவர்கள்	60%	55%	
வருமானம் :			
போர்ட் & லாட்ஜிங்	41.00	5.75	46.75
உணவு விற்பனை, வாடகை லாண்டரி மற்றும் சில்லறை இனவரவுகள்	13.10	.85	13.95
மதுபானங்கள் விற்பனை	...	1.00	1.00
	54.10	7.60	61.70

செலவுகள் :

உணவு, ஸ்தாபனம், வாடகை, வரிகள், இன்ஷ்யூரன்ஸ் & சில்லறை இனங்கள்	22.48	5.85	28.33
மொத்த லாபம்	31.62	1.75	33.37

கம்பெனி ரூ. 25லட்சங்களுக்குக் கடன் எழுப்பினால் லாப நஷ்ட நிலைமை பின் கண்டவாறு இருக்கும்:

மொத்த லாபம் ...	...	33.37
நீக்கப்படும் சரிக்கட்டல்கள் :		
தலைமை ஆபீஸின் மேல் செலவுகள்	.61	
கடனுக்கு வட்டி	1.50	
தேய்மானம்	5.00	7.11
		26.26
மதிப்பிடக்கூடிய லாபங்கள் 43% வரி செலுத்துவது நீங்கலாக	5.56	
6%க்கு மேற்பட்ட டிவிடெண்டுக்கு வரி	1.06	6.62
நிகர லாபம்		19.64
கடன் மீட்சி நிதி		2.50
		17.14
ப்ரிபரன்ஸ் பங்கு டிவிடெண்டு 6%	1.80	
சாதாரண பங்கு டிவிடெண்டு 15%	10.50	12.30
		4.84
ரிசர்வ் நிதி		4.00
பின்னால் சேர்க்கப்பட்டிருக்கிறது		.84

மேற்படி தழுனுவிலிருந்து தெரிவதென்னவென்றால் கம்பெனிக்குத் திட்டம் முடிந்த பிறகு முதல் வருஷத்தில் ரூ. 61.70 லட்சங்கள் வருமானமும் ரூ. 28.33 ஏற்பட்டு ரூ. 33.37 லட்சங்களுக்கு மொத்த லாபம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ரூ.33.37 லட்சங்களில் ரூ. 13.73 லட்சங்கள் கடனுக்கு வட்டி செலுத்துவதற்காகவும், தேய்மானம், தற்சமய விகிதத்தில் வரிக்காகவும் மேல் செலவுகளுக்காகவும் சரிக்கட்டப்பட்டிருக்கிறது. எனவே பங்குதாரர்களுக்குப் பகிர்ந்து கொடுப்பதற்காகக் கிடைக்கக்கூடிய நிகர லாபம் ரூ. 19.64 லட்சங்கள் என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

ப்ரிபரன்ஸ் டிவிடெண்டு அளவு:

உத்தேசிக்கப்பட்டுள்ள நிகர லாபம் ரூ. 19.64 லக்ஷங்களை வைத்துக் கொண்டு, சம்பாத்தியங்கள் மூலமாக, 6% வரி இல்லாத க்யுமுலேடிவ் ப்ரிபரன்ஸ் பங்குகள் போல் உள்ள டிவிடெண்டு 7½ மடங்குகளுக்கு மேல் கிடைக்கும்.

ப்ரிபரன்ஸ் பங்கு மூலதன டிவிடெண்டைச் செலுத்துவதற்குத் தேவையான உத்தேசிக்கப்பட்டுள்ள நிகர லாபம் ரூ. 19·64லிருந்து கழித்த பிறகு உள்ள லாபத் தொகை, வெளியிடப்பட்ட சாதாரண பங்கு மூலதனத் தொகையில் 25·5 சத விகித லாபமாகிறது. ஒவ்வொரு ஆண்டும் ரிசர்வ் நிதி ரூ. 4 லட்சம் மற்றும் கடன் மீட்சி நிதி ரூ. 2,50,000 ஒதுக்கிய பிறகு மேற்படி லாப நஷ்ட கணக்குப் பட்டியல்படி கம்பெனியானது 15% வரி யில்லாத டிவிடெண்டைச் சாதாரண பங்குதாரர்களுக்கு அறிவிக்கும் நிலையில் இருக்கும்.

60% சாரார் எடுத்துக் கொள்ளுதல் மற்றும் முதல் ஐந்து ஆண்டுகளுக்குத் தேய்மான உதவியைக் கணக்கு வைத்துக் கொண்டு முதல் ஆண்டுக்கான டு உத்தேச மதிப்பு எடுத்துக் கொள்ளப்படுகிறது. அடுத்த ஐந்து ஆண்டுகளில், சாரார் எடுத்துக் கொள்ளுதல், 80 முதல் 90% வரை ஏறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் வருமானம் 40 முதல் 50% அதிகரிக்கிறது. இந்த லாபம் விஸ்தரிப்பு ரிபேட் கைவிடப்படுவதின் காரணமாக, ஆறாவது ஆண்டிலிருந்து அதிகப்படி வரி சுமத்தப்படுவதற்கான பொறுப்பைச் சமாளிக்க கம்பெனிக்கு உதவுபடியாய் இருக்கும். இதனால் சீராக நடத்துவதற்கான வகையில் அல்லது டிவிடெண்டை அதிகப்படுவதற்கான வகையில் சூழ்நிலை மாறலாம்.

ஒய்ன் லாபங்கள்: நியூ டெல்லியில் மதுவிலக்கு அமுலுக்கு வரக்கூடுமாதலால், நியூ டெல்லி ஹோட்டலில் சாராய விற்பனைகளில் ஏற்படும் லாபம், மேற்படி லாபங்களில் சேர்க்கப்படவில்லை என்பது அறியப்பட வேண்டும். மதுவிலக்கு அமுலாக்கப்பட்டாலும், வீடுகளுக்கும், பர்மிட்தாரர்களுக்கும், வெளி நாட்டுக்காரர்களுக்கும் கம்பெனி சாராய விற்பனையை மேற்கொள்ளலாம். இந்தக் கூடுதலான வருமானம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டால் வருமானம் அதிகரிப்பதோடு மட்டுமின்றி, இன்னும் அதிகப்படியான டிவிடெண்டை கம்பெனி அளிப்பதற்கான வகை செய்யும்.

தேவையான பொது விஷயங்கள்

குறைந்தபக்ஷ சந்தா

டைரக்டர்கள் ஒதுக்கியிருக்கும் தற்போதைய வெளியீடு பற்றிய குறைந்தபக்ஷ சந்தா ரூ. 30,00,000.

1.	சொத்து வாங்கும் விலை செலுத்தியது	ரூ. 11,78,000 ரூ. 6,17,000	ரூ. 5,61,000
2.	பூர்வாங்கச் செலவுகள்		ரூ. 20,000
3.	எடுத்துக் கொள்ளாத விஷயங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் கம்பெனியால் கடன் வாங்கப்பட்ட தொகைகளைத் திருப்பிக் கொடுத்தது.		ரூ. 7,77,000
4.	செலாவணி நிதி		ரூ. 4,40,000
5.	அறிவிக்கும் வகை மற்றும் அதற்கான காரணத்துக்காக எந்தவகை செலவு மற்றும் ஒவ்வொரு இனத்திலும் உத்தேசத் தொகை: (100 அறைகளைக் கட்டி முடித்து பர்னிச்சர் சகிதம் பூர்ணமாக்கப்பட்டது)		ரூ. 27,02,000
			ரூ. 45,00,000
	கம்பெனியின் நிதியிலிருந்து சரிகட்டவிருக்கும் செலாவணி மூலதனம் மற்றும் மானேஜிங் ஏஜண்டுகளிடமிருந்து அட்வான்ஸ் போக ஏற்கனவே ஒதுக்கப்பட்ட பங்குகள்	ரூ. 5,00,000 ரூ. 10,00,000	ரூ. 15,00,000
			ரூ. 30,00,000

சொத்து சம்பந்தப்பட்ட காண்ட்ராக்டுகள்

1. அகில உலக சீநியில் ஒரு புது ஹோட்டல் கட்டுவதற்கு நியூ டெல்லியில் 6.32 ஏக்கர் விஸ்தீரணத்தில் ஒரு நிலத்தை கம்பெனிக்குச் சர்க்கார் ஒதுக்கியுள்ளனர். இந்த நிலம், டெல்லி மதுரா ரோடில், வடகிழக்கு மூலையில் வெல்லஸ்லி ரோடு கிராஸிங்கில், கோல்ப் விளையாட்டுக் கிளப்புக்கு ஒட்டினாற்போல் உள்ள இடத்தில் இருக்கிறது.

கம்பெனிக்கு விலாஸமிடப்பட்ட புது டில்லி லாண்டு அண்டு டெவலப்மெண்ட் ஆபீஸின் கடிதம் நெ. O-L தேதி 17-12-55ன்படி, கம்பெனிக்கு இந்த நிலம் குத்தகைக்கு விடப்பட்டதற்கான ஷரத்துகளும் நிபந்தனைகளும் கொடுக்கப்பட்டுள்ளன. குத்தகை இன்னும் சிறிது காலத்தில் முடிக்கப்படும். அதில் இவை அடங்கியவையாகும்.

(a) நிலத்திற்காக கம்பெனி கீழ்க்கண்டபடி செலுத்த வேண்டும்

(i) 5·46 ஏக்கர் விஸ்தீரணத்திற்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 2,00,000 வீதம் மொத்தம் ரூ. 10,92,000 இத்துடன் பிரீமியத்தின் 2½ சத விகித வருடாந்திர நில வாடகை ரூ. 27,300.

(ii) 0·86 ஏக்கர் விஸ்தீரணத்திற்கு, ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 1,00,000 வீதம் ரூ. 86,000 இத்துடன் பிரீமியத்தின் 2½ சத விகிதம் வருடாந்திர நிலம் வாடகை ரூ. 2,150.

(b) மொத்தப் பரப்பு மூன்றில் ஒரு பாகம் மட்டும் கட்டுமானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். மீதமுள்ள பரப்பு தோட்டங்கள், ரஸ்தாக்கள், கார் நிறுத்துமிடங்கள் முதலியவற்றுக்கு உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும். 0·86 ஏக்கர் பரப்புள்ள இடம், தோட்டத்தோடு சேர்த்துக் குளம் கட்டுவதற்காக உபயோகப்படுத்திக் கொள்ளப்படும்.

(i) கட்டிட நிர்மாண வேலை ஏற்கெனவே துவக்கப்பட்டுவிட்டது. கட்டிடத்தின் ஒரு பாகம் அக்டோபருக்குள் முடிக்கப்பட்டுவிடும். எல்லாக் கட்டுமானமும் 1957 மத்திக்குள் முடிவடைந்துவிடும்.

(ii) முதல் பாகம் ஹோட்டல்ஸ் (1938) பிரைவேட் லிட். மற்றும் இரண்டாவது பாகம் ராய் பகதூர் எம். எஸ். ஓபிராய் மற்றும் மூன்றாவது பாகம் கம்பெனி ஆகியவர்களுக்குள் செய்யப்பட்ட விற்பனைக்கான ஒப்பந்தம் 31-8-1956படி.

இந்த ஒப்பந்தப்பிரகாரம், ஸ்ரீநகரில் உள்ள ஹோட்டல்ஸ் (1938) பிரைவேட் லிமிடெட்டுக்குச் சொந்தமான சொத்துக்களை ரூ. 15,10,654-14-3 விலைக்கு இந்தக் கம்பெனி வாங்கலாம். இத்தொகை முழுவதும் செலுத்தப்பட்ட சம மதிப்புத் தொகை ரூ. 10 வீதம் 1,50,000 பங்குகளாக வெளியிட்டு வந்த ரூ. 15 லட்சத்தை ஒதுக்குவதன் மூலம் செலுத்தப்படும். பாக்கி ரூ. 10,654-14-3 ரொக்கமாகச் செலுத்தப்படும். கம்பெனிக்குச் சாதகமாக, 17-6-54, 12-11-54 தேதியிடப்பட்ட இரண்டு குத்தகைப் பத்திரங்களின்படி சொத்துக்களைப் பெறுவதற்காக நில சொந்தக்காரர் யுவராஜ் கரன் சிங் அவர்களின் சம்மதத்திற்கு உட்பட்ட விற்பனையாகும் இது. இந்தக் குத்தகைகள், ராய் பகதூர் எம். எஸ். ஓபிராய் பேரில் இருப்பதால் அவர் ஒப்பந்தத்திற்கு ஒரு பார்ட்டியாக நியமிக்கப்பட்டுள்ளார். கம்பெனி டைரக்டர்களான ராய் பகதூர் எம். எஸ். ஓபிராய் மற்றும் டி. ஆர். ஓபிராய் வெண்டார் கம்பெனியின் டைரக்டர்களுமாவர்.

இந்த வெளியீட்டிற்கான செலவுகள்

புரோக்கரேஜ், கமிஷன் உள்படப் பூர்வாங்கச் செலவுகள் உத்தேச மதிப்பு ரூ. 3,00,000.

டைரக்டர்களின் யோக்கியதாம்சமும் ஊதியமும்

ஒரு டைரக்டர் தன் யோக்கியதாம்சத்திற்காக, தன் சொந்தப் பெயரில் அல்லது எந்த நபருடன் கூட்டாக ரூ. 5,000 மதிப்பிற்கான கம்பெனியின் பங்குகள் வாங்கியிருக்க வேண்டும். ஒவ்வொரு போர்டு மீட்டிங்கிற்கும் ஆஜர் ஆனதற்காக, ஒவ்வொரு டைரக்டருக்கும் ஊதியமாக கம்பெனி நிதியிலிருந்து ரூ. 64 அளிக்கப்படும். போர்டு மீட்டிங்குகள் அல்லது போர்டு கமிட்டிகள் மற்றும் டைரக்டர்கள் என்ற ஹோதாவில் வேறு அலுவல்களாகச் சென்று திரும்புவதற்கான பிரயாணப்படி, ஹோட்டல் முதலான நியாயமான செலவுகளைப் பெறவும் உரிமை

யுள்ளவர்கள் ஆவார்கள். கம்பெனியின் ஆர்ட்டிகிள்ஸ் மற்றும் கம்பெனிகள் சட்டத்தின்படி இதர எல்லா ஊதியங்களும் நிர்ணயிக்கப்படும். கம்பெனி அலுவல் சம்பந்தமாகக் கல்கத்தாவிலிருந்து போய்த் தங்கியிருந்து அதிகப்படி சேவை புரியும் ஒரு டைரக்டர், சட்டப் பிரிவுகள் 198, 309 மற்றும் 310ன்படி டைரக்டர்கள் போர்டு தீர்மானிக்கும் ஊதியத்தைப் பெற உரிமையுடையவராவார். சட்டத்தின் 255 பிரிவின்படி, டைரக்டர்களின் எண்ணிக்கை 5-க்கு மேல் போனால் 2 எக்ஸ் அபீஷியோ டைரக்டர்களையும், மற்றும் மேற்படி எண்ணிக்கை 5-க்கு மேல் போகாவிடில் ஒரு எக்ஸ்-அபீஷியோ டைரக்டரையும் நியமிக்க மானேஜிங் ஏஜண்டுகளுக்கு அதிகாரமுண்டு.

மானேஜிங் டைரக்டர்கள்

சட்டப் பிரிவுகள் 316 மற்றும் 317ன்படி, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கம்பெனி மானேஜிங் டைரக்டர்களை போர்டு நியமிக்கலாம். சட்டப் பிரிவு 255ன்படி, இந்த மானேஜிங் டைரக்டர், வரிசைக் கிரமப்படி ரிடையர் ஆகமாட்டார். டைரக்டராக இல்லாவிட்டால் மானேஜிங் டைரக்டர் ஆக்கப்பட உரிமையில்லை. அவர் சட்டப் பிரிவு 309, 310 மற்றும் 311ன்படி, கம்பெனி பொது மீட்டிங்கில் தீர்மானிக்கிறபடி ஊதியத்தைப் பெறுவார். மானேஜிங் ஏஜண்டுகள் இருக்கும் வரை கம்பெனி மானேஜிங் ஏஜண்டுகளை நியமனம் செய்யாது.

மானேஜிங் ஏஜண்டுகள் :

26-5-49 ம் ஒப்பந்தத்தின்படி, ஒபிராய் ஹோட்டல்ஸ் (இந்தியா) பிரைவேட் லிட். அவர்கள் கம்பெனியின் மானேஜிங் ஏஜண்டுகள் ஆவர். நிகர லாபத்தில் 10% கமிஷன் அவர்களின் சேவையின் ஊதியமாக அளிக்கப்படும். கம்பெனி சம்பந்தமாகச் செலவிடும் எந்தத் தொகையையும் அளிக்கப்பட உரிமையுள்ளவர்கள் ஆவர்.

இந்த ஊதியம், கம்பெனிகளின் சட்ட விதிகளுக்குட்பட்டது. மானேஜிங் ஏஜண்டுகளின் வாக்களிக்கப்பட்ட மூலதனம் ரூ. நாலாயிரம் ஆகும். அதாவது ஒன்று ரூபாய் பத்து வீதம் நானூறு சாதாரண பங்குகள்.

டைரக்டர்கள் பொறுப்பு

ஸர் யு. என். ஸென் மற்றும் ஸ்ரீ எம். எல். கைத்தான் ஆகியோர் அஸோஸியேடட் ஹோட்டல்ஸ் ஆப் இந்தியா லிட். டைரக்டர்கள். இதில் ஹோட்டல் (1938) பிரைவேட் லிட். (ஸ்ரீநகர் ஹோட்டலிலுள்ள சொத்துக்கள் சம்பந்தப்பட்ட விற்பனையாளர்) ஒரு சப்ஸிடியரியாகும். கம்பெனி மற்றும் அஸோஸியேடட் ஹோட்டல்ஸ் ஆப் இந்தியா லிட். மற்றும் ஹோட்டல்ஸ் (1938) பிரைவேட் லிட். ஆகியவற்றின் மானேஜிங் ஏஜண்டுகள் ஒபிராய் ஹோட்டல்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் டைரக்டர் ஆவார் ராய்பஹதூர் எம். எஸ். ஒபிராய் அவர்கள். ஸ்ரீ டி. ஆர். ஒபிராய், ஒபிராய் ஹோட்டல்ஸ் (இந்தியா) பிரைவேட் லிட். அஸோஸியேடட் ஹோட்டல்ஸ் ஆப் இந்தியா லிட். மற்றும் ஹோட்டல்ஸ் (1939) பிரைவேட் லிட். ஆகிய ஸ்தாபனங்களின் டைரக்டர் ஆவார்.

சம்மதம்

கம்பெனியின் ஆடிட்டர்கள், பாங்கர்கள், புரோக்கர்கள் மற்றும் சட்ட ஆலோசகர்கள் ஆகியோர்களிடமிருந்து அவரவர்களின் சேவை சம்பந்தப்பட்ட மட்டில் எழுத்து மூலம் சம்மதம் வாங்கப்பட்டிருக்கிறது. ஆடிட்டர்களான மெஸர்ஸ்., ஜி. பாசு & கோ. தங்கள் சம்மதத்தைக் கொடுத்துள்ளனர். எந்தெந்த இடத்தில் வெளியாகியுள்ளதோ அங்கங்கே, தங்கள் அறிக்கைகளையும் சர்டிபிகேட்டையும் சேர்த்துக் கொள்வதற்கான தங்கள் சம்மதத்தை அவர்கள் வாபஸ் வாங்கிக் கொள்ளவில்லை.

முன் சொல்லப்பட்ட எழுத்து ஒப்பந்தங்கள், கீழ் குறிக்கப்பட்ட கண்ட்ராக்டுகளின் நகல்கள், பிராஸ்பக்டஸின் நகலுடன் இணைக்கப்பட்டு, மேற்கு வங்காள ரிஜிஸ்தரார் ஆப் கம்பெனீஸ் அவர்களிடம் ரிஜிஸ்ட்ரேஷனுக்காக டெலிவரி செய்யப்பட்டுள்ளது.

கண்ட்ராக்டுகள்

இந்தக் கீழ்க்கண்ட கண்ட்ராக்டுகள் (சாதாரண வியாபார முறையில் உள்ள கண்ட்ராக்டர்கள் தவிர) கம்பெனியால் அதன் சார்பில் செய்து கொள்ளப்பட்டுள்ளது. இவை காரிய சாத்தியமானவை ஆகலாம்.

(a) அதற்காக உள்ள ஒப்பந்தம் தேதி 31-8-1956 மற்றும் "சொத்து சம்பந்தப்பட்ட ஒப்பந்தங்கள்" என்ற தலைப்பில் இந்த பிராஸ்பெக்டஸில் வெளியாகியுள்ளது.

(b) நியூ டெல்லியில் உள்ள நில சம்பந்தப்பட்ட ஷரத்துக்கள் மற்றும் நிபந்தனைகள் உள்ள நியூ டெல்லி, லாண்டு & டெவலப்மெண்டு ஆபீஸரின் 17-12-55 தேதி கடிதம்.

(c) ஹோட்டல் கட்டடம் கட்டுவதற்காக, பில்டிங் கண்ட்ராக்டர்கள் மெஸர்ஸ் உத்தம்ஸிங் டக்கரல் & கோ. லிட். டெல்லி அவர்களிடம் உள்ள கடிதப் போக்குவரத்துக்கள்.

(d) ராய்பஹதூர் எம். எஸ். ஒபிராய் மற்றும் இண்டர் காண்டினெண்டல் ஹோட்டல்ஸ் கார்ப்பரேஷன் ஆகியவர்களிடம் உள்ள கடிதப் போக்குவரத்துக்கள்.

(e) மானேஜிங் ஏஜன்ஸி நிபந்தனைகள், ஊதியங்கள் முதலியன சம்பந்தமாக ஈஸ்ட் இந்தியா ஹோட்டல்ஸ் லிட். மற்றும் ஒபிராய் ஹோட்டல்ஸ் (இந்தியா) பிரைவேட் லிட். இடையே உள்ள 26-5-49 தேதிய மானேஜிங் ஏஜன்ஸி ஒப்பந்தம்.

புரோக்கர்கள்

ஒன்று ரூ. 10 வீதம் ஒரு சாதாரணப் பங்குக்கு அணா 4 வீதமும் ஒன்று ரூபாய் நூறு விலையுள்ள பிரிபரன்ஸ் பங்கு ஒன்றுக்கு ரூ. ஒன்று வீதமும் ஒதுக்கப்படும். மனுக்களில் தங்கள் முத்திரையிட்டு அனுப்பும் அங்கீகரிக்கப்பட்ட புரோக்கர்களுக்கு புரோக்கரேஜ் கொடுக்கப்படும்.

இவ்வெளியீட்டிற்கு, மெஸர்ஸ் மெர்வான்ஜீ பொமான்ஜீ தலால் மற்றும் மெஸர்ஸ் நர்பான்லிங் மேத்தா & கோ. ஆகியவர்கள் மானேஜிங் புரோக்கர்கள் ஆவர். அவர்களுக்கு அதிகப்படியாக, பொதுஜனங்களால் வாங்கப்படும் எல்லா பங்குகளிலும் சாதாரண பங்கு ஒன்றுக்கு 1 அணு விதமும், பிரிபரன்ஸ் பங்கு ஒன்றுக்கு 8 அணு விதமும் கமிஷன் தரப்படும்.

ஆடிட்டர்களின் யாதாஸ்து

ஈஸ்ட் இந்தியா ஹோட்டல்ஸ் லிமிடெட்டின் 31-3-56 உடன் முடிவான ஐந்து ஆண்டுகளின் கணக்கை நாங்கள் சரி பார்த்தோம். 1956ஆம் கம்பெனிகள் சட்டம் பிரிவு 24 பகுதி II ஷெட்யூல் IIன்படி நாங்கள் கீழ்வருமாறு அறிவிக்கிறோம்.

இந்த ஆண்டுக்கான வரவு செலவுக் கணக்கு பார்க்கப்பட்டு, எல்லா செலவினங்களையும் செய்த பிறகு கீழ்க்கண்ட முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

ஈஸ்ட் இந்தியா ஹோட்டல்ஸ் லிமிடெட்

மார்ச் 31உடனோடு முடிவானது		1952	1953	1954	1955	1956
வருமானம்	...	...	...	...	...	...
செலவுகள்	...	8,092	256	270	270	6,191
நஷ்டம்	...	8,092	256	270	270	6,191

31-3-56 உடன் முடிவான ஐந்து ஆண்டுகளில் எந்த ஆண்டிலும் டிவிடெண்டுகள் அளிக்கப்படவில்லை என அறிவிக்கிறோம். 31-3-1956 அன்று உள்ளபடி, தணிக்கை முதல் தேதியன்று ஆடிட்டர்களால் அறிவிக்கப்பட்டபடி கம்பெனியின் நிகர ஆஸ்திகள் பின்வருமாறு:

தற்கால ஆஸ்திகள் :

கண்ட்ராக்டர்களுக்கு அட்வான்ஸ்	ரூ.	1,932
மானேஜிங் ஏஜண்டுகளுடன் கரண்ட் அக்கௌண்ட்	ரூ.	7,798
பாங்கில் பாக்கி	ரூ.	139
	ரூ.	9,869
பூர்வாங்கச் செலவுகள்	ரூ.	13,125
	ரூ.	22,994

தற்காலப் பொறுப்புகள் மற்றும் ஒதுக்குதல்கள் போக :

ஸண்ட்ரி க்ரெடிட்டர்கள்	ரூ.	1,665
31-3-56ல் நிகர ஆஸ்திகள்	ரூ.	21,329
மேல் கூறப்பட்ட நிகர ஆஸ்திகள் விவரம் பின்வருமாறு:	ரூ.	21,329
ஒன்று ரூ. 10 வீதம் 1,00,756 சாதாரண பங்குகள் உள்ள பங்கு மூலதனம், -/8/- ஒரு பங்குக்குக் கோரப்பட்டது	ரூ.	50,378
அட்வான்சாகப் பெற்றது	ரூ.	4,750
	ரூ.	55,128
லாப நஷ்டக்கணக்கில் உள்ள தொகை போக	ரூ.	33,799
	ரூ.	21,329

ஜீ. பாஸு அண்டு கோ., ஆடிட்டர்கள்.

மேற்பார்வை

மெமோரண்டம், ஆர்டிகிள்ஸ் ஆப் தி கம்பெனி, மத்திய சர்க்கார் ஒப்பந்த உத்தரவு, ஆடிட்டர்கள் அறிக்கை மற்றும் சர்டிபிகேட், மேலே கூறப்பட்ட கடிதப் போக்குவரத்துகள், ஆடிட்டர் அறிக்கைகள் வெளியிடுவதற்கு உதவிய பாலன்ஸ் ஷீட்டுகள் மற்றும் வரவு செலவுக் கணக்குகள் ஆகியவைகளின் நகல்களை, கம்பெனியின் ரிஜிஸ்டர்ட் ஆபீஸில், ஆபீஸ் நேரத்தில் எந்த வேலை நாளிலும், சந்தா ஜாபிதா மூடப்படும் வரை வந்து பார்வையிடலாம்.

14—9—56

கீழ்க்கண்ட டைரக்டர்களால் கையொப்பமிடப்பட்டது:

1. ஸர் திரன் மித்ரா Kt.
2. ஸ்ரீ எம். எல். கைத்தான்
3. ஸ்ரீ ராம்நிவாஸ் ராம்நாராய்ண் ரூயா
4. ஸ்ரீ முரார்ஜி வைத்யா
5. ராய் பஹதூர் எம். எஸ். ஓபிராய்
6. ஸர் உஷா நாத் ஸென்
7. ஸ்ரீ டி. ஆர். ஓபிராய்.

தோழியின் கடிதம்

சொந்த வீடு அவசியமா?

வசுமதி ராமசாமி

அன்புக்குரிய சுஜாதா,

சொந்தமாக வீடு கட்டுவது பற்றி என் அபிப்பிராயத்தைக் கேட்டிருக்கிறாய். நிதானமாக யோசித்துச் செய்ய வேண்டிய காரியம்.

சொந்தமாக வீடு ஒன்று கட்டுவது அவசியமா என்பது ஒரு கேள்வி. வசதியுள்ளவர்களுக்கு அவசியம்தான். பறவைகளெல்லாம் ஒரு கூடு கட்டிக் கொள்ளும்போது நமக்கு மட்டும் வீடு அவசியமில்லையா?

வீடு கட்டுவது லாகிரி போன்றது தான். நாம் எவ்வளவு ரூபாயில் கட்டுவதெனத் தீர்மானிக்கிறோமோ அநேகமாக அதைவிட அதிகமாகத்தான் செலவு ஆகும். எனக்குத் தெரிந்த ஒரு பெரியவர் வீடு கட்டினார். அவருடைய ஒரே பிள்ளையும் வெளியூரில் இருந்தான். ஆனால் அவர் வீட்டுக்கு யார் வந்தாலும் புதிதாக ஒரு அறையோ, தாழ்வாரமோ கட்டுவதைப் பற்றித்தான் பேசுவார். வீடு கட்டும் ஆசையில் தம் சிறிய குடும்பத்துக்கு எவ்வளவு இடம் தேவையென அவரால் நிர்ணயிக்க முடியவில்லை.

வீடு கட்டும் விஷயத்தில் நம் வீட்டுப் புருஷர்கள் மனப்பான்மை விநோதமானது. வீட்டுக்கு வந்தவர்கள் உட்காருவதற்கு அழகான கூடம் அமைப்பார்கள். பிள்ளைகள் படிப்பதற்கென்று அறைகள் கட்டுவார்கள். வீட்டை அழகுபடுத்த எவ்வளவோ செலவு செய்வார்கள். ஆனால் சமையல் அறை கட்டும்போது மாத்திரம் அவர்கள் மனப்பான்மை குறுகிப் போய் விடும். சமையலறையைச் சின்னதாகக் காற்றோட்டமும் வெளிச்சமும் குறைவானதாகக் கட்டுவார்கள்.

அதுவரை ஆன செலவுக்குச் சிக்கனம் செய்யச் சமையல் அறையும் ஸ்நான அறையும்தான் அவர்களிடம் அகப்பட்டுக் கொள்ளும். ஓரடி, இரண்டடி வித்தியாசத்தில் அபிப்பிராயபேதம் ஏற்படும்! ஒரு வீட்டுக்கு மற்ற எல்லாப் பாகங்களையும் விடச் சமையல் அறை மிகவும் முக்கியமானதல்லவா? அங்கே நல்ல காற்றோட்டம், சமைப்பவர்கள் சௌகரியத்துக்கும் சுகாதாரத்துக்கும் அவசியமாக இருக்கிறது.

சமீபத்தில் ஒரு சகோதரி அழகான புது வீடு கட்டியிருக்கிறார். சமையல் அறையை நன்றாகக் கவனித்து அமைத்திருக்கிறார். மிகவும் வசதியாக இருக்கும் அவர்கள் சமையல் அறையைப் பார்க்க மிகவும் சந்தோஷமாக இருக்கிறது.

புதிதாக வீட்டைக் கட்டி விட்டால் மட்டும் மனம் நிரம்பி விடுவதில்லை. அதற்குத் தகுந்த பொருள்களாகச் சேகரித்து அலங்காரம் செய்வதை முக்கியமாகவே நினைக்கின்றோம்.

ஒரு வீட்டில் முன் கூடத்தில் இடமின்றிப் பொம்மைகள், மான் கொம்பு, பூத்தொட்டி எல்லாம் நிரப்பி வைத்திருந்தார்கள். இவற்றை அவ்வளவையும் எடுத்துத் துடைத்து வைப்பது பெரியவேலையாக இருக்கிறதென்று அந்த அம்மாள் பெருமைப்பட்டுக் கொண்டார். இது வேண்டாத வேலையல்லவா?



தில்லியில் எப்படியோ? இங்கே சென்னையில் வீட்டின் அலங்காரப் பொருள்களில் கண்ணாடிப் பெட்டிகளில் மீன் குட்டிகள் வைப்பது என்று ஒரு புது வழக்கம் இருக்கிறது. பெரிய வீடுகளில் மட்டுமல்ல. ஒரு சின்ன டீக் கடையில் கூடக் கண்ணாடி டம்ளர்களிலாவது சின்ன மீன் குஞ்சுகளைப் போட்டு வைக்கிறார்கள். அவை சூரிய வெளிச்சத்தில் குளத்திலும், நதியிலும், குதித்துக் கொண்டு ஆனந்தமாக இருக்குமே.

அப்படியிருக்க அவைகளை நாம் காப்பாற்றுவதாக அர்த்தமா? அந்தப் பெட்டியில் பெரிய மீன்கள் சின்னக் குஞ்சுகளை ஆகாரம் போதாமல் தின்றுவிடுவதைக் கண்டு ஏங்க வேண்டியிருக்கிறது. இது வீட்டுக்கு அலங்காரமா?

இப்படிக்கு,

பூமாதேவி


"உங்கள் பற்களை பாதுகாறுங்கள்!"
விஸ்டம் பல் வைத்தியர் எப்படி என்று கூறுகிறார்
மிகச் சீரான பற்களும் சில சமயங்களில் ஈறுகளில் தொத்து வியாதி காரணமாக பாழாகி யிருக்கின்றன. இரவிலும் காலையிலும் 'விஸ்டம்' டூத் ப்ரஷால் பற்களை நன்றாகத் துலக்கி பாதுகாறுங்கள்...
முகவாய் எலும்பைச் சுற்றியுள்ள ஆயிரக்கணக்கான நுண்ணிய நார்களால் பற்கள் உறுதியாய் நிற்கின்றன. ஒழிந்த ஈறுகளுக்குள் கிருமிகள் புகுந்து இந்த நார்களைத் தாக்கி அழித்து விடுகின்றன.
இந்த நிலைமை (பயோரியா) உடனே தடுக்கவேண்டும். இல்லையேல் பற்கள் தளர்ந்து கொட்டிவிடும். ஈறுகளில் இரத்தம், மற்றும் வீக்கம் சுருங்கல் ஆகியவை ஆரம்ப அறிகுறிகள்.
இந்த அறிகுறிகளைக் கண்டதும் உடனே பல் வைத்தியரிடம் சென்று வைத்தியம் செய்துக் கொண்டு பற்களை பாதுகாறுங்கள். உங்கள் ஈறுகள் சகஜமாக ஆரோக்கியமாயிருந்தாலும் தினமும் டூத் ப்ரஷால் தேய்த்தால் ஈறுகள் கெடாமல் இருக்கும்.
உங்கள் பற்களை ஆரோக்கியமாய் வையுங்கள். இரவிலும் காலையிலும் விஸ்டம் ப்ரஷால் துலக்குங்கள்! துலக்க சுலபமாயிருக்க அதன் சிறிய தலை மற்றும் வளைந்த கைப்பிடியைப் பால் வாயில் மூலை முடுக்குகளிலும் புகுத்தலாம்; அதன் விறைப்பான நைலான் குச்சுகள் பல இடுக்குகளில் நுழையும். பொருத்தமான வடிவம் கொண்ட விஸ்டம் டூத் ப்ரஷை உபயோகியுங்கள்!
காலாகாலத்தில் உங்கள் பல் வைத்தியரை காணுங்கள்
Wisdom REGD.
நீடித்து உழைக்கும் டூத் ப்ரஷ்
79A

நெய்ச் சாமியார்

ராஜாஜி



அருணாசலஞ் செட்டி கிராமங்களில் அங்கங்கே சென்று நல்ல நெய் குறைந்த விலைக்கு வாங்கிச் சேர்த்துப் பட்டணத்தில் நல்ல விலைக்கு விற்பான். இப்படி அவன் கொஞ்சம் கொஞ்சமாகப் பணம் சேர்த்தான்.

பணம் சேரச் சேர 'இன்னும் வேண்டும், இன்னும் வேண்டும்' என்று ஆசை அதிகமாயிற்று. நெய்யோடு கொஞ்சம் கடலையெண்ணெயும் சேர்த்து விற்க ஆரம்பித்தான். நல்ல லாபம் கிடைத்தது.

அவனிடம் நெய் வாங்கியவர்கள் 'ஏன் நெய் இப்போது முன்போல் இல்லை?" என்று கேட்டால், "கறக்கும் பசுக்களுக்கு இப்போது கிராமங்களில் நல்ல தீனி போடுவதில்லை. பசும்பாலே கெட்டுப் போச்சு!" என்பான்.

எல்லா வியாபாரிகளும் அருணாசலஞ் செட்டியோடு போட்டி போட்டு நெய்யில் எண்ணெய் கலந்து விற்க ஆரம்பித்தார்கள்.

"இப்படி ஊர் கெட்டுப் போச்சே!" என்று தெற்கேயிருந்து வந்த ஒரு சாமியார் எல்லாருக்கும வேதாந்த உபதேசம் செய்து வந்தார்.

அருணாசலஞ் செட்டி "கடவுள் இல்லை" என்றான்.



கடவுள் இருந்தால் நெய்யில் எண்ணெய் சேர்த்து விற்பவன் தண்டனை அடைவான். ஆனபடியால் அருணாசலஞ் செட்டிக்கு இந்த நிச்சயம் ஏற்பட்டது. கடவுள் இல்லை என்று தானும் உறுதியாக நம்பினான், பிறருக்கும் உபதேசித்தான்.

"அப்பனே, மேலே பார், சுற்றிப் பார், உலகத்தைப் பார், கடவுள் இல்லை என்று ஏன் சொல்லுகிறாய்!" என்று அவனுக்கு நிறையத் தமிழ் புஸ்தகங்கள் தந்து வாசிக்கச் சொன்னார், சாமியார்.

அவனும் படித்தான். நூல்களைப் படித்தால் ஞானம் வருமா? உள்ளே பண ஆசை வேலை செய்து கொண்டிருக்கும் போது, எவ்வளவு படித்தாலும் பயன் இல்லை. கடவுள் இல்லை என்றே அவன் எண்ணம். அது மாறவில்லை.

ஒரு நாள் அருணாசலஞ் செட்டி வீட்டில் திருடர்கள் புகுந்து சேர்த்து வைத்திருந்த பணத்தை யெல்லாம் தூக்கிக் கொண்டு போய் விட்டார்கள். அருணாசலஞ் செட்டி யாரையும் நம்பவில்லை. எந்த பாங்கியிலும் பணம் போட வில்லை. எல்லாரும் மோசம் செய்வார்கள் என்று அவனுடைய பயம். தன்னைப் போலவே எல்லாரும் இருப்பார்கள் என்று அவன் நினைத்தான். ஆனபடியால் அவன் சம்பாதித்த பணம் எல்லாம் ரொக்கமாக வீட்டில் வைத்திருந்தான். திருடர்கள் எல்லாம் சுரண்டிக் கொண்டு போய் விட்டார்கள்.

"அய்யோ!" என்று அழுதான். பிறகு மறுபடியும் வியாபாரம் செய்ய முயற்சி செய்தான்.

ஆனால், யாரும் அவனை நம்பி அவனுக்கு முதலுக்குப் பணம் கொடுக்க வில்லை. அவன் சொந்த வியாபாரம் செய்வதை விட்டு விட்டு ஒரு எஜமானன் வீட்டில் குமாஸ்தா வேலை செய்து பிழைத்தான். அதன் மேல் அவனுக்குக் கடவுள் நம்பிக்கையும் பிறந்தது. சுவாமியார் கொடுத்த புஸ்தகங்களை யெல்லாம் திரும்பப் படித்தான். அவற்றில் உண்மை கண்டான். பிறருக்கும் சொல்ல ஆரம்பித்தான். தான் இழந்து விட்ட பணத்தையும் மறந்து விட்டான். தினமும் கோயிலுக்குப் போய் சுவாமி கும்பிட்டு வருவான்.

அவனுடைய எஜமான் கூட இவனிடம் சமய விசாரம் கேட்க ஆரம்பித்தான். எல்லாருக்கும் அவனிடம் பிரியம். "நெய்ச் சாமியார்" என்று எல்லாரும் அவனை அழைப்பார்கள்.

"உம்முடைய வீட்டில் திருடன் புகுந்தானே. கடவுள் ஏன் உம்மைக் காக்க வில்லை?" என்று சிலர் கேட்பார்கள். கோபித்துக் கொள்ளாமல் பதில் சொல்லுவான்:

"என்னைத் திருத்தவே திருடன் வந்தான். ஆண்டவன் சூத்தை யாரே அறிவார்? திருடன் என் பணத்தை யல்ல எடுத்துப் போனது. என் சித்தமலத்தை எடுத்துப் போய்விட்டான்" என்பான்.





பாக்யசாலிக் குழந்தை!
அனுபவமுள்ள அப்பா!
Johnson's
ஜான்ஸன்ஸ் பேபி பவுடர்
Johnson's
BABY
POWDER
இலவசம்



13. "நிர்மலா, நல்லவளா?"

நிர்மலா. ஆம்! அவள் ஏதோ மாயமாகத் தோன்றியது போல அங்கு வந்து நின்றாள். "நாழிகையாகி விட்டது. நீங்கள் வீட்டுக்கு வாருங்கள், அம்மா! அவர் எங்காவது கொஞ்ச நேரம் சுற்றி விட்டு வரட்டும்" என்றாள் அனுதாபமும் உரிமையும் நிறைந்த குரலில் நிர்மலா. அந்தச் சமயம் அவள் சொக்கனைப் பார்த்து ஏதோ கண்களால் ஜாடை காட்டியதையும் அஞ்சுகம் அறிந்து கொண்டாள்.

"ஆமாம்! நீங்கள் அதிக நேரம் தோட்டத்தில் இருக்கக் கூடாது, பெரியம்மா! நிர்மலா சொல்வதைக் கேளுங்கள். டாக்டர் அப்படித்தான் சொல்லி இருக்கிறார். நீங்கள் அவளோடு வீட்டுக்குப் போங்கள். நான் கொஞ்சம் தோட்டத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு வருகிறேன்" என்றான் விஜயரங்கன் வேடத்திலிருக்கும் சொக்கன்.

"சரி! இங்கே அதிக நேரம் தங்கி விடாதே, விஜயா! சீக்கிரம் வந்துவிடு" என்று கூறிவிட்டு, நிர்மலாவின் கையைப் பிடித்துக் கொண்டு சென்றாள் பார்வதி.

அஞ்சுகம்தான் மறைந்திருந்த இடத்திலிருந்து நகரவே இல்லை. அப்பொழுது அவள் மனத்தில் அளவற்ற கோபமும் ஆத்திரமும் பொங்கி எழுந்தன. அவள் தன்னைத்தானே சமாதானப் படுத்திக் கொள்ள மிகவும் சிரமப்பட்டாள். அவளுக்கு அப்பொழுதே சொக்கனை நெருங்கி ஏதேதோ கேட்டுவிட வேண்டுமென்று துடிப்பு ஏற்பட்டது. நிர்மலா பார்வதியம்மாளை அழைத்துக் கொண்டு அந்த இடத்தை விட்டு மறையட்டும் என்று காத்திருந்தாள். சொக்கனும்

கி.ரா.கோபாலன்



அவர்கள் வீட்டிற்குள் சென்று மறையும் வரையில் அந்த இடத்திலேயே திகைப்புடன் நின்று பார்த்துக் கொண்டிருந்துவிட்டு மெதுவாகத் திரும்பி நடப்பதற்கு ஆரம்பித்தான்.

இந்தச் சமயம் அஞ்சுகம் மறைவிலிருந்து வெளியே வந்து விரலைச் சொடுக்கினாள். சொக்கன் சட்டென்று திரும்பிப் பார்த்தான். குறப் பெண் ஒருத்தி தோட்டத்து வேலிக்குச் சமீபமாக நின்று தன்னைச் சமிக்ஞை காட்டி அழைத்தது அவனுக்குச் சிறிது ஆச்சர்யத்தையும் திகைப்பையும் கொடுத்தது. "நீ யாரு...? இங்கே என்ன செய்கிறாய்? போ. இந்த வீட்டுப் பக்கம் நீங்களெல்லாம் வரவே கூடாது" என்றான் அதட்டும் குரலில்.



அஞ்சுகம் அவன் வார்த்தைகளை லட்சியம் செய்யாதவன் போல் சிரித்துக் கொண்டே, "எங்களை யாருன்னு தெரிஞ்சிக்காமல் விரட்டாதீங்க, மகராசா...," என்று சொல்லிக் கொண்டே தாழ்வாக இருந்த வேலிப் பக்கமாக எழும்பித் தாண்டித் தோட்டத்துக்குள் வந்து அவன் எதிரில் நின்றாள். இவ்வளவு துணிகரமாக அந்தப் பெண் வேலியைத் தாண்டி உள்ளே வந்து தன் எதிரே நின்றது சொக்கனுக்குத் திகைப்பை அளித்தது. அவன் பரபரப்போடு அவளைப் பார்த்தான். "உங்களுக்கு என்னைத் தெரியவில்லையா?" என்றாள், அவன் முகத்தை உற்றுப் பார்த்துக் கொண்டே.

அவனுடைய குரலிலிருந்து அவளை அவன் யாரென்று புரிந்து கொண்டு விட்டான். அவன் பரபரப்போடும் பயத்தோடும் சுற்றிலும் ஒரு தடவை பார்த்துவிட்டு, சிறிது பயம் தெளிந்தவன் போல ஆச்சர்யம் மிகுந்த தொனியில் கேட்டான்: "அஞ்சுகம்! இன்னும் நீ போலீஸாரிடம் அகப்படாமல் இருக்கிறாயா...? நீ போலீஸாரிடமிருந்து தப்பி விட்டாய் என்ற செய்தியைக் கேள்விப் பட்டேன். இது பெரிய சாமர்த்தியம். யாராவது





கைதி:— நான் இன்னும் கொஞ்ச நாளைக்கு இங்கேயே இருக்கப் போறேனுங்க! வெளியிலே சாமான்கள் விலை வெல்லாம் ஏகத்தாறாக உசந்து கிடக்குதாம். வெளியிலே போனால் என்னாலே காலந்தள்ள முடியாதுங்க!

உனக்கு உதவி செய்தார்களா...? இந்த வேஷம் உனக்கு ரொம்பப் பொருத்தமாயிருக்கிறது. இருந்தாலும் ஜாக்கிரதையாக இருக்கணும். உனக்கு உதவி செய்தது யார்...?'' என்று கேட்டான் சொக்கன் பரபரப்போடு கூடிய துணிவான குரலில்.

''ஆமாம்! கடவுள்'' என்று வெறுப்பு நிறைந்த குரலில் கூறி, அவள் ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டாள். ''எனக்கு உதவிசெய்ய உலகத்தில் நல்ல மனிதர்களும் இருக்கிறார்கள். என்னைப்போன்ற திக்கற்ற அநாதைகளுக்கு உதவி செய்வதாகச் சொல்லிவிட்டு ஏமாற்றி எல்லோருமே ஆபத்தில் சிக்க வைக்க மாட்டார்கள். நீங்கள் எத்தகைய வஞ்சக நாடகம் ஆடுகிறீர்கள் என்று இப்பொழுது தெரிந்து கொண்டேன். எனக்கு உதவி செய்யும் நோக்கத்துடன் இங்கே வந்த நீங்கள் அந்த வயதான கிழவியை ஏமாற்றி வஞ்சனை வலையில் சிக்க வைக்க முயற்சி செய்கிறீர்கள். இல்லையா...?'' என்றாள் அஞ்சுகம், சொக்கனை விழிகளாலேயே சுட்டு விடுகிறவள் போல் பார்த்துக் கொண்டே.

''நீ நினைப்பது தவறு, அஞ்சுகம்!'' என்றான் சொக்கன் பயத்தோடு கூடிய துணிவான குரலில்.

''நான் நினைப்பதில் தவறே இல்லை. நீங்களும் சாமர்த்தியமாகத்தான் நடிக்கிறீர்கள். உண்மையாகவே நீங்கள் விஜயரங்க துரை மாதிரியேதான் இருக்கிறீர்கள். உங்கள் உருவம் சுலபமாக எல்லோரையும் ஏமாற்றுவதற்கு வசதியாகவே இருக்கிறது...'' என்றாள் அஞ்சுகம் கேலியாக.

சொக்கன் ஒரு அசட்டுச் சிரிப்புச் சிரித்துக் கொண்டே, ''கெட்டிக்காரி! இதையெல்லாம் நீ எப்படியோ தெரிந்து கொண்டு விட்டாயே! நீ சொல்லுவதெல்லாம் உண்மை. ஆனால் என்ன செய்வது? இப்படித்தான் ஏதாவது செய்ய வேண்டி இருக்கிறது...'' என்று கூறினான்.

''பாவம்! நீங்கள் என்ன செய்வீர்கள்? சரியான வலையில் சிக்கிக் கொண்டு விட்டீர்கள். இப்பொழுதுதான் அந்த நிர்மலா எத்தனை மோசக்காரி, நீங்கள் எவ்வளவு மோசக்காரர் என்பதைத் தெரிந்து கொண்டு விட்டேன்...'' என்றாள் அவள் ஆத்திரமும் கோபமும் நிறைந்த குரலில்.

''அஞ்சுகம்! இப்பொழுதுதான் நீ கொஞ்சம் அசட்டுத்தனமாகப் பேசுகிறாய். நீ போலீஸாரிடமிருந்து தப்பியது எவ்வளவு கெடுதல் என்று இப்பொழுதுதான் உணருகிறேன். ஆனால் இப்பொழுதும் அந்த ஆபத்து உன்னை விட்டு விலகி விடவில்லை என்பதை மறந்து விடாதே. நான் ஏதோ ஒரு நல்ல காரியம் செய்ய ஈடுபட்டிருக்கையில் நீ எல்லாவற்றையும் கெடுத்துக் குலைத்து விடுவாய் போலிருக்கிறதே. என்னுடைய காரியங்களில் நீ என்ன குற்றம் கண்டாய்? நான் விஜயரங்கனாக நடிப்பது அந்தக் கிழவிக்கு எவ்வளவு மன ஆறுதலாகவும் சந்தோஷமாகவும் இருக்கிறது, தெரியுமா? நான் அந்தக் கிழவியின் சொத்துக்களுக்குச் சொந்தக்காரனானால் குறைந்தது பத்து சினிமாவாவது எடுக்கலாம். எல்லாவற்றுக்கும் கதை, வசனம், பாடல் எல்லாம் நானே தயாராகக் கையில் வைத்துக் கொண்டிருக்கிறேன். நான்தான் கதாநாயகன். நீதான் கதாநாயகி'' என்று சொல்லி அவள் முகத்தைப் பார்த்தான்.

''சரிதான். இப்படியொரு யோசனையா...! உங்கள் படத்தில் நிர்மலாவுக்கு என்ன வேஷம்?'' என்று கேட்டாள் அஞ்சுகம்.

''அவளுக்கும் ஏதாவது கொடுக்கலாம். நல்ல முகவெட்டு. கூடுமான வரையில் நடிப்பாள்..'' என்றான் அவன் சிறிது தடுமாற்றத்துடன்.

''நல்ல வேலை! அவளைப் பற்றி இவ்வளவு தூரமாவது தெரிந்துகொண்டிருக்கிறீர்களே! அதுவே போதும். ஆனால்

கால்கேட் குளோரோபில் டூத் பவுடர்

வெளியிடுகிறது

வீரிய குளோரோபிலின் பூரணநன்மைகளை



வீரியகுளோரோபில்தான் உங்களுக்கு நன்மை தரவல்லது!

வாயில்தோன்றும் துர் நாற்றத்தை ஒழிக்கிறது. அதி துரிதமாக, பூர்த்தியாகச் செயலாற்றுகிறது! வாய்க்கு புதிய நறுமணத்தைத் தருகிறது!

பற்கள் சொத்தையாகாமல் காக்கிறது! சொத்தையாக்கும் காரணம் என பல் டாக்டர்களால் கருதப்படும் தீய அமிலங்களை ஒழிக்கிறது!

ஈறுகளைப் பலப்படுத்துகிறது! உங்கள் ஈறுகளைப் பாதுகாக்க குளோரோபிலின் தீவிர நன்மைகளைத் தருகிறது.

* நீரில் கரையும் குளோரோபிலின்ஸ் சேர்ந்தது.

இப்படி எல்லாம் சொல்லி என்னை நீங்கள் ஏமாற்றிவிட முடியாது. உங்களுடைய சூழ்ச்சி நாடகமெல்லாம் எங்கே போய் முடியும் என்று எனக்கு நன்றாகத் தெரியும். அந்தக் கிழவிக்கு ஏதோ கெடுதலை விளைவிக்கத்தான் நீங்களும் நிர்மலாவும் சேர்ந்து ஏதோ செய்கிறீர்கள் என்று எனக்குத் தெளிவாக விளங்கி விட்டது'' என்றாள் அஞ்சுகம் சந்தேகக் கண்களோடு அவனைப் பார்த்துக் கொண்டே.

'' நான் எதற்காக அந்தக் கிழவிக்கு ஆபத்தை உண்டாக்க வேண்டும்? அவளுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தால் எனக்கல்லவா ஆபத்து? நான் இங்கு வந்து இப்படி எல்லாம் செய்வதற்கு என்ன காரணம் என்பதை மட்டும் நீ மறந்து விடாதே. உன் மீது சுமத்தப் பட்டிருக்கும் குற்றத்தையும், பழியையும் நீக்குவதற்கு ஏதேனும் உளவு அகப்படாதா என்பதுதான் என்னுடைய கவலை'' என்றான் சொக்கன் மிகுந்த அனுதாபத்தோடும் பரிவோடும்.

'' நீங்கள் நிச்சயமாக எனக்கு உதவி செய்யும் நோக்கத்தில்தான் இங்கு இருக்கிறீர்களா ? உங்களுக்கு ஏதேனும் உளவு கிடைத்ததா?'' என்றாள் அஞ்சுகம் பரபரப்போடும் ஆர்வத்தோடும்.

'' இதுவரையில் சரியான ஆதாரமாக எதுவும் கிடைக்கவில்லை. ஏதோ இரண்டொரு விஷயங்கள் தெரிகின்றன. நீ கொஞ்சம் பொறுமையோடு இருந்தால் எல்லாம் கூடிய சீக்கிரம் வெட்ட வெளிச்சமாகி விடும்'' என்றான்.

'' அந் நகைகளை இந்த வீட்டிலுள்ளவர்களே திருடி இருப்பார்கள் என்று உங்களுக்குத் தெரிகிறதா ? நிர்மலா தானே இதைச் செய்திருக்க வேண்டும்? உங்களுக்கு அவள் மீது சந்தேகம் இருக்கிறதல்லவா ?'' என்று கேட்டாள் அஞ்சுகம் துடிப்போடு.

அஞ்சுகம் நிர்மலாவின் பெயரைச் சொன்னவுடன் சொக்கன் மனத்தில் சிறிது திகில் ஏற்பட்டது. அப்பொழுது அவன் நிர்மலாவின் கைப்பதுமையாகத் தானே ஆடுகிறான் ? அஞ்சுகம் நிர்மலாவைப் பற்றிச் சந்தேகப்பட்டது அவன் மனத்துக்கு மிகுந்த குழப்பத்தைக் கொடுத்தது. அப்பொழுது அவனுடைய மனக் கருத்தை மாற்ற வேண்டுமென்று அவனுக்குத் தோன்றியது. அவன் தலையை அசைத்துக் கொண்டே, ''நான் அவளைப் பற்றி முதலில் நினைத்தது தவறு. அவள் மிகவும் நல்ல குணமுடையவள். மிகவும் நேர்மையானவள். அவளும் நான் பார்வதியம்மாளின் தங்கை மகன் என்றுதான் இன்று வரையில் நினைத்துக் கொண்டிருக்கிறாள். அந்த நகைகளை எல்லாம் வேறு யாரோ தான் திருடிக் கொண்டு போயிருக்க

வேண்டும். நான் அந்த உண்மையைக் கண்டு பிடிக்காமல் விடப்போவதில்லை. அதற்குக் கொஞ்சநாட்கள் பிடிக்கலாம். அதுவரையில் நீ எதையும் வெளியே காட்டிக் கொள்ளாதே'' என்றான்.

''நான் எதையும் வெளியே சொல்ல மாட்டேன். நீங்கள் உண்மையைக் கண்டு பிடிக்கச் சிரமப்படலாம். ஆனால் இப்படி இன்னொருவருடைய பெயரில் வாழ நினைப்பது எனக்குப் பிடிக்க வில்லை. தவிர அந்த நிர்மலாவிடம் எனக்கு இப்பொழுது நம்பிக்கை இல்லை. அவள் பெரிய சாகஸக்காரியாகத்தான் இருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். அவள் பேச்சில் மயங்கி விடாதீர்கள். அவள் தோட்டத்துக்கு வந்தபோது உங்களைப் பார்த்த பார்வையே எனக்குப் பிடிக்கவில்லை. நீங்களும் அவளைக் கண்டு பயப்படுவது போல்தான் எனக்குத் தோன்றியது'' என்றாள்.

அஞ்சுகம் ஓரளவு தனக்கும் நிர்மலாவுக்கும் உள்ள தொடர்பு பற்றிச் சந்தேகப் படுகிறாள் என்று அறிந்தவுடன் சொக்கன் சிறிது குழப்பமடைந்தான். அவன் தன் குழப்பத்தை ஒரு விதமாக அடக்கிக் கொண்டு, ''நீ அவளைப் பற்றி அப்படி நினைக்காதே. அவள் கொஞ்சம் வெகுளி. வேடிக்கையாக அப்படி ஏதாவது செய்து கொண்டிருப்பாள். அவ்வளவுதான். முன்பு நீயே சொல்லவில்லையா, அவளுடைய நல்ல குணத்தைப் பற்றி..'' என்றான்.

''அவள் நல்லவளாக இருக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய பிரார்த்தனை. அவள்தான் மிகவும் நல்லவளாயிற்றே. அவள் இந்தக் காரியத்தில் உங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய மாட்டாளா?'' என்றாள்.

பேதைமை நிறைந்த அவளுடைய வார்த்தைகளும் பச்சாத்தாபம் நிறைந்த அவளுடைய கண்களும் சொக்கனின் இதயத்தை இளக்கின. அவனுக்கு அப்பொழுதும் அஞ்சுகத்தின் மீதிருந்த அன்பும் காதலும் மாறவில்லை. ஆனால் மாயமோகினியைப் போல் அவன் வாழ்விடையே நிர்மலா வந்து புகுந்து கொண்டதுதான் அவனுக்குத் தடுமாற்றத்தை அளித்தது. அஞ்சுகத்தின் இதயமும் நிர்மலாவின் இதயமும் அவனுக்கு விளங்காமல்இல்லை. நிர்மலா அஞ்சுகத்தைச் சிறைக்குள் தள்ளினால்தான் தன்னுடைய திருட்டுத்தனமும் மேலும் நடத்தத் திட்டமிட்டுள்ள வஞ்சக நடவடிக்கைகளும் அம்பலமாகாமலிருக்கும் என்று எண்ணினாள். ஆனால் சொக்கன் அபலைப் பெண்ணாகிய அஞ்சுகத்தை நிர்மலாவின் சூழ்ச்சி வலையில் சிக்க வைக்க விரும்பவில்லை. ''நிர்மலா நல்லவள்தான். ஆனால் அவளை நம்புவதில் பயனில்லை. அவள் உனக்கு உதவி செய்ய மாட்டாள். இந்த வீட்டில் நகைகள் களவு போவதற்கு முன்பு வேண்டுமானால் அவளுக்கு உன்மீது அபிமானம் இருந்திருக்கலாம். நகைகள் களவு போனபின்பு அவளுக்கு உன்மீது அபிமானம் கிடையாது. நீதான் அவைகளைத் திருடி இருக்கவேண்டுமென்று நினைக்கிறாள். நீ இப்படிக் குறத்தி போல வேஷம் போட்டுக் குறக் கூட்டத்தோடு இருப்பதே எப்பொழுதும் நல்லது. இன்னும் சொல்லப்போனால் நீ இந்த மேகராஜபுரத்துக்கு வெகுதொலைவில் இருப்பதே மிகவும் நல்லது. இதுதான் நான் உனக்குச் சொல்லும் முடிவான யோசனை'' என்றான்.

அவனுடைய வார்த்தைகளைக் கேட்டு அஞ்சுகத்தின் மனத்தில் பயமும் நடுக்கமும்தான் ஏற்பட்டன. அந்தச் சமயத்தில் அந்த வீட்டுத் தோட்டத்தில் நின்று அவனோடு பேசுவது கூட ஏதேனும் ஆபத்தை உண்டாக்கி விடுமோ என்று கூட அவள் அஞ்சினாள். அவள் சுற்றிலும் ஒரு தடவை பார்த்தாள், எங்கேனும் நிர்மலா தங்களைப் பார்த்து விடுகிறாளோ என்று. ''அப்படியென்றால் நான் இங்கு நின்று பேசுவது கூடத் தவறு....?'' என்றாள் நடுங்கும் குரலில்.

''ஆமாம்! சீக்கிரம் போய்விடு. நான் உன்னை மறக்க மாட்டேன். கைவிட மாட்டேன். எப்படியும் ஒரு நாள் நீ நிரபராதி என்று வெளியாகிவிடும்; அந்நகைகளைக் களவாடியது யாரென்று நான் கண்டு பிடிக்காமல் இருக்க மாட்டேன். ஆனால் இப்பொழுது இருக்கும் நிலையில் நாம் மறுபடியும் சந்திப்பது எனக்கும் ஆபத்து, உனக்கும் ஆபத்து. என்னுடைய வார்த்தைகளைக் கேட்டு இவ்விடத்திலிருந்து போய் விடு'' என்றான் சொக்கன்.


அவள் ஒன்றும் பதில் பேசவில்லை. அவனிடம் விடைபெற்றுக் கொள்கிறவள் போல் தலையை அசைத்து விட்டு மெதுவாக நடந்தாள். அப்பொழுது அவள் முகத்திலிருந்த சோகமும் பீதியும் அவன் மனத்தைக் கலக்கின. அவள் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே வேலியைத் தாண்டி மெதுவாக நடந்தாள். அவனும் குழம்பிய மனத்தோடு வீட்டை நோக்கி நடந்தான். வீட்டுக்குச் சமீபமாக வந்த போது அவன் எதிரே வந்த நிர்மலா, ''தோட்டத்தில் உங்களோடு பேசிக் கொண்டிருந்தது யார்.....?'' என்று கேட்டு அவனைச் சந்தேகக் கண்களோடு பார்த்தாள். (தொடரும்)


நீண்ட, அடர்ந்த
ஒளிக்கூந்தலுக்கு
இளமையின் ஒளியும் அற்புத ஜ்வலிப்பும்
பெற கூந்தலுக்கு கால்கேட் பெர்பியூம்டு
காஸ்டர் ஹேர் ஆயிலை தடவுங்கள். கூந்த
லின் இயற்கை அழகை அது எடுத்துக் காட்டி
எல்லோரையும் பிரமிக்கச் செய்யும்.
எக்கானமி சைஸை
வாங்கி பணத்தை
மிச்சப் படுத்துக.
கால்கேட்
பெர்ப்யூம்டு காஸ்டர்
ஹேர் ஆயில்


காஞ்சீபுரம் விலைக்கே கிடைக்கும்
மயிலாப்பூர் பிராஞ்சில்
நவராத்திரி, தீபாவளிக்கென அசல் பட்டில் ஜரிகை உடல் டிசைன் சேலைகளும் பாவாடைகளும், நவீன வர்ணங்களில் புத்தம் புதியதாக பிரதி வாரமும் வருகிறது.
மற்றும் மைசூர் கிரேப் சேலைகள் சோளி பீஸ்கள் நியாய விலைக்குக் கிடைக்கும்.
★
காஞ்சி
ஸில்க் எம்போரியம்
புரொப்ரைட்டர்: S.R. ஆதிநாராயண முதலியார்
7, வடக்கு மாட வீதி, மயிலாப்பூர்
சென்னை - 4
தலைமை ஆபீஸ்: காஞ்சீபுரம்

வஸந்தத்தின் புத்துணர்ச்சி

உங்களுக்கு
இன்றும்.... என்றும்!



காஷ்மீர்பொக்கே டால்கம் பௌடர் சுத்த மனோரம்மியமே! மிக்க மிருதுவாக உங்கள் உடலில் வஸந்தநாள் காலையின் புத்துணர்ச்சியை அள்ளித் தெளிக்கிறது- உடலை ரம்மியமணத்துடனும் குளிர்ச்சியுடனும் மணிக்கணக்காக வைத்திருக்கிறது. அதிகப்படி ஈரத்தை உறிஞ்சுகிறது ... அரிப்பையும் எரிச்சலையும் தவிர்க்கிறது ... உங்கள் வசீகரத்தையும் மென்மையையும் பன்மடங் காக்குகிறது.



காஷ்மீர் பொக்கே

டால்கம் பௌடர்

ஆண்கள் விரும்பும் நறுமணத்துடன்

ஒரு கால்கேட்—பாமாலிவ் தயாரிப்பு

கால்கேட் 1806 முதல் தரத்துக்குப் பெயர் போனது

யோக சிகிச்சை

சுந்தரம்

7. இயற்கையின் எதிர்ப்பு!

ஒரு தடவை டி. பி. கிருமி நுழைந்து தொத்தி உடல் வலிவால் தோல்வியோ படுநாசமோ அடைந்த பின்பு, இச் சத்துரு மறுபடி மனிதனை அணுகாது, வெல்லாது என்று நினைத்தல் தவறு. டி.பி. கிருமிக்கு ரோசமுண்டா?—'ஒரு தரம் தோற்றோம், மறுபடியும் தலை காட்டினால் கேலி செய்வார்கள்' என்று வெட்கப்படுமா? இதெல்லாம் அதற்கு ஒன்றுமே கிடையாது. மறுபடியும் சமயம் கிடைத்தால், மனிதன் தொத்துவதற்குச் சமயம் கொடுக்கும்பொழுது உட்புகும். டி.பி. கிருமி உட்புகுவதிலும் உடல் அம்சங்களுடன் போர் புரிவதிலும் விடாமுயற்சி கொண்டது.

எனவே இது தொத்தக் கூடாது என்ற நடைமுறைகள் வாழ்வில் தினசரி திட்டங்களாக ஏற்பட வேண்டும். இது உட்புகுந்ததும் இதன் தன்மைகளை, உடனே வெளிப்படுத்திக் கொள்ள, ஏன் தாமதம்? இயற்கை உடலில் காட்டும் சின்னங்களால்தான் டி. பி. இருப்பது பகிரங்கமாகிறது. போராட்டம் வலுத்து, உடல் வலிவு தோற்று வரும் பொழுதுதான் ஜுரம், உடல் மெலிவு, கபம், இருமல், களைப்பு, என்ற சின்னங்களை வெளித் தள்ளுகின்றது. உள் நுழைந்த டி. பி. கிருமிக் கூட்டத்துடன், வலிவு குன்றாது போராடும் பொழுதும், தன் வல்லமைக்கு, டி.பி. கிருமியின் அழிவு சாத்தியம் என்று கருதும் வரையிலும், இயற்கை மேல் குறிப்பிட்ட அம்சங்களால் அபாய அறிவிப்பு, 'எஸ். ஓ. எஸ்.' விடுவதில்லை. இந்தக் காரணமும் மனிதனுக்கு விபத்துத் தொல்லையாக ஏற்படுகிறது.

உள்ளே நுழைந்த டி. பி. கிருமியின் கூட்டம் ஆயாசம் தீர, ஓய்வெடுப்பதில்லை. சுவாசக் கருவியின் சதை அம்சங்களில் நங்கூரம் போட்டுக் கொள்ளுகிறது. தான் அமர்ந்த இடத்தில், அதைச் சுற்றியுள்ள சுவாசக் கருவி பாகத்தை எல்லாம், குண்டோதரப் பசியுடன் கபளீகரிக்கிறது. உண்ட பிற்பாடு, ஓய்வெடுத்து, இல்லறம் நடத்தி, பிறகு வம்சாபிவிருத்திக்கு இறங்குவதில்லை. இது உள் நுழைவதும், உண்பதும், குட்டி போட்டுக் கொள்ளுவதும் ஒரே காலத்தில் நடந்தேறுகின்றன. ஆனால் மனிதன் இதற்குள் நிரந்தர நோயாளியாகஆகிவிடுகிறான்.

இவ்வாறு டி. பி. கிருமி வம்சாபிவிருத்தி செய்து கொள்ளுவதை உடலின் இயற்கை, கைகட்டிப் பார்த்துக் கொண்டா இருக்கிறது? இல்லை! நான் முன் கூறியது போல, போரிடத்தான் செய்கின்றது. உடல் கருவிகளின் பலஹீனமென்ற உள்நாட்டுக் கலவரத்தாலும், தாறுமாறான வாழ்க்கை தரும் வீர்ய அம்சங்களின் ஒத்துழைப்பின்மையாலும், கிருமி பலியானது போக, மிகுதி வளர்ந்து செல்லுகிறது.

மித வாழ்வு, ஹித உணவு, ஒழுக்கம், உடல் வலிவு என்ற தன்மைகளால் உடல் வல்லரசாக இருந்தால், டி. பி. கிருமி இவ்வரசுக்கு அடிமை ஆகிறது. இல்லையேல் தன் நாட்டிலேயே, அதாவது தன் உடலிலேயே, இயற்கை அம்சங்கள் வலிவிழந்து சிற்றரசாகி, டி. பி. வல்லரசாய் ஆக அதற்கு அடிமையாகி, ''ஐயா! எனக்கு டி. பி.!'' என்று அபயக் குரல் விடுக்கும் நிலைக்கு மனிதனைக்கொண்டு வந்து விடுகிறது.

டி. பி. என்ன? இன்னும் எத்தனையோ, பாம்பூச்சியை வெல்லக் கூடிய சக்தியைக் கொண்டுள்ளதே நமது உடல். டி. பி. 'புலி' விளங்குவதற்கு முன், டி. பி. 'கிலி'க்கு இரையாகத் தேவை இல்லை. நல்லுணவு, நல்லொழுக்கம், நற்காற்று, உடலுழைப்பு, பொது ஆரோக்கியம், எல்லாம் தினசரி வாழ்க்கையில் அமைத்துக் கொண்டவர் டி. பி. என்ற ''வஞ்சகம்'' இருக்கிறது என்பதையே மறந்து விடலாம்.

ஆனால், எச்சரிக்கையை மறக்கத் தேவை இல்லை. டி. பி. நோயாளி இடத்திலும், இவன் இருக்குமிடத்திலும், மக்கள் அனுசரிக்க வேண்டிய பாதுகாப்பு முறைகளைச் சென்ற அத்தியாயத்தில் குறிப்பிட்டிருந்தேன்.

டி. பி. நோயின் தாக்குதலை, பட்சவாதம், சிபிலிஸ் முதலிய நோய்களின் தாக்குதலுக்கு ஆராய்ச்சி நிபுணர்கள், ஒப்பிடுகிறார்கள். இந்த இரு அம்சங்கள் சரீரத்தினுள் வேலை செய்கின்றன, வளருகின்றன என்பது முதலிலோ உடனடியாகவோ, தெரியாது. பக்ஷவாதம் (Paralysis) தாக்கப்பட்டவுடன்தான், உடல் முழுவதுமோ ஒரு பாகமோ பிணம்போல் ஆன பிறகுதான், இது உள்ளே வேலை செய்திருப்பதை அறிய முடியும். தான் உள்ளிருந்து படுவேலை

செய்வதைப் பற்றி அறிக்கை கொடுப்பதில்லை. அசைவின்றி ஆன பிறகே, 'இம் மனிதனுக்குப் பக்ஷவாதம் தாக்கி விட்டது' என்கின்றனர். இது சரியல்ல. பக்ஷவாத அம்சம், எப்பொழுதோ உள்ளே நுழைந்திருக்கும். உள்ளுக்குள்ளேயே வேலை செய்து கொண்டிருந்திருக்கும்! உடலின் பாதுகாப்புச் சேனையானது, யாரும் அறியாது இத்துடன் கடுமையாகப் போர் புரிந்து கொண்டே இருந்திருக்கும். ஆனால் இச் சேனை தோல்வி அடைந்த பிறகே, சரீரம் பிணம் போலாவதால் பக்ஷவாதம் தாக்கிவிட்டது என்று கூறப்படுகிறது.

இதேமாதிரிதான் சிபிலிஸ் (Syphilis) என்ற நோயும். துஷ்ட சேர்க்கையால் ஏற்படுகிறது இந் நோய். இப்பூச்சி உள்ளேயே வேலை செய்து, நரம்பு, மூளை அம்சங்களைத் தாக்கும் பொழுது, அப்பொழுதே வியாதி ஏற்பட்டது போல் கூறிக் கொள்ளுகிறோம்.

எல்லோருடைய உடல் தன்மைகளும் ஒன்றாக இல்லை. சில சரீரங்களில், டி. பி. கிருமி புகுந்த சிறிய காலத்துக்கெல்லாம், உடலின் பாதுகாப்பு அம்சங்கள் பலாத்காரமான போரிட்டு, டி. பி. சின்னங்களை வெளித் தள்ளி விடும். மனிதனுக்கு எச்சரிக்கை யுண்டாகி, அதிகச் சிரமம், அபாயமின்றிச் சிகிச்சையைக் கொள்ளலாம். மருத்துவ நிபுணர்கள், இந்த மாதிரியான சரீர அமைப்புத்தான் மேலானது என்கின்றனர். சாதாரணமாகக் காணப்படும் டி. பி.யை உள்ளே பரவவிட்டு முடிவில் வெளிக் காணபிப்பது என்ற உடல் போக்கு உசிதமில்லை என்கின்றனர்.

டி. பி. தொத்தும் விஷயத்தையும், இதைத் தடுக்கும் விஷயத்தையும், ஆராயும் பொழுது பல சிக்கலான பிரச்னைகள் தலை தூக்குகின்றன. டி. பி. நோயாளியை, அதாவது முக்கியமாக, நோய் வெளிப்பட்டு விட்ட நோயாளியைத் தனிப்படுத்த வேண்டுமென்று, ஒப்புக் கொள்ளுகிறோம். இது சரியான அவசியமான திட்டம். திட்டம் சரியாக இருக்கலாம். திட்டம் அவசியமாகவும் இருக்கலாம்; ஆனால் வாழ்க்கையின் தொல்லைச் சக்கரம் சுழன்று இத் திட்டங்களைத் தூளாக்குகின்றது. இவ்வாறு நடப்பதை நோயாளியோ, அவனைக் காக்க முயல்பவர்களோ தடுக்க முடியாமல் பார்த்துக் கொண்டிருக்கவும் நேரிடுகிறது.

கணவனுக்கு டி. பி. தாக்கி இருப்பதாக வைத்துக் கொள்ளுவோம். இவன் மனைவி இவனை நெருங்கிப் பழகாமல் என்ன செய்வாள்? கணவனே இதை விரும்பா விட்டாலும், மனைவி கணவனை நெருங்கி, பணி செய்தே தீருவாள்.

வைத்தியர்களும், பணியாளரும், நோயாளியுடன் நெருங்கித் தொழில் புரிகின்றனர். இவருக்கு எத்தகைய பாதுகாப்பை விதிப்பது? எத்தகைய பாதுகாப்பால், திருட்டு வஞ்சக டி. பி. கிருமியை ஏமாற்ற முடியும்? தொழிற்சாலையில், ஒரே அறையிலோ, ஒரே கூடத்திலோ, டி. பி. என்று தீர்மானிப்பதற்கு முன்போ, தீர்மானித்த பிறகும்கூட, நோயாளியுடன், நோயற்றவர் நெருங்கிப் பழகத்தான் வேண்டி இருக்கிறது. இந்தத் தவிர்க்க முடியாத, சமூகச் சூழ்நிலையில் நடந்து வரும் இம் முறைக்குத் தப்புப் பாதுகாப்பென்ன? ஊசி ஏற்றுவதினாலோ, புஷ்டியுள்ள உணவு உண்பதினாலோ, சானிடோரியம் கட்டி விடுவதினாலோ, கால் கைகளைத் தூக்குவதினாலோ, நோயை வென்று விடலாமென்று நினைப்பது தவறாகும். நோயை ஒருதரம் வென்றாலும், இது மற்றொரு தரம் தாக்காது என்பதற்கு வரம்பு ஒன்றுமில்லை. அறிவாளிகள் இவைகளை எல்லாம் ஆராய்வதையும், சிகிச்சை, — தடுப்பு முறைகளாகக் கொள்ள வேண்டும்!

என்ன ஆச்சரியம்...

உலகிலே எவ்வளவு அதிருஷ்டக் குழந்தைகள் க்ளாக்ஸோவினால் வளருகிறார்கள். கட்டாயம் கோடிக்கணக்கில்தான் இருக்கும். விபரம் தெரிந்த தாயார் குழந்தைக்கு க்ளாக்ஸோவைத் தவிர வேறு எதையாவது கொடுப்பாளா! குழந்தை எப்பொழுதும் மலர்ந்த முகமும், நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் இருக்க ஒரே ஒருவழிதான்—குழந்தைக்கு க்ளாக்ஸோவையே ஆகாரமாய்க் கொடுப்பது. இந்த புஷ்டி தரும் பாலுணவில் எலும்புகளும் பற்களும் வளம்பெற விடமின்-டியும், இரத்தப் புஷ்டிக்கு வேண்டிய இரும்பு சத்தும் கலந்திருக்கின்றன. என்னைப் பார்த்தாலே தெரியவில்லையா! க்ளாக்ஸோ குழந்தை எப்போதும் சமர்த்துக் குழந்தைதான்!

நான் சிபாரிசு செய்வது க்ளாக்ஸோ

Glaxo

குழந்தைகளின் பரிசுத்தமான பால் உணவு



க்ளாக்ஸோ லாபரட்டரீஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்.
பம்பாய் . கல்கத்தா . மதராஸ் . புதுடெல்லி


ஹிமாலயா
புக்கே
அளிக்கும் மிகுந்த
புதுமைப் பொலிவை
– நீங்கள்
நாள் முழுதும்
உணரலாம்!
Himalaya Bouquet
ஹிமாலயா
புக்கே
டாய்லெட், டால்கம்
பவுடர்கள்

HBP. 14-50 TM

பூதான ஜெயந்தி

எஸ்.வி.எஸ்.

பாரதி ஜெயந்தியைப் பாரதியார் சங்கத்தார் சென்னையில் செப்டம்பர் மாதம் 11ம் தேதி வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்கள்! அதே நாளில் தமிழகத்தில் புனித யாத்திரை செய்து வரும் வினோபா அடிகளின் பிறந்த நாள் வைபவத்தை "நிலமகள் விடுதலை தின"மாக வினோபா அடிகள் போய்ச் சேர இருக்கும் மேட்டுப்பாளையத்திலிருந்து முப்பத்தைந்து மைல் தூரத்திலுள்ள கஸ்தூரிபா நிகேதனில் கொண்டாடப் போகிறார்கள் என்று கேள்விப் பட்டேன்! உடனே செப்டம்பர் 10-ம் தேதி புறப்பட்டு 11-ம் தேதி காலையில் கஸ்தூரி பா நிகேதனுக்குப் போய்ச் சேர்ந்தேன்.

நான் கஸ்தூரிபா நிகேதனை அடைந்த வேளை வினோபா அடிகள் அவ்வூரில் கூடியிருந்த பெரியோர்களுக்கும் தாய்மார்களுக்கும் பொன்னுரை கூறும் நேரமாக இருந்தது. வினோபாஜி மேடையின் மீது நெற்றிக்குத் திலகமணிந்து ஜொலித்தார். அந்தக் காட்சி கண் நிறைத்து உள்ளம் நிறைக்கும் காட்சியாக இருந்தது. அவர் கூறிய மொழிகளோ அறிவுக்கொரு விருந்தாக அமைந்திருந்தது! அன்று அவர் கூறிய கருத்துக்கள் அத்தனையும் சொல்வது என்பது இக் கட்டுரையில் சாத்தியமல்ல. ஆயினும் அவர் கூறிய ஒன்றிரண்டு கருத்துக்களைக் கூறுகிறேன்.

கிராமதானம், பூதானம் என்றெல்லாம் சொல்லும்போது, 'ஐயோ! நாம் பரம ஏழைகள். ஏழைகளிடமிருந்து தானம் கேட்கிறார்களே; ஏழைகள் தங்கள் வறுமையைத்தானே கொடுக்க முடியும்? ஆகையால் பூதானம் என்பதற்கு ஏழ்மையைப் பிரித்துக் கொடுப்பது என்பதுதானே பொருள்!' என்று சிலர் சொல்லுகிறார்கள் அல்லவா? இப்படிச் சொல்லுபவர்கள் ஏதோ கேலியாகவோ பூதான இயக்கத்தைப் பரிகசிக்க வேண்டும் என்பதற்காகவோ சொன்னதாக எண்ணிக் கொள்ளக் கூடாது. இப்படி ஒரு உண்மையான சந்தேகமே பலர் மனத்தில் இருக்கிறது.

இதற்கு வினோபா அடிகள் கூறிய பதில் இதுதான்: "மேற்கூறியவாறு பலர் கேட்கிறார்கள். ஒரு வீட்டில் ஓர் துயரம் தரும் சம்பவம் நிகழ்ந்தது என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்த வீட்டுக்காரர் என்ன செய்கிறார்? நண்பர்களிடம் தம் துயரக் கதையைக் கூறுகிறார். அந்த நண்பர்கள் அதைக் கேட்டுத் துயரம் அடைகிறார்கள். அதாவது துயரம் நண்பர்களிடையே பிரித்து விநியோகிக்கப்பட்டு விடுகிறது. முதலில் துயரமுற்றவருக்கு உள்ளத்தில் அழுத்திய துயரம் பெரிதும் குறைகிறது!

"இன்னொரு நிலையைப் பாருங்கள். ஒருவருக்கு அளவு கடந்த மகிழ்ச்சியூட்டும் சம்பவம் நிகழ்கிறது. அதைத் தம் நண்பர்களிடம் எல்லாம் சொல்கிறார். நண்பர்கள் அதைக் கேட்டுச் சந்தோஷப் படுகிறார்கள். நண்பர்களின் சந்தோஷத்தைப் பார்த்து, இவருக்கு இன்னும் அதிகக் குதூகலமும் மகிழ்ச்சியும் ஏற்படுகின்றது.

ஆகவே துன்பத்தைப் பகிர்ந்து கொள்வதால் துன்பம் குறைகிறது. இன்பத்தைப் பகிர்ந்து கொள்வதால் இன்பம் அதிகரிக்கிறது!—இதுவே பூதானத்தின் அடிப்படைக் கொள்கை!"

இதைச் சொன்னவுடன் சபையோரிடையே ஒரு பெரும் குதூகலம் காணப்பட்டது. இருட்டறையில் நடமாடிக் கொண்டிருந்தவர்களுக்குத் திடீர் என்று மின்சார ஒளி தென்பட்டாற் போலிருந்தது.

வினோபா அடிகள் பேசி முடித்ததும் திருகருத்திருமன் நன்றியுரை கூறினார்; காலை நிகழ்ச்சி முடிவுற்றது. சபை கலைந்தது.

சபை கலைந்ததோ இல்லையோ ஒரு நண்பர் வேகமாக என்னிடம் வந்தார். "ஸார்! நீங்கள் காலையிலே வராமல் போய்விட்டீர்களே! விடியற் காலையிலிருந்து எத்தனை மனோரம்யமான நிகழ்ச்சிகள் நடைபெற்றன தெரியுமா! கையில் தீப ஆரத்தி தட்டு ஏந்தி ஏறெட்டுப் பெண்கள் திருப்பள்ளி எழுச்சி பாடி வினோபாவைச் சுற்றி வந்து, எழுப்பினார்கள். அடுத்தாற்போல் பிரார்த்தனை நடைபெற்றது. பிறகு சிரமதானம் நடைபெற்றது. இப்படி ஒன்றன்பின் ஒன்றாக இனிய நிகழ்ச்சிகள் மனத்துக்கு உவகையூட்டிப் பண்படுத்தும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அவற்றையெல்லாம் நீங்கள் பார்க்க

பூதான அடிகள் 'கல்கி' படிக்கிறார்.



வில்லையே!'' என்று மிகுந்த ஆற்றாமையோடு சொன்னார்.

அன்றுகாலை நிகழ்ச்சியில் முக்கியமாகக் கூறப்படவேண்டிய விஷயங்கள் இன்னும் சில. வினோபா அடிகளின் பிறந்ததின ஞாபகார்த்தமாக மூன்று கிராமங்கள் கிராமதானமாக வழங்கப் பட்டன.

கொட்டாடை என்ற கிராமம் 171 ஏக்கர் 56 செண்ட் கொண்டது. அதன் ஜனத் தொகை 292 பேர். அதன் உரிமையாளர் 33 பேர்கள். 33 பேர்களும் தங்கள் சொந்த நிலத்தைக் கிராம மக்களுக்கே உரிமையாக்கிப் பெரு மகிழ்ச்சி யடைந்தார்கள்.

தண்ணீர்ப்பந்தல் என்ற கிராமத்தின் சொந்தக்காரர்கள் 48 பேர்கள். மொத்த விளை நிலம் 290 ஏக்கர். இந்தக் கிராமத்தையும் அடிகளுக்குத் தானமாக வழங்கியதோடு தங்கள் கிராமத்துக்கு **வினோபா நிகேதன்** என்று பெயர் வைத்துக் கொள்ளப் போவதாகவும் அறிவித்திருக்கிறார்கள்.

மூன்றாவது கிராமம்தான் செஞ்சலப் பாளையம். சுமார் 170 ஏக்கர் கொண்ட இக்கிராமத்தைக் கிராமதானமாக வழங்கிப் பெருமையடைந்தார்கள் அவ்வூர்வாசிகள். பூதான இயக்கத்துக்கு மூவர் தங்கள் வாழ்க்கையையே அர்ப்பணித்து விட்டதாகவும் கேள்விப்பட்டேன். இவை தவிர, சென்னை சர்க்கார் வினோபா அடிகளின் இந்தப் பிறந்த தினத்தில் ஆயிரம் ஏக்கர் நிலதானம் வழங்கியிருக்கிறார்கள். இந்த முக்கியமான செய்தியைச் சென்னை முதன் மந்திரி திரு காமராஜர் வெளியிட்டார். வினோபா அடிகளின் 62 வது வயது நிறைவு பெற்ற தினமானதால் 62 உழவர்களுக்கு நிலதானம் வினோபா தமது கரங்களினால் வழங்கினார். இவற்றை விட நிலமகள் விடுதலை பெற்று வருகிறாள் என்பதற்கு வேறு அத்தாட்சி என்ன வேண்டும்?

கூட்டம் முடிந்ததும் வினோபா தமது ஜாகைக்குப் போய் விட்டார். அடிகளை நேரில் கண்டு தரிசித்து எனது வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்ள வேண்டும் என்று முயன்றேன். ஆனால் எனக்கு முன்னால் விழாவுக்கு வந்திருந்த திரு பி. ஜே. கேர் அடிகளிடம் பேசத் தொடங்கி விட்டார்!

பொதுவாகப் பிறந்த நாள் என்றால், ஓய்வு எடுத்துக் கொள்வதும் தினப்படி செய்யும் வேலையை நிறுத்தி விட்டுப் பாயசம் பட்சணங்களுடன் வயிறு நிரம்பத் தின்பதுமே பிறந்த நாள் கொண்டாட்டம் என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் வினோபாஜியோ பிறந்த நாள் அன்று பாயசம் சாப்பிடவில்லை. வழக்கமாகச் சாப்பிடும் தயிரும் தேனும் தான் சாப்பிட்டார். வழக்கம் போல் அன்றும் பிற்பகல் அவர் நடக்க ஆரம்பித்து விட்டார்!

வினோபா நடக்கும்போது அவருடன் பேசிக் கொண்டு செல்வது ஒரு தனி அனுபவம். சேலம் ஜில்லாவில் வினோபாவுடன் ஒரு நாள் பாத யாத்திரை செய்யும் வாய்ப்புக் கிடைத்தது.

இன்றும் அத்தகைய வாய்ப்பை வினோபா பிற்பகல் நடக்கும்போது பெற்று விடலாம் என்ற நம்பிக்கையோடு இருந்தேன். ஆனால் மனிதன் நினைப்பதெல்லாம் நடந்து விடுகிறதா, என்ன?

கஸ்தூரிபா நிகேதனில் நான் இறங்கியிருந்த இடத்திலேயே திரு பி. ஜி. கேர் அவர்களும் இறங்கியிருந்தார். அதனால் நானும் ஸ்ரீ கேர் அவர்களும் பேசத் தொடங்கினோம். இந்திய அரசியல், உலக அரசியல் ஆகியவற்றைப் பற்றி விரிவாகப் பேசத் தொடங்கியதில் நேரம் போனதும் தெரியவில்லை; வினோபா தமது ஜாகையை விட்டுப் பாத யாத்திரை தொடங்கியதும் தெரியவில்லை! ஒரு மாதிரிவிழித்துக் கொண்டு பார்த்ததில் வினோபா, அடுத்த முகாமுக்குள்ள தூரத்தில் பாதிதூரம் போய் விட்டார் என்பதை அறிந்தேன். உடனே குறுக்கு வழியில் வயல்களிலும் வரப்புகளிலும் விழுந்தடித்துக் கொண்டு ஓடினேன்! வினோபாவுக்கு முன்னால் பத்தடி தூரத்தில் போய் நின்றுகொண்டேன். வினோபாவை நெருங்கியதும் வணக்கம்செலுத்தினேன். என்னைப் பார்த்தும் "எனக்காக என்ன கொண்டு வந்திருக்கிறாய்?" என்று சிரித்துக் கொண்டே கேட்டார்.


ஜெயந்தி விழாவில் வினோபாஜி பேசுகிறார்.



''என்னைத்தான் கொண்டு வந்திருக்கிறேன்'' என்று சொன்னேன்.

பிறகு வழிநெடுக, தமிழ்ச் சொற்களைப் பற்றியும் அவற்றின் வழக்குகளைப் பற்றியும் பேசிக் கொண்டே அடுத்த முகாமாகிய பீர்க்கடவு கிராமத்துக்குப் போய்ச் சேர்ந்தோம்.

பீர்க்கடவு கிராமத்தில் அடிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இடத்தில் அமர்ந்தவுடன் அந்த வாரத்திய 'கல்கி' (செப்டம்பர் 9-ம் தேதி) இதழைக் கொடுத்தேன். என் பையிலிருந்து 'கல்கி' இதழை எடுத்தவுடனே விநோபா கோஷ்டியைச் சேர்ந்தவர்களுக்கு ஒரே குதூகலம்.



நில தானம் செய்தவர்களும் நில தானம் பெற்றவர்களும்.

''ஒன்றுமே கொண்டு வரவில்லை'' என்று சொன்னீர்களே! பாபாவுக்குக் 'கல்கி' கொண்டு வந்திருக்கிறீர்களே!'' என்று மகிழ்ச்சியோடு சொன்னார்கள். அந்த இதழ் பாரதியார் இதழ்.

'கல்கி' இதழைக் கொடுத்தவுடன் அதில் பேராசிரியர் கல்கி அவர்கள் பாரதியாரைப் பற்றி எழுதியிருந்த கட்டுரையைத்தான் முதலில் படித்தார். அதைப் படித்ததன் விளைவாகப் பாரதியாரைப் பற்றியும் கம்பரைப் பற்றியும் பல கேள்விகள் கேட்டார். அதைத் தொடர்ந்து பாரத நாட்டு இலக்கியங்களைப் பற்றியும், சைவம் வைணவம் முதலிய சமயங்களைப் பற்றியும் ராஜாஜி 'கல்கி'யில் தொடர்ந்து எழுதிவரும் சிறு கதைகளைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்தோம். அதிலும் ''வள்ளி தப்பினாள்'' என்று ராஜாஜி சமீபத்தில் எழுதிய கதையை விநோபா அடிகள் குறிப்பிட்டுப் பேசிய போது எனக்குப் பெரு வியப்பாகப் போய் விட்டது!

இப்படிப் பேசிக் கொண்டிருந்த போது, மாலைப் பிரார்த்தனைக் கூட்டத்துக்கு நேரமாகி விட்டது. பளிச்சென்று விநோபா தமது இடத்தை விட்டு எழுந்தார்.

அன்று மாலைப் பிரார்த்தனையில் பீர்க்கடவு கிராமம் சங்கல்ப கிராமமாக ஆகிவிட்டது என அவ்வூர் மணியக்காரர் ஸ்ரீ நஞ்சப்பா அறிவித்தார். சங்கல்ப கிராமம் என்றால் என்ன தெரியுமா? கிராமவாசிகள் சில உறுதி மொழிகள் எடுத்துக் கொள்கிறார்கள். கிராமத்தின் துணித் தேவையை வெளியிலிருந்து வரவழைக்காமல் நிறைவு செய்து கொள்வது, வேலை எல்லோருக்கும் பகிர்ந்து கொடுப்பது, சர்க்கார், அல்லது நகரசபைகளின் உதவி எதிர்பாராமல் கல்விச் சாலைகளைக் கிராமத்தாரே நடத்துவது, ஜாதி வித்தியாசமின்றி நடந்து கொள்வது என்று சங்கல்பம் செய்து கொண்டிருப்பதாக அறிவித்தனர்.

அன்றுமாலைப் பிரசங்கத்தில் விநோபா அடிகள் பல அரிய கருத்துக்களை விளக்கினார். அதில் ஒரு கருத்தை, ஒரு ரஸமான கதை மூலம் விளக்கியதை நேயர்களுக்கு இங்கே சொல்லுகிறேன்.

ஒரு சமயம் முஸ்லிம் மக்கள் நிரம்பிய கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தபோது: அக்பர் பாதுஷாவைப் பற்றி நான் விசாரித்தேன். ''அக்பரின் பெயரைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?'' என்று கேட்டேன்.

''ஓ, கேள்விப்பட்டிருக்கிறோமே!'' என்று சொன்னார்கள்.

''தேவலையே!'' என்று நினைத்து ''எங்கே, எப்பொழுது?'' என்று கேட்டேன்.

'''அல்லாஹு அக்பர்!' என்று ஒவ்வொரு நாளும்தான் சொல்கிறோமே!'' என்றார்கள்.

அக்பர் பாதுஷாவைப் பற்றி அவர்கள் கேள்விப்பட்டிருக்கிற லட்சணத்தைப் பார்த்தீர்கள் அல்லவா?

ஆகவே சரித்திரப் புத்தகங்களில் இந்த அரசரின் காலம் அந்த அரசரின் காலம் என்று குறிப்பிடுவது தவறு. காலம் அரசனுடையதல்ல; காலத்தை ஆள்பவர் கருத்துக்களும் உயரிய நோக்கங்களும் தரும் கவிஞர்களும், பக்திமான்களும்தான்!'' என்றார்.

இதைக் கேட்டதும் மெய்சிலிர்ப்பு ஏற்பட்டது. இப்படிக் கடல் மடை திறந்தாற் போல் நவநவமான கோணங்களிலிருந்து விநோபா அடிகள் பல விஷயங்களை ஆராய்ந்து கூறும் மொழிகளைக் கேட்கும் போது மெய் மறந்து போகிறோம்.

பிரார்த்தனைக் கூட்டத்துக்குப் பிறகு, விநோபா அடிகளிடம் விடை பெற்றுக் கொள்ளச் சென்றேன். அன்புடன் என் தோளின் மீது கைவைத்துப் ''போய் வா'' என்று சொன்னதை என் வாழ்நாள் உள்ளளவும் மறக்க முடியாது!

கடைசியில் ''இன்றைய பாரதத்தில் தீர்க்க திருஷ்டியுள்ள மகான்களில் ராஜாஜி முதன்மையானவர். அவருக்கு என் வணக்கங்களைத் தெரிவிக்க வேண்டும்!'' என்று விநோபா கூறினார்! இரண்டு மகான்களும் ஒருவரையொருவர் எப்படிப் புரிந்து மதிக்கிறார்கள் என்பதைக் கண்டபோது என் நெஞ்சம் தழுதழுத்தது. ராஜாஜியும் விநோபாஜியும் இருக்கும் யுகத்திலே நாம் பிறந்தோமே, நம்மை விட பாக்கியசாலிகள் யார் என்ற பெருமிதத்துடன் சென்னைக்குத் திரும்பினேன்!



ஆபீஸிலிருந்து வீட்டையடைந்த ரகு அலட்சியமாகத் தனது கோட்டையும் சட்டையையும் கழற்றி எறிந்து விட்டுத் தொப்பென்று சாய்வு நாற்காலியில் வந்து விழுந்தான். அறை முழுவதும் பரப்பிக் கிடக்கும் புஸ்தகங்களும், மூலைக் கொன்றாய் இறைந்து கிடக்கும் துணிமணிகளும், வீட்டுக்கு எசமானி அம்மாள் ஊரில் இல்லை என்பதைப் பறையறிவித்த வண்ண மிருந்தன.

அருகிலிருக்கும் மேஜை மீது கிடந்த மனைவியின் கடிதத்தைப் பார்க்கப் பார்க்க ரகுவுக்கு ஆத்திரம்தான் பற்றிக் கொண்டு வந்தது. தலைக்கு மேல் வேகமாகச் சுழன்று கொண்டிருந்த மின்சார விசிறியினாலும் அவனது உள்ளத்து உஷ்ணத்தைத் தணிக்க இயலவில்லை.

பிரசவத்துக்காக மனைவியை ரகு பிறந்தகம் அனுப்பி அன்றோடு ஆறு மாதங்களுக்கு மேலாகி விட்டன. பாட்டியின் பிடிவாதத்துக்காகத்தான், அவன் மனைவியை அனுப்பச் சம்மதித்தான். ஆனால் அச் சொற்ப நாளைக்குள் அவளைப் பிரிந்திருக்க, அவன் மனம் எவ்வளவு வேதனைப் பட்டது? என்று வருவாள், என்று வருவாள் என்று ஏங்கிய நாட்களும், எழுதிய கடிதங்களும் தான் எத்தனை? ஆனால் அந்த அன்பெல்லாம் இன்று எங்கே போய் விட்டது? அது தான், மனம் செய்யும் விசித்திர ஜாலம் போலும்!

எத்தனையோ மைல்களுக் கப்பாலிருந்து, அன்று தான் ரகுவின் மனைவி, மீனா ஊரிலிருந்து வருகிறாள். தன்னந் தனியாக வரும் அவளை அழைத்து வர, ஸ்டேஷனுக்குப் போகக் கூட அவனுக்கு விருப்பமில்லாமல் போய் விட்டது. கடிகாரத்தின் முள் தலை தெறிக்கிற வேகத்தில், நிமிஷமும், மணியுமாக 'டக் டக்'கென்று ஓடிக் கொண்டே யிருந்தது. எண்ணற்ற நினைவுகளில் அவனது மனம் குழம்பியது.

'அவசியம் ஸ்டேஷனுக்கு வாருங்கள்' என்று திரும்பத் திரும்ப எழுதியிருந்தாளே, அங்கே தன்னைக் காணாவிடில் அவளுக்கு எத்தனை ஏமாற்றமாயிருக்கும்? கொண்டு வந்த சாமான்களைச் சரி பார்ப்பாளா, அழுகிற குழந்தையைச் சமாதானப் படுத்துவாளா? தன்னைத் தவிர அவளுக்கு வேறு துணை யார் இருக்கிறார்கள்? அப்படி அவளைத் தவிக்க விடுவது மிகவும் பாபமல்லவா?

அந்தத் துரோகி, புஷ்பாவின் பெயரை நம் குழந்தைக்கு வைக்க வேண்டாமென்று எத்தனை கடிதங்கள் எழுதினேன்! என் வார்த்தையை அவன் மதித்தானா? இன்று நான்

ஸ்டேஷனுக்குப் போகப் போவதில்லை. தனியே திண்டாடி விட்டு, அவளாக வரட்டும். அப்போதுதான் புத்திவரும்.

உருக்கைவிடக் கடினமாக இருந்த ரகுவின் உள்ளப் போராட்டத்தில் மேற்படி தீர்மானம் தான் நிறைவேறியது. சட்டென்று சுவரிலிருந்த கடியாரத்தை அண்ணாந்து பார்த்த அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. மணி ஏழரை ஆகியிருந்தது. பரவியிருந்த பகற்பொழுது மாயமாய் மறைந்து எங்கும் இருளின் ஆட்சியே நடந்து கொண்டிருந்தது. மசூலிப் பட்டணத்திலிருந்து மீனுவைச் சுமந்து வரும் வண்டி, ஸ்டேஷனை அடைய, இன்னும் இருபதே நிமிஷங்கள்தான் இருந்தன. ஒரு டாக்ஸியிலே புறப்பட்டால் பத்தே நிமிஷத்தில் ஸ்டேஷனை அடைந்து விடலாம். ஆனால் அவனுக்கு மனம் வேண்டாமா?

உடைகளை மாட்டிக் கொண்ட ரகு அடுத்த தெருவிலிருக்கும் ஹோட்டலை நோக்கி நடந்தான். தானும் சாப்பிட்டுவிட்டு, மனைவிக்கு வேண்டிய ஆகாரத்தையும், பிளாஸ்கில் குழந்தைக்கான பாலையும் வாங்கிக் கொண்டு வீட்டை யடைந்தான்.

சரியாக எட்டேகால் மணிக்கெல்லாம் ரகுவின் வீட்டு வாசலில் கார் ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து குழந்தை புஷ்பாவுடன் மீனு இறங்கினாள். சாமான்களை எடுத்து வைத்து விட்டுத் திரும்பிய டிரைவருக்குப் பணத்தைக் கொடுத்து விட்டு, உள்ளே வந்த மனைவியை 'வா' வென்று கூட விசாரிக்காமல் கையிலிருந்த தினசரியிலே மூழ்கிப் போயிருந்தான் ரகு.


கணவரது இந்த அலட்சியம், மீனுவுக்கு ஒரு கணம் யாரோ சவுக்கால் ஓங்கிச் சுரீர் என்று அடிப்பது போலிருந்தது. பொங்குகிற பாலைப் போல், தன்னையும் மீறிப் பீறிட்டுக் கொண்டு வந்த அழுகையை உள்ளத்தினுள்ளேயே அடக்கிக்கொண்டு அவளாகவே வலுவில் சென்று பேசினாள்.

"ஏன், நீங்கள் ஸ்டேஷனுக்கு வரவில்லை? என் கடிதம் கிடைக்கவில்லையா ?" சொற்கள் தொண்டையிலேயே பல இடங்களில் இடறிய வண்ணம் வெளி வந்தன. ஆனால் ரகு வாயே திறக்கவில்லை. அவன் வேண்டுமென்றே மௌனமாக இருந்தான்.

"ஏன் பேச மாட்டேன் என்கிறீர்கள்? என்ன கோபம், நான் போட்ட கடுதாசி வரவில்லையா ?" என்று அடுக்கடுக்கான கேள்விகளைக் கேட்டுக் கொண்டே வந்தவள், கையிலிருந்த குழந்தையைக் கணவருக்கு நேராக நீட்டினாள். இதைச் சற்றும் எதிர்பார்க்காத ரகு ஒரு கணம் தனக்குள் திகைத்தான். மீனுவின் அழகிய கண்களின் கடையிலே, வைரத்துண்டுகளைப் போல் பிரகாசித்துக் கொண்டிருக்கும் கண்ணீரும், தன்னிடம் தானி வரும்

நாமகரணம்

— பி. மீனாக்ஷி —



குழந்தையும், அவன் மனத்தை என்னவோ செய்தன. பாசத்தின் விளிம்பிலே நின்று ஒரு கணம் போராடினான்.

"இந்தப் பட்டணம் உனக்குத்தான். பிளாஸ்கில் பால் வைத்திருக்கிறேன். நீ குடித்து விட்டு, குழந்தைக்கும் ஹார்லிக்ஸ் கரைத்துக் கொடு. காலையில் பேசிக் கொள்ளலாம்" என்று மனைவிக்கு உத்தரவு பிறப்பித்து விட்டு, 'விர்' என்று தன் அறையில் வந்து படுத்துக்கொண்டு விட்டான்.

தன் கணவரால் இப்படி நடத்தப்படுவோம் என்று அவள் கனவுகூடக் காணவில்லை. இந்தப் புது அனுபவம் தாங்க முடியாத ஒரு பாரமாக அவள் நெஞ்சை அழுத்தி வேதனைக்குள்ளாக்கிக் கொண்டிருந்தது. பசியினால் இடுப்பிலிருந்த குழந்தை வேறு வீறிட்டு அழுதது.

குழந்தையை அணைத்துத் தட்டிக் கொடுத்த வண்ணம் தரையிலே படுத்தாள் மீனா.

கட்டிலிலே வந்து படுத்துக் கொண்டு விட்ட ரகு புரண்டு புரண்டு படுத்தான். அவன் தூங்க விரும்பவில்லை. அவனால் நிம்மதியாகத் தூங்கவும் முடியாது. உள்ளூற நினைவுகள் பூச்சி மாதிரி குடைய ஆரம்பித்து விட்டால் தூக்கம் எப்படி வரும்?

தலைச்சன் பிரசவமாயிற்றே என்றுதான் மீனாவை அவள் பாட்டியுடன் அனுப்ப ஒப்புக் கொண்டான். அனுப்பி விட்டு அவன் பட்ட கவலைகளுக்கெல்லாம் இடமின்றிக் கடவுள் அவனுக்கு எவ்விதக் கஷ்டத்தையும் அளிக்கவில்லை. பெண் குழந்தை பிறந்து, தாயும் சேயும் சௌக்கியம் என்கிற கடிதத்தைப் பார்த்த பிறகுதான் அவனுக்கு உயிர் வந்தது.

அதன் பிறகு மீனாவிடமிருந்து ரகுவுக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் பதினோராம் நாள் குழந்தைக்குத் தொட்டில் போடப் போவதாகவும் 'புஷ்பா' என்று நாமகரணம் சூட்ட உத்தேசித்திருப்பதாகவும் எழுதியிருந்தாள். அதைப் படித்ததும் ரகு ஏகமாக ஆத்திரம் அடைந்தான்.

'அந்த மோசக்காரியின் பெயரை நம் குழந்தைக்கு இடவேண்டாம்' என்று வன்மையாகக் கண்டித்து அன்றே தன் மனைவிக்கு ஒரு கடிதம் எழுதினான். ஆனால் அதை லட்சியம் செய்யாத மீனா, பிடிவாதமாகத் தன் பெண்ணுக்குப் புஷ்பா என்கிற பெயரையே வைத்தாள். அதுதான் அவனது இத்தனை கோபத்துக்கும் காரணம்.

'பெயரில் என்ன இருக்கிறது?' என்று சுலபமாகக் கூறிவிட முடியுமா? அது எத்தனை விதம் விதமான இறந்த கால நினைவுகளைக் கண்முன் கொண்டு வந்து நிறுத்தி விடுகிறது?

★

கைபடாமல் நீண்ட நாட்களாகத் தூசி ஏறி நின்ற எதிர்வீட்டுப் பூட்டு ஒருநாள் திறக்கப்பட்டது. கையிலே தம்பூராவை ஏந்திய வண்ணம் இறங்கிய அந்த ஆரணங்கையும், பெரியவரையும் அந்த வீட்டில் இறக்கிய வண்டி சென்று கொண்டிருந்தது. ஒரு நிமிஷ நேரம் தான் இருவரும் வாசலில் நின்றிருப்பார்கள். மறு நிமிஷம் கதவு திறக்கப்பட்டு, பெரியவரைப் பின் தொடர்ந்து அந்த அழகியும் மறைந்து விட்டாள்.

காரிருளில் கண்ணைப் பறிக்கும் மின்னலைப் போல் தோன்றி மறைந்த இவ்வழகிய காட்சியை ரகு தன் அறையி லிருந்தபடியே ரசித்துக் கொண்டிருந்தான்.

"சட்டையை ஏன் மாற்றிப் போட்டுக் கொண்டிருக்கிறீர்கள்?" என்கிற மீனாவின் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினான் ரகு. ஏதோ பொய்க்காரணங்களை வாயால் கூறிக் கொண்டே பூட்ஸைக் காலில் இணைத்துக் கொண்டிருந்தான்.

"ஆபீசுக்கு அத்தனை அவசரம், அவசரம் என்று அடுக்களையில் என்னைப் பறக்க அடித்து விட்டுச் சட்டை போட்டுக் கொள்ளும் போது, தெருவிலே என்ன பார்க்க வேண்டியிருக்கிறது?" என்று கேட்கத் துடித்த நாக்கை அடக்கிக்கொண்டு உள்ளே சென்றாள் மீனா.

மீனா ரகுவினுடைய அத்தைபெண். துள்ளித் திரிகிற வயதிலேயே பெற்றோரை விழுங்கி அனாதையாகி விட்ட அவள் தன்னுடைய மாமன் வீட்டையே அடைக்கலம் புகுந்தாள். அவளை ஆதரிக்கும் பொறுப்பின் மூலம் தன் மனைவியைப் பிரிந்த மனக்கவலையை ரகுவின் தந்தை மறந்திருந்தார். ரகுவுக்கும் மீனாவின் வருகை ஒரு பற்றுக்கோடாக இருந்தது.

கட்டுப்பாட்டுக்கு அடங்காத பருவ காலங்களின் விசித்திரமான சுழற்சியிலே மீனா பூரண எழிலுடன் பூத்துக் குலுங்கினாள். பால்யத்திலிருந்தே ஒன்றாகப் பழகியவர்கள் ஆதலால், பரஸ்பரம் அவர்கள் உள்ளத்திலே காதல் பிறந்தும், நாணம் அவர்களைத் திரையிட்டுத் தடுத்து நிறுத்தவில்லை. ரகுவுக்காகத் தானும் தனக்காகவே ரகுவும் பிறந்திருப்பதாகவே எண்ணி அவள் மனத்தில் இன்ப அலை மோதிக் கொண்டிருந்தது. ஆனால் இந்தச் சமயத்தில்தான் விதி புஷ்பாவின் உருவத்தில் குறுக்கிட்டது.

சுமார் ஒரு வாரத்துக்குள், எதிர் வீட்டுக்குப் புதிதாகக் குடி வந்திருப்பவர்களைப் பற்றி ரகு விசாரித்து அறிந்து கொண்டுவிட்டான். புஷ்பா — ஒரு இளம் பாடகி. வயோதிகரான அவள் தந்தையைத் தவிர அவளுக்கு வேறு யாரும் கிடையாது. சுமாரான குடும்பம். ஏதனாலோ இன்னும் புஷ்பா மணம் செய்துகொள்ளவில்லை. இதற்கு மேல் அவர்களைப்பற்றி அறிந்து கொள்ள வேறு எந்த முக்கிய விஷயங்கள் இருப்பதாகவும் ரகுவுக்குத் தோன்றவில்லை.

காலப்போக்கில் மீனாவும், எதிர் வீட்டுப் புஷ்பாவும் சினேகிதிகள் ஆயினர். ஒரு நாள் ரகு, மீனாவிடம் புஷ்பாவை அவளுக்குப் பாட்டு சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்திருப்பதாகக் கூறினான். அவளுக்கும் உள்ளூற ஆசைதான். 'சரி' என்று ஒப்புக்கொண்டு விட்டாள். ஆனால் அது பின்னால் இத்தனை தூரம் வந்து முடியும் என்று அவள் எதிர்பார்க்கவேயில்லை.

புஷ்பாவின் நடமாட்டம் அந்த வீட்டில் அதிகமாயிற்று. தினம் அவளைச் சந்திப்பதில் ஒரு புதுமகிழ்ச்சியை அவன் உணர்ந்தான். அது நாளடைவில், 'ஒருநாள் கூடப் புஷ்பாவைப் பார்க்காமல் இருக்க முடியாது'

என்கிற நிலைமைக்கு ரகுவைக் கொண்டு விட்டு விட்டது.

தன்னுடைய அளவு கடந்த அன்பை ஒவ்வொரு கோணங்களிலும் புஷ்பாவிடம் பிரதிபலித்தான் ரகு. இயற்கையிலேயே உயர்ந்த ஞானமும், சிறந்த சாரீரமும் உடைய புஷ்பாவின் பாட்டு ரசிகர்களிடையே பெருத்த கவர்ச்சியைப் பெற்றது. தனக்குத் தெரிந்த பல இடங்களிலும், சபைகளிலும் புஷ்பாவின் கச்சேரி நிகழ ரகு இடைவிடாது உழைத்தான். நாளுக்கு நாள் புஷ்பாவின் புகழும், நிலையும் உயர்வது கண்டு அவன் மனம் பூரித்தான். புஷ்பாவும் ரகுவினிடம் அதே அன்பைத் தான் காண்பித்தாள். தன் வாழ்வையே ரகுவுக்கு அர்ப்பணித்துவிடவும் அவள் தயாராகி விட்டாள்.

ஆதியிலிருந்தே, தான் அப்படி அலட்சியமாக இருந்துவிட்டது எத்தனை பெரியதவறு என்பதை மீனு அப்போதுதான் உணர்ந்தாள். அணு அணுவாகத் தன் அத்தானின் செய்கைகளைக் கண்காணித்து வந்த அவளுக்கு இப்போது எல்லாம் நன்ருக விளங்கிவிட்டன.

மகுடியின் இசையிலே வசப்படும் நாகத்தைப் போல், புஷ்பாவின் அழகிலே தடுமாறி நிற்கும் தன் அத்தானை நிரந்தரமாக இழந்து விட்டது போன்றதொரு பயமும் பீதியும் அவள் உள்ளத்தைக் கவ்விக் கொண்டன. அதற்கேற்ப ரகுவே, 'ஒரு நாள் மீனுவிடம் வந்து அவளுக்காகத் தான் பார்த்திருக்கும் பங்களூர் வரனைப் பற்றிப் பிரஸ்தாபித்தான்.

தன்னைக் கைவிடத் துணிந்து விட்ட அத்தானின் இவ்வார்த்தைகளைக் கேட்ட மீனு ஒரு கணம் நடுங்கியே போனுள். ஏக காலத்தில் ஆயிரமாயிரம் சர்ப்பங்களினுல், தீண்டப்பட்டவளைப் போல் அவளது உயிர் துடித்தது.

அடுக்கடுக்காக மாதங்களும் புது வருஷங்களும், மாறி மாறி வந்து போய்க் கொண்டிருந்தன. அதன் ஓட்டத்துக்கேற்ப மனிதர்களும் மாறித்தானே ஆக வேண்டும்?


புஷ்பாவினுடைய, புன்சிரிப்பும், மயக்கும் விழிகளும் இப்போது பாங்கர் பட்டாபியின் பக்கம் திரும்பி விட்டன என்பதை ரகு அறிந்து கொண்டான். ஒரு நாள் புஷ்பாவும், தான் பட்டாபியை மணந்து கொள்ள இருப்பதைத் தெரிவித்து, தன்னை மறந்து விடும்படியும், அடிக்கடி சந்திக்காமலிருக்கும்படியும் கேட்டுக் கொண்டாள்.

ரகுவினுல் ஒரு கணம் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. சிரிக்கச் சிரிக்கப் பேசி, அத்தனை காலம், தன்னைப் பித்தாக அடித்து விட்ட புஷ்பாவின் வாயிலிருந்து வரும் வார்த்தைகளா இவை?

யாருமில்லாத இடத்தில், பைத்தியம் போல், எதையோ வெறிக்கப் பார்த்துக் கொண்டு நின்ற ரகுவை அத்தனை காலம் பழகிய தோஷத்துக்காக, அவனது தாய்கள் தன் வீட்டில் கொண்டு போய்ச் சேர்த்தன.

ஒரு நாள் திடீரென்று முன்போலவே அந்த எதிர் வீட்டில் பழைய பெரிய பூட்டு தொங்கிக் கொண்டிருந்தது.

திடீரென்று குழந்தை வீறிட்டு அழுது கொண்டிருக்கும் குரலைக் கேட்டு எழுந்தான்




நீர்க்கொழும்பு ஜில்லா நீதிபதி ஸ்ரீ செ. தனபால சிங்கம் அவர்களின் குமாரியும், இலங்கை "தினகரன்" பத்திரிகைச் செய்தி ஆசிரியர் ஸ்ரீ டி. ஜெயதேவனின் சகோதரியுமான சௌ. அனசூயா தேவி பி.ஏ.க்கும், கொழும்பு தொழில் இலாகா அதிகாரி சிரஞ்சீவி எஸ். வாமதேவன் எம்.ஏ., அவர்களுக்கும் ஆகஸ்டு 22-ம் தேதி வெகு விமரிசையாகத் திருமணம் நடைபெற்றது. வாழ்க, மணமக்கள்!

ரகு. எத்தனை நேரமாக அது அப்படி அழுது கொண்டிருக்கிறது என்பது அவனுக்குத் தெரியாது. கூடத்து விளக்கைப்போட்டான். இடக் கையை, தலையணையாக்கித் தரையிலே படுத்துக் கொண்டிருந்த மீனு தன்னை மறந்து தூங்கிக் கொண்டிருந்தாள். ஒதுக்கப்படாத அவளது அழகிய கேசம் மூலைக்கொன்ருய்ப் பறந்து கொண்டிருந்தது. தாயின் அணைப்பிலிருந்து நழுவி நழுவி வந்து விட்ட குழந்தை வேறு ஒரு பக்கத்தில் திரும்பி அழுது கொண்டேயிருந்தது. அவள் காதில் அது விழவேயில்லை. தொடர்ந்து இரண்டு நாளைய ரயில் பிரயாணம், அவளை நல்ல தூக்கத்தில் ஆழ்த்தியிருந்தது.

சட்டென்று குழந்தையைத் தாவி எடுத்துக் கொண்ட ரகுவின் கண்ணில், தான் வாங்கி வைத்த டிபன், பிரிக்கப்படாமல் அப்படியேயிருந்தது அப்போது தான் பட்டது. அவள் பட்டினியாகவே படுத்துக் கொண்டு விட்டாள் என்பதை அவன் உணர்ந்தான்.

தோளில் சாத்தியிருந்த குழந்தை ரகுவின் எந்தச் சமாதானத்துக்கும் மசியாமல், அழுதது. அவளை எழுப்பவும் அவனுக்கு விருப்பமில்லை. அருகிலிருந்த பாலை எடுத்துக் கொண்டு, ஹார்லிக்ஸுக்காக மீனுவின் பெட்டியைத் திறந்த ரகுவின் கையில் எப்போதோ மனைவியின் பெயருக்கு வந்த கடிதம் ஒன்று

உங்கள் பணவசதிக்குத் தகுந்தபடி ஒரு நேர்த்தியான காமிராவை சொந்தத்திற்கு வாங்கி வைத்துக்கொள்ளுங்கள்



ஸிக்ஸ்-20 கோடக் 'ஜூனியர்' I காமிரா
ஒரு பாக்ஸ் காமிராவைப்போல் சுலபமாய் உபயோகிக்க முடியும். தவிர மடித்து வைத்துக் கொள்ளும் வசதியிருப்பதால் கையில் எடுத்துச் செல்லமுடியும். அழகிய தற்கால முறையில் அமைந்தது. 2¼", 3¼" சை. அளவு அளவில் கோடக் 620 பிலிம்மில் 8 படங்கள். ரூ. 78/-
தோல் கேஸ் . . ரூ. 9/8

கோடக் 'ரெடினெட்' காமிரா
வேகமான எப்/3.5 லென்ஸ் காம்பூர் ராபிட் ஷட்டர் (1/500) புதிய 'பிளாஷ்-வால்வு' பொருத்தம் எக்ஸ்போஷரை சுலபமாக்குகிறது. விரலின் தட்டு ஷட்டரை அமைக்கிறது. பிலிமைச்சுருட்டு எக்ஸ்போஷரை எண்ணுகிறது. 'கோடக்' 135ல் கருப்பு வெள்ளைப் படங்கள் கலர் பிலிம் (35 எம்எம்) 36 அல்லது 20 படங்கள் எடுக்கலாம்.
எவர்ரெடி கேஸுடன் .. .. ரூ. 260/-
ப்ளாஷ்ஹோல்டர் .. .. ரூ. 47/8

கோடக் 'ரெடினா' Ib காமிரா
எப்/2.8 லென்ஸ், கோட் செய்து கலர்-கரெக்ட் செய்தது. ஸின்க்ரோ-காம்பூர் ஷட்டர் (1/500) 'பிளாஷ்-வால்வு' பொருத்தங்களுடையவை. பிலிமைச் சுருட்டு கூடவே ஷட்டரை மறுபடி செட் செய்யலாம். 'கோடக்' 135ல் கருப்பு வெள்ளைப் படங்கள், (35 எம்எம்) கலர் பிலிம்மில் 36 அல்லது 20 படங்கள் கிடைக்கும்.
எவர்ரெடி கேஸ் உள்பட .. .. ரூ. 380/-
ப்ளாஷ்ஹோல்டர் .. .. ரூ. 47/8

குறிப்பிட்ட விலைகளில் விற்பனை வரி அடங்கவில்லை

K. 2498

பிலிமையே எப்பொழுதும் உபயோகியுங்கள் !

சிக்கியது. குழந்தைக்கு ஹார்லிக்ஸைப் புகட்டி விட்டுக் கடிதத்தைப் பிரித்துப் படிக்கலானாள்.

என் அன்புள்ள மீனுவுக்கு,

நான் ஏதோ பெரிய தியாகம் செய்து விட்டதாகவும், என் தியாகத்தின் நினைவாகவே தான், தாங்கள் என் பெயரைச் சூட்டத் தீர்மானித்து விட்டதாகவும் எழுதியிருந்தீர்கள்.

நான் அப்படி ஒன்றும் பெரிய தியாகம் செய்து விடவில்லை. உண்மையைக் கூறப் போனால் நான் தங்களுக்குத்துரோகம் செய்ய இருந்தேன். என்னை அந்தப் பாபத்திலிருந்து காப்பாற்றிய தங்களுக்கு நான் தான் நன்றி செலுத்த வேண்டும். ரகுவை நான் உயிருக்குயிராய்க் காதலித்தது உண்மைதான். அவரை மணந்து கொள்ள உரிமையுள்ள உங்கள் மனம் புண்ணாவதை அப்போது என் சுயநலக்கண்கள் கவனிக்கத்தவறி விட்டன.

ஆனால், ''அக்கா! எனக்கு என் அத்தானைத்தவிர இந்த உலகில் வேறு எவருமேகிடையாது. வாழ்க்கையில் மிக மிக அதிகமாக நம்பியிருக்கும் அந்த ஒருவரையும் இந்த அனாதையிடமிருந்து அபகரித்துக் கொண்டு விடாதீர்கள்'' என்று தாங்கள் என் காலில் விழுந்து கெஞ்சினீர்கள்.

உடனே மனத்தை இயந்திரமாக்கிக் கொண்டு ரகுவிடம் அன்பு இல்லாதவள் போல் நடித்தேன். என் நடிப்பு வெற்றி பெற்றது. ஆனால் பட்டாபியிடம் நான் தோற்றுப் போனேன். அவனுக்கு எப்போதுமே என்னிடம் ஒரு கண் உண்டு. ஆனால் ஆதியில் நான் அவனை அலட்சியம் செய்ததற்கு என்னிடம் சரியாக வஞ்சம் தீர்த்துக் கொண்டு விட்டான். தன்னுடைய காச நோயை எனக்கு விற்று விட்டு, என்னுடைய அத்தனை சொத்துக்களையும் சுருட்டிக் கொண்டு வேறொரு பெண்ணுடன் கப்பல் ஏறி விட்டான். இந்த ஏக்கத்தில் என் அப்பாவும் இறந்து விட்டார்.

சகோதரி மீனு, ஏதேதோ எழுதித் தங்கள் மனத்தைக் கஷ்டப்படுத்தி விட்டேன். தங்கள் உள்ளத்தில் என் நினைவு இருந்தாலே போதும். என் ஆத்மா சாந்தியடையும்.

உன் அன்பு மறவாத சகோதரி
''புஷ்பா''

சட்டென்று விழித்துக் கொண்ட மீனு அருகில் இருந்த குழந்தையைக் காணோமென்றதும் திடுக்கிட்டு எழுந்திருந்தாள். தலைக்கு மேல் விளக்கு பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தது. அழுகிற குழந்தையைச் சமாதானப் படுத்திக் கொண்டிருக்கும் தன் கணவரின் உருவம் அவள் கண்ணில்பட்டது. பெற்ற பாசம் விடுமா? மறுகணம் ஏதோ ஆவேசம் வந்தவளைப்போல் மீனு விர்ரென்று தன் கணவர் அறையை நோக்கி நடந்தாள்.

''என்னை மன்னியுங்கள், உங்களுக்கு விருப்பமில்லாத காரியத்தை நான் இனி மேல் செய்யவே மாட்டேன்'' என்று குழந்தையைப் போல் திரும்பத் திரும்பக் கூறிய வண்ணம், தன் கால்களைப் பிடித்துக் கொண்டு கண்ணீர் வடிக்கும், அன்பு மனைவியைத் தூக்கி நிறுத்தினான் ரகு. வழிந்தோடும் அவளது கண்ணீரை அவனது கைகள் துடைத்தன.

''நான் தான் உங்கள் இருவராலும் மன்னிக்கப் பட வேண்டியவன். நீ என்னை மன்னித்தாலும், புஷ்பா என்னை மன்னிப்பாளா?'' என்று கூறிக் கொண்டு வரும்போதே ரகுவின் குரல் கம்மியது.

மறுகணம் ரகு, ''புஷ்பா'', என்று வாயார அழைத்த வண்ணம் கையிலிருந்த குழந்தையைத் தன் மார்புடன் அணைத்துக் கொண்டான். குழந்தை சிரித்தது!

தமிழ் இலக்கிய உலகத்துக்கு இணையற்ற சேவை செய்து வந்த ஸ்ரீ வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் சென்ற ஆகஸ்டு மாதம் 26-ம் தேதி இறைவன் திருவடி சேர்ந்தார் என்னும் செய்தியைக் கேள்வியுற்றுத் தமிழ் கூறும் நல்லுலகம் பெரும் துக்கத்தில் ஆழ்ந்துவிட்டது. எழுபத்து நாலு வயதான அவர் தமது ஆயுளில் ஐம்பது ஆண்டுகளை உரையாசிரியராகவே கழித்தார். பல ஆண்டுகளுக்கு முன்பே ஸ்ரீ கோபாலகிருஷ்ணமாச்சாரியார் கம்பராமாயணத்துக்கும் வில்லி பாரதத்துக்கும் உரைகள் எழுதிப் புகழ் பெற்றார். தண்டியலங்கார விளக்க உரையை எழுதி அச்சிட வேண்டும் என்ற அவரது நீண்ட கால இலட்சியம் என்று நிறைவேறியதோ, அன்றே அவரது உலகவாழ்வு முடிவுற்றது. இரு மொழிகளில் புலமை வாய்ந்த அவர் வைஷ்ணவ சம்பிரதாய நூல்களில் தேர்ந்த ஞானமும், சைவ சமய நூல்களில் ஆராய்ச்சித் திறனும் பெற்றிருந்தார். தமிழ் நாட்டில் புகழ் பெற்ற உரை நூல் பேராசிரியராக விளங்கிய ஸ்ரீ கோபாலகிருஷ்ணமாச்சாரியாரின் குமாரரான கட்டடக் கலைஞர் ஸ்ரீ வை. மு. நரசிம்மன் அவர்களுக்கு நமது ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.





Erasmic
PERFUMED
COCONUT
HAIR OIL
கூந்தலுக்கு இராஸ்மிக்
பரிமள தேங்காயெண்ணெய்

ECH. 1-50 TM

ரகுபதி ராகவ

[அகமதாபாத் நவஜீவன் காரியாலயத்தினர் பிரசுரம் செய்திருக்கும் 'சத்தியமே தெய்வம்' என்னும் காந்தி வசன மஞ்சரியிலிருந்து ராஜாஜி எடுத்து எழுதியது]

46

காந்திஜி தொடர்ந்து கூறினார்:

ஆங்கில மொழியில் God என்பது ஹிந்து சாஸ்திரங்களில் **ஈசுவரன்**, தேவாதி தேவன், கடவுள் என்று வழங்கும். ஆனபடியால் மானிட ஜன்மத்தைவிட உயர்ந்த உயிர் வர்க்கங்களாகிய தேவர்களுக்கு God என்கிற ஆங்கில மொழியை வைத்துச் சொல்வது தவறு. அதனால் ஏற்பட்ட குழப்பமே யொழிய கடவுள் ஒன்றே என்கிற உண்மை ஹிந்து மதத்திலும் உறுதியாகக் கொள்ளப்பட்டதே யாகும். நான் ஹிந்து மதத்தை முற்றிலும் ஒப்புக் கொண்டவனே யாவேன். கடவுளுக்குப் போட்டியாக வேறு ஒரு தெய்வமில்லை என்பதைப் பற்றி என் மனத்தில் எப்போதும் சந்தேகமிருந்ததில்லை. என்னுடைய குழந்தைப் பருவத்திலும் கூட இதைப் பற்றி என் மனத்தில் சந்தேகம் இருந்ததில்லை. ஈசன் ஒருவனல்ல,' பல ஈசுவரர்கள் உண்டு என்று யாரும் எனக்குச் சொன்னது மில்லை.

மூர்த்தி பூஜையைப் பற்றி நான் உங்களுக்குச் சொல்ல வேண்டும். எந்தச் சமயத்திலுமே சரி, ஏதேனும் ஒரு லிங்கத்தை வைத்துத்தான் கடவுளை வழிபட வேண்டும். முஸல்மான்களைப் பாருங்கள். மசூதியைக் கடவுள் குடியிருக்கும் வீடாகப் பாவிக்கிறார்கள், அந்தக் கட்டடத்தைக் காப்பதற்கு உயிரைக் கொடுக்க அவர்கள் தயார். கிறிஸ்தவர்கள் ஏன் கோவிலுக்குப் போய்ப் பிரார்த்தனை செய்கிறார்கள்? பிரார்த்தனைக்குக் கோவில்தான் இடம் என்று ஏன் நினைக்கிறார்கள்? பிரமாணம் செய்யும்போது ஏன் பைபில் புஸ்தகத்தைத் தொட்டு சத்தியம் செய்கிறார்கள். இந்தச் சம்பிரதாயங்களைப் பற்றி நான் குறை கூறவில்லை. ஏதேனும் ஒரு சின்னம் வழிபாட்டுக்கு அவசியம் என்பதற்காகத்தான் எடுத்துச் சொல்லுகிறேன். மசூதிகள் கட்டவும் சமாதிகள் கட்டவும் லட்சக் கணக்கில் ஏன் பணம் செலவு செய்கிறார்கள்? அதுவும் ஒருவித மூர்த்தி பூஜைதானே! ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் மேரி அம்மை முதலிய விக்கிரகங்கள் முன் ஏன் மண்டியிட்டு வணங்குகிறார்கள்? கல்லில் செதுக்கிய விக்கிரகமாயினும் சரி, படங்களாயினும் சரி, கண்ணாடியில் எழுதிய சித்திரமாயினும் சரி, பல வடிவங்களின் முன் விழுந்து நமஸ்கரிக்க வில்லையா?

பாதிரியார்: அது வேறு விஷயம். என்னுடைய தாயாரின் படம் ஒன்றை நான் வைத்துக்கொண்டு அன்பு காட்டுவது போலத்தான் நீங்கள் சொல்லுவதெல்லாம். என்னைப் பெற்றவளின் படத்தை நான் முத்தமிட்டு அன்பு காட்டினேனானால் அது மூர்த்தி பூஜையாகாது. கிறிஸ்தவ முனிவர்களையாவது, முனிவர்களின் உருவங்களையாவது நாங்கள் வணங்குவது கடவுள் பூஜையல்ல. நாங்கள் பூஜிப்பது ஆண்டவன் ஒருவனையே. அவன்தான் ஆதிகர்த்தா; ஈசன், வேறொருவருமல்ல.

காந்திஜி: நாங்கள் பூஜிப்பதும் கல்லையும், செம்பையும் அல்ல. கல்லிலும் செம்பிலும் உள்ள கடவுளைத்தான் நாங்கள் பூஜிப்பது. விக்கிரகம் அழகாக இருந்தாலும் சரி, கரட்டு லிங்கமாயினும் சரி, அது ஒரு லிங்கமே யொழிய கடவுள் அல்ல.

பாதிரியார்: ஆனால் கிராமத்திலுள்ள பாமரர்கள் கல்லைத்தானே கடவுள் என்று எண்ணுகிறார்கள்.

காந்திஜி: மன்னிப்பீராக. அவர்கள் செலுத்தும் பூஜை கல்லுக்கு அல்ல. நீங்கள் வழிபடும் ஆண்டவனையே தான் அந்தக் கல்லின் வழியாக அவர்கள் வழிபடுகிறார்கள். மேரி அம்மையின் விக்கிரகத்தின் முன் அல்லது சித்திரத்தின் முன் நீங்கள் மண்டிபோட்டு வணங்கும் போது உங்களுடைய உத்தேசமென்ன? ஏகநாதனைப் பெற்ற தாயை உங்களுக்காகப் பரிந்து பேசி ஆண்டவனிடம் அருள்பெறக் கோருகிறீர்கள். அம்மையைக்கொண்டு ஈசனை அடையப்பிரார்த்தனை செய்கிறீர்கள். ஈசனுக்கும் உங்களுக்கும் ஒரு தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள மேரி அம்மையை வணங்குகிறீர்கள். ஹிந்துக்களும் அவ்வாறே ஆண்டவனுக்கும் தங்களுக்கும் ஒரு தொடர்பு வேண்டுமென்று கல்லில் செதுக்கிய ஒரு மூர்த்தியை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் மேரி அம்மையை வணங்குவதைக் கண்டு நான் ஆச்சரியப்படவில்லை. அதன் பொருளை நான் காண்கிறேன். அதைப் போலவே ஹிந்து சம்பிரதாயத்தையும் சரியாகப் புரிந்து கொள்ள

வேண்டும். முஸல்மான்கள் ஒரு மசூதிக்குள் செல்லும்போது அவர்களுடைய உள்ளத்தில் பக்தியும் பயமும் ஆனந்தமும் காண்கிறோம். உலகமெல்லாம் ஒரு மசூதியல்லவா? பூமிக்குமேல் வளைந்து நிற்கும் வானமும் ஒரு மசூதியல்லவா? அந்தப் பெரிய மசூதியிருக்க ஒரு கட்டடத்துக்குள் புகும்போது ஏன் இந்தத் தனிப்பட்ட பக்தியும் பயமும்? இதை நான் அறிவேன். முஸல்மான்களுடைய கருத்தும் உணர்ச்சியும் எனக்குநன்றாகத் தெரியும். அதில் எந்தவிதமான தவறுமில்லை. ஆண்டவனை அண்டுவதற்கு அவர்கள் கண்ட வழி இது. ஹிந்துக்கள் ஆண்டவனை அணுகுவதற்குக் கண்ட வழி அவர்கள் அனுசரிக்கும் மூர்த்தி பூஜை. முறை வேறு பட்டாலும் எல்லாருமே ஒரே ஆண்டவனைத்தான் அவரவர்களுடைய முறையில் அவரவர்கள் அணுக முயல்கிறார்கள்.

பாதிரியார்: கத்தோலிக்கருடைய கொள்கை என்னவென்றால், ஆண்டவன் உண்மை மார்க்கத்தைத் தங்களுக்குக் காட்டி விட்டான்; ஆனபடியால் மற்ற மார்க்கங்கள் தவறாகும். அவர்கள் அவற்றை ஆதரிக்க இயலாது என்பது.

காந்திஜி: ஆண்டவனுடைய கருத்துக்கள் ஒரே ஒரு புஸ்தகத்தில்தானா இருக்க வேண்டும்? பைபில் என்னும் திருநூலில் மட்டுமே ஆண்டவன் பேச வேண்டுமா? ஆண்டவனுடைய ஆட்சியையும் சக்தியையும் ஏன் வரம்பிட்டு உரைக்கப் பார்க்கிறீர்கள்?

பாதிரியார்: ஏசுநாதர் அற்புத நிகழ்ச்சிகளை நிகழ்த்தித் தம்முடைய தெய்விகத்தை நிரூபித்து விட்டார். ஆண்டவனிட மிருந்து பெற்ற செய்தியை ஏசுநாதர் உபதேசித்தார். ஆகையினால் அவருடைய வாக்கு நமக்குப் பிரதானம்.

காந்திஜி: முகம்மது நபியும் அப்படித்தானே உபதேசித்தார். அவர் பேச்சை ஏன் தள்ளிவிட வேண்டும்? கிறிஸ்துவ சாஸ்திரத்திலும், இஸ்லாமிய சாஸ்திரத்திலும், ஹிந்து சாஸ்திரத்திலும் எல்லாவற்றிலுமே தெய்விகச் சான்று சொல்லப்படுகிறது. ஒன்றைத் தள்ளி ஒன்றை எப்படி ஒப்புக் கொள்ள முடியும்? எல்லாவற்றையுமே நாம் மதிக்க வேண்டுமல்லவா?

பாதிரியார்: மகம்மது நபி அற்புத நிகழ்ச்சிகள் தன்னால் நிகழ்த்திக் காட்ட முடியாது என்றாரே.

காந்திஜி: உண்மை. ஆண்டவனிடம் பக்தி செலுத்துவதற்கு அற்புத நிகழ்ச்சிகள் என்னத்திற்கு வேண்டும்? அந்த முறையில் பக்தியும் நம்பிக்கையும் தோற்றுவிக்க முகம்மது நபி பிரியப்படவில்லை. ஆயினும் ஆண்டவனுடைய செய்தியை நான் சொல்லுகிறேன் என்று தான் முகம்மது நபி உபதேசித்தார்.

ஹரிஜன், 13—3—37

தமிழ் கூறும் நல்லுலகம்

திருவள்ளுவர் கலை மன்றம்

வங்கத்தில் தமிழோசை முழங்கி வரும் ஹௌரா திருவள்ளுவர் கலை மன்றத்தின் ஆதரவில் செப்டம்பர் மாதம் 16உ "பாரதி விழா" திரு ஜம்புநாதன் அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அவ்வமயம் ஸ்ரீ அரங்க சீனிவாசன் அவர்கள் பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்டு, அமரகவி பாரதியைப் பற்றிச் சுவை பொருந்திய சொற்பொழிவாற்றினார். அவ் விழாவையொட்டி, பாரதி பாட்டுப் போட்டி, கும்மி, கோலாட்டம், நடனம் முதலிய நிகழ்ச்சிகளும் ஏற்பாடாகி யிருந்தன. பாரதி பாட்டுப் போட்டியில் மூன்று குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

தமிழன்பர்கள் திரளாகக் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்தனர்.

கரக்பூர் இளைஞர் மன்றம்


மேற்கு வங்கத்தைச் சேர்ந்த கரக்பூரில் தென்னிந்திய இளைஞர்களால் நடத்தப்பட்டு வரும், இளைஞர் மன்றம் சார்பில், சென்ற 9—9—56ல், கல்கத்தா ஸ்ரீமதி மங்களம் மணியவர்களுடைய சங்கீதக் கச்சேரி தகுந்த பக்க வாத்தியங்களுடன் நடைபெற்றது.

கடைசியில், இளைஞர் மன்றம் காரியதரிசி ஸ்ரீ ராமசுப்ரமண்யம் கூறிய வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

பம்பாய்த் தமிழ்ச் சங்கம்

தமிழர் வாழ்வில் ஓர் மறுமலர்ச்சியை உண்டு பண்ணிய கவியரசர் ஸ்ரீ சுப்ரமணிய பாரதியின் நினைவு தினம் பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தில் செப்டம்பர் 9உ கொண்டாடப் பட்டது. விழாவுக்கு ஸ்ரீ சி. வி. சுப்ரமண்யம் தலைமை வகித்தார். ஸ்ரீ மதி லட்சுமி கிருஷ்ண மூர்த்தி பாரதியின் பாடல்களில் சிலவற்றை உணர்ச்சிகரமாகப் பாடியபின், ஸ்ரீ ஆர். ராமசுவாமி, வித்துவான் ஆ. கி. ஜெயலட்சுமி, ஸ்ரீ எஸ். எஸ். மைக்கேல் பெர்னாந்து ஆகியோர்கள் முறையே, 'பாரதி கண்ட கண்ணன்', 'பெண்மையைப் போற்றிய பாரதி', 'பாரதியின் தேசியக் கனல்' ஆகிய தலைப்புகளில் விரிவுரைகள் நிகழ்த்தினர்.

பின்னர் ஸ்ரீமதி மீனாட்சி மூர்த்தி குழுவினரின் இன்னிசைக் கச்சேரி நிகழ்ந்தது.



பல லக்ஷம் பேர்கள் விரும்புவது

இவ்வழகிய அக்பா காமிராவைக் கொண்டு அற்புதமான ஸ்னாப்புகள் எடுக்க உங்களுக்கு விசேஷத் திறமை அவசியமே யில்லை. நிரந்தரக் கியாதிபெற்ற கிளாக் காமிராவில் B2 (120) பிலிமைப் பொருத்தி 8 தெளிவான படங்கள் (2¼"×3¼") எடுக்கலாம். கண்மட்டத்தில் ஒரு வியூபைண்டரும், உருவப்பட விசேஷ லென்ஸ் அமைத்தலும், இரு திறப்புகள், கேபிள் ரிலீஸ் ஸாக்கெட், இரவில் படம்பிடிக்க பிளாஷ் இணைப்புள்ள ஷட்டர் முதலிய வசதிகளுடன் கூடியது. இன்றே உங்கள் அக்பா டீலரிடம் பார்த்து ஒரு கிளாக் வாங்கி விடுங்கள்.

விலை ரூ. 29 மட்டும்

Agfa கிளாக்

அக்பா பாரம்பரியம் 1867-லிருந்து ஏற்பட்ட சிறப்பு பிரதிபலிக்கும் ஒரு காமிரா

அக்பா இந்தியா பிரைவேட் லிட்.

பம்பாய் ★ புது டில்லி ★ கல்கத்தா ★ மதராஸ்


NOPAIN
டியூபுகளில் ஏன்
பாட்டில்களல்ல?
* கலவைப் பொருள்கள் புத்தம் புதிய தாகவும் சுருசுருப்புடனும் இருக்கும்.
* தூய்மை கெட்டுப் போக முடியாது.
* வேண்டிய அளவில் வெளியே எடுக்க முடியும் ஆகையால் சிக்கனமானது.
நோபெயின்
பாம்
சுகாதார முறையில் அடைக்கப்பட்ட ட்யூபுகளில்
தலைவலி, தசைக் குரிய வலி, மார்ச் சளி இவைகளுக்கு
ஒரு கல்கத்தா கெமிக்கல் தயாரிப்பு
CF-3TM8-55
தென் இந்திய ஆபீஸ்: 5/149, பிராட்வே, சென்னை-1


பூரண வாய் சுத்தத்திற்கென தயாரிக்கப்பட்டது
• கிருமிகள் அகற்றப்பெற்ற நைலான் முடிகள்.
• அழகிய பிளாஸ்டிக் பிடியில் நன்கு இணைக்கப்பட்ட முடிகள்.
• உங்கள் பற்களுக்கான உருப்பெற்றது; சுலபமாக சுத்தம் செய்கிறது.
• மிருதுவான சுத்தி—பல்லின் எனுமலை பாதிக்காது.
• மெதுவான முறையில் ஈறுகளை பலப் படுத்துகிறது.
அதிக பலனுடன்!
பற்களைப் பூரணமாக சுத்தம் செய்கிறது. ஈறுகளை மிருது வாக தடவி விடுகிறது
மூன்று அளவுகள், பெரியவர்களுக்கு, சிறியவர்களுக்கு, குழந்தைக்கு
கால்கேட்
நைலான் டூத் பிரஷ்
மலிவு—நீடித்த உழைப்பு



பாலர் மலர்
உபாத்தியாயர் — அடே, பசங்களா இந்தப் பட்டாணியை உங்க கையாலேயே ஆளுக்கு ஒரு கை எடுத்துக் கொள்ளுங்கள்.
பையன்கள் — உங்க கையாலேயே கொடுங்க ஸார்!
சீனாவில் 2500 அடி நீளமுள்ள ஒரு சுவர் இருக்கிறது. இந்தச் சுவரை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் ஷி ஹுவாங் டி என்ற சீனாவின் சக்கரவர்த்தி கட்டினார். சுவரின் அகலம் 25 அடி உயரம் 30 அடி. சந்திரமண்டலத்துக்குப் போய் அங்கிருந்து தூர திருஷ்டிக் கண்ணாடி மூலம் பார்த்தால் இந்தச் சுவர் ஏதோ ஒரு கோடு போல தெரியுமாம்!
இரண்டு பென்ஸில்களை எடுத்துக் கொண்டு உங்கள் இரு கண்களையும் மூடிக் கொள்ளுங்கள். பிறகு பென்ஸிலின் இரு அடிப் பாகங்களையும் ஒன்றோடு ஒன்று பொருந்தும்படி சேர்த்துப் பாருங்கள். சுலபமாகத் தோன்றுகிறதல்லவா? ஆனால், அப்பாடி! இரண்டும் ஒன்று சேருவது ரொம்ப ரொம்பக் கஷ்டம்!
கொலுவுக்கு பொம்மையே இல்லையே!
செய்தால் போச்சு!
பொம்மைகள் எப்படி?

பாலர் தொடர் கதை

உளமை ராஜர்

துரோணன்

5. இது எந்த உலகம்?

வெகு நேரத்துக்குப் பின், விஜயனுக்கு ஏதோ ஒரு உணர்வு ஏற்பட்டது. அவன் கண் விழித்தபோது, தான் அரண்மனையிலிருப்பதாகவே எண்ணம் தோன்றியது. ஆனால், அந்த எண்ணமும் ஒரு நிமிஷம் தானிருந்தது. அதன் பின்னர், கால்களின் வலியும், கண்ணுக்குத் தெரிந்த காட்சிகளும், அவனுடைய அனுபவங்களை யெல்லாம் மனத்துக்கெதிரே கொண்டுவந்து நிறுத்திவிட்டன.

அவன், மெத்தையைப் போன்றிருந்த தழைகளின் மீது படுத்திருந்தான். அவனுக்கெதிரே ஒரு பயங்கரமான மனிதன் நின்று கொண்டிருந்தான். ஆஹா! எவ்வளவோ அழகான பிறவிகளையெல்லாம் படைப்பித்திருக்கும் கடவுளுக்கு இம்மாதிரி குரூரமான உருவங்களையும் படைப்பதற்கு எப்படித்தான் மனம் வந்ததோ?

அந்த மனிதனுடைய சப்பையான தலையும், பரட்டையான தலை மயிரும், பார்ப்பதற்கு ஏறக்குறைய அந்தக் கரடியைப் போலவே யிருந்தது! அவனது முகத்தில் தான் எவ்வளவு கோர லட்சணங்கள்! ஆந்தையைப் போன்ற கொடூர விழிகள், இரண்டு குகை வாயிலைப் போன்ற நாசி; கடைவாயின் ஓரங்களிலிருந்து வெளியே நீட்டிக் கொண்டிருந்த யானைத் தந்தங்கள்! அவனது கை கால்களின் அமைப்பில் தான் என்ன விசித்திரங்கள்! ஒவ்வொன்றும் பிரும்மாண்டமான அடிமரம் போன்றிருந்தன! அவனது இடுப்பைச் சுற்றிலும், கழுகின் சிறகுகளினால் பின்னப் பெற்றிருந்த உடையிருந்தது. அது மட்டுமா? அவனது கையிலிருந்த ஆயுதம்தான் எவ்வளவு விசித்திரமாகவும் பயங்கரமாகவும் இருந்தது! இரும்புத் தண்டாயுதம் போன்றிருந்த அந்த ஆயுதத்தில், கூர்மையான ஆணிகளும் பொருத்தப்பட்டிருந்தன.



விஜயனையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த அந்த அசுரன், விஜயன் சற்றே கண் விழித்தாலும், தன் அகலமான வாயைத் திறந்து ஏதோ கூச்சலிட்டான். ஆனால் அந்தச் சத்தத்தின் பயங்கரத்தைப் பற்றித் தான் விஜயனுக்குக் கவலையில்லையே! அசுரன் யாரையோ அழைக்கிறான் என்பதை மட்டிலும் அவன் உணர்ந்து கொண்டு, மீண்டும் கண்களை நன்றாக மூடிக் கொண்டான்.

அசுரனின் கூப்பாட்டைக் கேட்டு விட்டு, எங்கேயோ இருந்த இன்னும் பலரும் அங்கு வந்துவிட்டனர். விஜயன் தன் கண்களைத் திறந்து இலேசாகப் பார்த்தான். ஏறக்குறைய இருபது பேர்களுக்குக் குறைவில்லாத ஒரு கூட்டம் அவனைச் சூழ்ந்து நின்றது. அவர்கள் அனைவரும் உருவத்தில் ஒருவரைப் போன்றேயிருந்தனர். ஆனால், அவர்களில் ஒருவன் மட்டிலும் ஒரு நூதனமான கிரீடத்தைத் தலையில் அணிந்திருந்தான். அதில் வரிசை வரிசையான புலிப்பற்களும், நகங்களும் பதிக்கப் பெற்றிருந்தன. அவனுடைய கழுத்திலும், சடைசடையான ரோமத்தாலான மாலையிருந்தது. அவன்தான் அந்த அசுரக் கூட்டத்தாருக்கெல்லாம் அரசன் போலும்!

அந்த அசுர அரசன் குனிந்து விஜயனின் கால்களைத் தொட்டான். அச்சமயம் விஜயனுக்கு மூச்சே நின்று விடும் போலிருந்தது! நல்லவேளையாக, அந்த அசுரவேந்தன் தலைநிமிர்ந்து தன் சகாக்களிடம் ஏதோ கூறினான். அடுத்த கணம், அவ்விடத்தை விட்டு ஒவ்வொருவராக எங்கோ போய்க் கொண்டிருந்தனர். தன் சமீபமாக ஒருவரும் இல்லையென்பதை அறிந்ததும், விஜயன் மீண்டும் கண்களை நன்றாகத் திறந்து நாலாபுறங்களையும் பார்த்தான். அவனது உள்ளம் குழம்பிற்று.

அவனுடைய ஆசிரியர் அவனுக்குக் கொடுத்திருந்த சுவடிகளின் மூலம், பலப் பல உலகங்கள் உண்டென்றும், அவைகளில் பலப் பல தேவர்களெல்லாம் இருப்பார்களென்றும் படித்திருந்தான். ஆனால், இப்பயங்கர

மான மனித உருவங்களைக் கொண்டுள்ள இந்த உலகம் எது வென்று மட்டிலும் அவனுக்கு விளங்கவேயில்லை. கண்களை மீண்டும் இறுக மூடியவாறு, அவன் தன்னைத்தானே கேட்டுக் கொள்ள வேண்டியிருந்தது,—'இது எந்த உலகம்?—' என்று.

பாவம்! அவனது நெஞ்சில் இருக்கும் வினாவுக்கு யார்தான் சரியான விடை சொல்லக் கூடும்?

அந்த அசுரக் கூட்டத்தினரெல்லாம் எங்கேயோ போனார்களல்லவா? சற்று நேரத்துக்கெல்லாம் திரும்பி அவனிடமே வந்து சேர்ந்தார்கள். இப்போது அவர்களுடன் கூட அசுர ராணியும் வந்திருந்தாள்!

கூட்டத்திலிருந்த ஒருவன், எதையோ பேசியவண்ணம் விஜயனின் கால்களைப் பிடித்து உலுக்கினான். விஜயன் பயத்துடன் கண்களை விழித்து நாலாபுறங்களையும் பார்த்தான். எதிரே நின்றவன் ஏதோ ஒரு பாஷையினால் அவனை நோக்கிக் கட்டளையிடுவது போன்று கூறினான். அவனது வார்த்தைகள் இன்னதென்பதை விஜயன் அறிய முடியவில்லை. ஆனால், அவ்வசுரன் தன் கட்டளைகளை அபிநயங்களுடன் கூறியதால் விஜயன் புரிந்து கொள்ள முடிந்தது. அதாவது, அவன் எக்காரணத்தைக் கொண்டும் வாயைத் திறந்து பேசவே கூடாதென்பது!

பாவம்! இத்தகைய கட்டளையை இவ்வசுரன் எதற்காக இட வேண்டும்? அது கடவுளை இட்டிருந்த கட்டளைதானே!

விஜயன் எதையோ கூறுவதற்கு முயற்சி செய்தான்.. அடுத்த கணம், அசுரனின் கொடுமை நிறைந்த பார்வையைக் கண்டதும், தலையை வேறு பக்கமாகத் திருப்பிக் கொண்டான்.

சற்று நேரத்துக்கெல்லாம் வண்டியைப் போன்றிருந்த ஒரு கருவி அங்கே வந்து சேர்ந்தது. அதன் இரண்டு சக்கரங்களும் வட்டமாக இல்லாமல் கரடுமுரடாக இருந்தன. அவ்வண்டியின் முன்புறத்தைப் பிடித்து இரண்டு அசுரர்கள் கையினால் இழுத்துக் கொண்டு வந்திருந்தனர். அதில், உட்காருவதற்கென அழகான பீடமும் இருந்தது. அசுரர்களின் ஒருவன், விஜயனைக் குழந்தை போல் தூக்கி அந்த ஆசனத்தில் உட்கார வைத்தான். பின்னர், விஜயனை வாயே திறக்கக்கூடாதென மீண்டும் ஒரு முறை எச்சரிக்கையும் செய்தான்.

விஜயன் உட்கார்ந்திருந்த வண்டி புறப்பட்டது. அந்த வண்டியை அவ்வசுரக் கூட்டங்களெல்லாம் தொடர்ந்து வந்தன. கடவுளே! இது என்ன கொடுமை? அவர்கள் தன்னை எங்கே கொண்டு போகிறார்கள் என்பதை அவன் அறிய விரும்பினான்.

அநேகம் மேடுபள்ளங்களையெல்லாம் கடந்த பின், கூட்டம் போன்றிருந்த ஒரு கற்கோட்டையின் எதிரில் விஜயனின் ஊர்வலம் முடிவடைந்தது. அவனைக் கீழே இறங்குமாறு அவ்வசுர வேந்தன் ஆணையிட்டான். அவன் கீழே இறங்கியதும், அவன் கையை



பிடித்து அழைத்தவாறு அவர்கள் அக்கோட்டையினுள் சென்றனர். அங்கே ஒரு அழகான மேடையும், அதன் சமீபமாக ஏதேதோ பாண்டங்களும் இருந்தன. அவர்கள் அவனை மேடையின் மீது அமர்த்தினர். பின்னர், அவனது உடைகளை ஒரு அசுரன் கழற்றத் தொடங்கினான்.

விஜயனின் உடல் 'வெட வெட' வென்று நடுங்கிற்று. அவனது நெஞ்சினின்றும் துயர மூச்சுக்கள் வெளியாயின. கண்களோ நீரைச் சொரிந்தன. இதைக் கண்ணுற்ற அவ்வசுர வேந்தன் இலேசாகச் சிரித்தவாறு ஏதோ கூறினான். அவனது சொற்கள் விஜயனுக்குப் புரியவில்லை. ஆனால், தன் முதுகை அசுரவேந்தன் அன்புடன் தட்டிக் கொடுத்தபோது விஜயனுக்குச் சிறிது ஆறுதல் அளிப்பது போன்றிருந்தது.

உடைகள் களையப் பெற்றதும், ஒரு அசுரன் சமீபமாக இருந்த ஒரு கற்பாத்திரத்தைக்கையில் ஏந்தியபடியே ஏதோ இரைந்து கூவினான். அதைத் தொடர்ந்தவாறு அக்கூட்டம் முழுமையும் கூச்சலிட்டது. பின்னர், அசுரன் தன் கைப்பாத்திரத்திலிருந்த நீரை விஜயனின் தலையின் மீது ஊற்றினான். இச்செய்கையின் மூலம், விஜயனின் உடலுக்கு ஏதோவொரு புதுமையான உணர்ச்சி ஏற்பட்டது போலிருந்தது. ஏறக்குறையக் கால்மணி நேரம் வரையில் அவ்வசுரன் பக்கத்துக் கல்தொட்டியிலிருந்த நீரையெல்லாம் மொண்டு மொண்டு விஜயனுக்கு அபிஷேகம் செய்வித்தான்.

ஒருவாறாக, ராஜகுமாரனுக்கு அபிஷேகங்களெல்லாம் முடிந்து விட்டன. அவ்வசுரர்கள் அவனது உடைகளையே அவனிடம் கொடுத்து உடுத்திக் கொள்ளுமாறு கூறினர். பின்னர், அவனுக்குக் 'கிரீடம்' போன்ற ஒரு தலைப்பாகையும் அவர்கள் அணிவித்து விட்டனர். இந்த உபசரிப்புக்களின் பொருளையறியாத விஜயன், பரிதாபத்துடன் நாலாபுறங்களிலும் இருந்த கூட்டத்தினரையே திகைப்போடு பார்த்துக் கொண்டிருந்தான்.

அக்கூட்டத்தின் நடுவிலிருந்த அவ்வசுர ராணி அவனை நோக்கி வந்து கொண்டிருந்தாள். அப்பப்பா! அவளது முகத்தில்தான் எவ்வளவு பயங்கரமான மந்தகாசங்கள்! அவளது ஏந்தலான கரங்களில் ஏதோவொரு பொருள்—தாம்பாளம் போன்றிருந்தது. அதில் எத்தனையோ வகையான பழங்களும் கிழங்குகளும் இருந்தன. இன்னும், தனித் தனியான கோப்பைகளில் தேன் போன்ற பானங்களும் இருந்தன. ராணி அவைகளை விஜயனின் சமீபமாக வைத்து விட்டுச் சமிக்ஞையினால் எடுத்துக் கொள்ளுமாறு வேண்டினாள்.

ராஜகுமாரன் தலை குனிந்தவாறு உட்கார்ந்திருந்தான். ஆனால் ராணியோ, அவனது முகத்தைத் தன் கையால் நிமிர்த்திவிட்டு, ஒரு பழத்தையெடுத்து அவனிடம் நீட்டினாள். அதன் பின்னர் விஜயன் ஆலோசிக்கவேயில்லை! அவன் ஆபுவிலேயே இன்றறியாத கனிகளையும், கிழங்கு வகைகளையும் ஆவலுடன் புசித்தான். பின்னர், கோப்பைகளிலிருந்த பானங்களை நோக்கினான். அவற்றின் மணம், அவனது முகத்தைச் சுருங்கச் செய்தது. அவற்றை மட்டிலும் அவன் தொடவேயில்லை. அசுரக் கூட்டத்தினரெல்லாம் அவனையொரு வேடிக்கைக் கருவி போல் எண்ணிச் சுற்று முற்றும் பார்த்தபடி பேசிக் கொண்டனர். அவர்கள் குதூகல ஆரவாரம் செய்து கும்மாள மடித்தது விஜயனுக்கு வியப்பும் திகைப்பும் அளித்தது. அவர்களையே கண் கொட்டாது பார்த்துக் கொண்டிருந்தான்.

விருந்து முடிந்தது. ராஜகுமாரனின் முகத்தில் இப்பொழுது தனிமையான பிரகாசமும்கூட ஏற்பட்டது. அசுர வேந்தன், தன் பக்கத்திலிருந்தோரை நோக்கி ஏதோ கூறவும், மீண்டும் அங்கேயிருந்த வண்டியை இரண்டு பேர்கள் இழுத்து வந்தார்கள். வாத்தியங்கள் போன்றிருந்த பல வகையான கருவிகளையும் சிலர் கொண்டு வந்தனர். சில கருவிகள் தமுக்கு, உவச்சப்பறை போன்றிருந்தன. அவற்றில் சில கொம்பு, தாரை, எக்காளம் போன்ற ஊது கருவிகள்.

ராஜகுமாரனை மீண்டும் அவ்வண்டியில் ஏற்றி இழுக்கத் தொடங்கினார்கள். வாத்தியங்களை யெல்லாம் வாசிக்கத் தொடங்கினார்கள். ஊர்வலம் போல், அசுரக் கூட்டத்தினர் தொடர்ந்து வரவும் வண்டி புறப்பட்டது.

அநேகம் மேடுகளையும் பள்ளங்களையும் கடந்து ஊர்வலம் எங்கோ சென்று கொண்டிருந்தது. பின்னர் குகைபோல் இருந்த இருளான பக்கத்தையும் கடந்து சென்று ஒரு விசாலமான வெளியில் வந்து முடிந்தது.

ராஜகுமாரன் வியப்புடன் ஒரு திசையை நோக்கினான். அடுத்த கணம் அவனது மூச்சே நின்றுவிடும் போன்ற உணர்வு அவனுக்கு ஏற்பட்டது! அங்கே என்ன இருந்தது? (தொடரும்)



தளதளக்கும் ஈனோ வயிற்றுக் கோளாறுகளிலிருந்து எட்டே விநாடிகளில் நிவாரணமளிக்கிறது!

குடும்பத்தில் யாவருக்கும் ஏற்றது

(ஈனோ குழந்தைகளின் வயிற்றுக் கோளாறுகளைச் சுலபமாகப் போக்குகிறது. அதன் புத்துணர்ச்சியூட்டும் தளதளப்பை அவர்கள் மிகவும் விரும்புவார்கள்.)

அஜீர்ணம், நெஞ்செரிச்சல், அல்லது வாயுப் பொருமல் இவைகளில் எதையும் ஈனோ நிவர்த்திக்கிறது!

ஒரு வேளை தளதளக்கும் ஈனோ ப்ரூட் ஸால்ட் சாப்பிட்டால் எட்டே விநாடிகளில் வயிற்றுக் கோளாறுகள் சீராகின்றன. மிதமாக பேதி ஏற்பட விரும்பினால் வெறும் வயிற்றில் கொஞ்சம் பெரிய 'டோஸ்' ஈனோ உட்கொண்டால் போதும். எப்பொழுதும் உங்கள் வீட்டில் ஒரு பாட்டில் ஈனோ வைத்திருங்கள்.

ஈனோ 'ப்ரூட் ஸால்ட்'

அமித அமிலங்களை அடக்கும்
தளதளக்கும் பானம்


'ஈனோ' மற்றும் 'ப்ரூட் ஸால்ட்' என்ற வார்த்தைகள் ரிஜிஸ்தர் செய்யப்பட்ட டிரேட் மார்க்குகள்.

ENO. 3422 Tamil (A)

பற்களைப் பரிசுத்தமாக்கும்

மக்ளீன்ஸ்!

இம் மூன்று கோப்பைகளை பற்கள் என பாவனை செய்வீர்களானால் இவைகளின் வெளிப்புறம் மற்றும் உட்புறத்தைத் தவிர, ஊத்தை சேர்ந்து அபாயகரமான கிருமிகள் வசிக்கும் இடுக்குகளை சுத்தம் செய்வது மிகக் கடினம். பற்களைப் பாது காக்க விரும்புவோர், 'லேப்பாயிட்ஸ்' ஸினால் ஏற்படும் அபாயத்தை அறிய வேண்டியது அவசியம்.



மக்ளீன்ஸ் எளிதில் துலக்க முடியாத பற்களின் இடுக்குகளில் முண்டிப் புகுந்து துலக்குகிறது. எனவே

பற்சிதைவைத் தவிர்க்க சிறந்த சாதனமாக இருப்பது மக்ளீன்ஸ் ஒன்றே

பற்களின் மேல் படர்ந்திருக்கும் 'லேப்பாயிட்ஸ்' கலந்த பாசி பார்ப்பதற்கு அசிங்கமாயிருப்பதோடன்றி அபாயகரமான தூங்கூட என்று பல டாக்டர்கள் நிரூபிக்கின்றனர். 'லேப்பாயிட்ஸை' எளிதில் சுத்தம் செய்ய முடியாது. இவை தவறுமல் சுத்தம் செய்யப்பட வேண்டும். இல்லையேல் இவைகளின் உட்புறத்தில் தங்கும் திராவகச் சத்து பற்களை அரித்தே விடுகின்றது. இத்தகைய 'லேப்பாயிட்ஸை' அறவே அகற்ற ஒரே வழிதான் உண்டு. அதாவது இதை கரையச் செய்ய வேண்டும். 'லேப்பாயிட்ஸை' கரைக்கக் கூடிய விசேஷமான திரவம் மக்ளீன்ஸில் இருப்பதால், வாயில் நுரை கூட்டாமல் மக்ளீன்ஸ் 'லேப்பாயிட்ஸை' லகுவாக ஜாக்கிரதையுடன் துரிதமாக கரையச் செய்கின்றது. பற்களின் சிதைவைத் தவிர்க்க இது மிகவும் முக்கியம்.

மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசையை தினந்தோறும் இருமுறை உபயோகியுங்கள். பற்கள் வெண்மையாகவும், ஆரோக்கியத்துடனும் விளங்கும்.



க்ளோரோபில் சேர்ந்த வகையும் கிடைக்கும்

MTY-41 TAM

இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பு மூலம் 41-மீட்டர் பாண்டில் பிரதி திங்கட்கிழமைதோறும் இரவு 8-30 முதல் 9 மணி வரை ஒலிபரப்பப்படும். ''மக்ளீன்ஸ் [illegible]'' என்ற நிகழ்ச்சியை அவசியம் கேளுங்கள்



இருபத்தொன்றும் அத்தியாயம்

பாண்டியர் படையெடுப்பு

“நாட்டின் நலத்தைக் காப்பாற்றுங்கள்; துரோகியைப் பிடியுங்கள்!” என்று ஒரே ஆவேசத்தோடு சாருகேசி கதறிக்கொண்டு நின்றாளல்லவா? அதே நேரத்தில் உடம்பெல்லாம் பதறிக் கொண்டு ஓடிவந்த காவலாளர்கள் வலம்புரிப் பேரரசனிடம் மென்றும் விழுங்கியும் சொன்ன செய்தி அரண்மனை முழுவதையும் அப்படியே ஆட்டி விட்டது!

ஆமாம்: அந்தச் சமயத்தில் வலம்புரித் தீவின் மீது படையெடுப்பு வரும் என்று யாருமே எதிர் பார்க்கவில்லை. அதிலும் அப்படிப்பட்ட படையெடுப்பு பாண்டிய வேந்தனிடமிருந்து வரும் என்று வலம் புரியின் பேரரசன் எண்ணியே பார்த்ததில்லை.

திருமண உறவு முறிந்து போனதிலிருந்து பாண்டியர்கள் வலம்புரித் தீவிலே கடுமையான கோபம் கொண்டிருக்கிறார்கள் என்பது நன்றாகத் தெரிந்த விஷயந்தான்; என்றாலும் அந்தக் கோபம் இத்தனை தூரம் பெரும் சீற்றமாக வளர்ந்து படையெடுப்பு வரையில் கொண்டு போய்விடும் என்று வலம்புரி அரசன் எதிர் பார்க்கவில்லை. காரணம், படையெடுத்துவந்து இங்கிருந்து தமிழ்நாட்டுக்குக் கொண்டு போகக் கூடிய அத்தனை பெரிய செல்வங்கள் வலம்புரித் தீவில் யாதொன்றும் இல்லை! ‘வலம்புரித் தீவை வென்று விட்டோம்’ என்று பெருமைப் படக்கூடிய அளவுக்குப் படை பலமோ அல்லது அரசாட்சி மமதையோ வலம்புரியிலே இல்லை.

மந்திரநாயகம் சொன்னார்: “அரசர்பெருமானே! இந்தப் படையெடுப்பின் நோக்கம் என்னவென்று தெரியவில்லை. ஆனால் என்னையும் மீறி என் மனம் பதறுகிறது. பேரியாழ் இந்தத் தீவிலிருந்து மறைந்து விட்டது என்ற அந்தப் பெரிய அதிர்ச்சியிலிருந்து மீளுவதற்குள்ளே இப்பொழுது நமது தீவுக்கே இப்படி ஒரு கேடு வந்துவிட்டதே என்று எண்ணும்போது என் உடல் பதறுகிறது. நிதானம் தவறி இந்தவிதமாக நான் பேசுவதற்கு என்னை மன்னிக்க வேண்டும்!”

மந்திரநாயகத்தின் இந்தச் சொற்கள் சாருகேசியின் செவியிலும் விழுந்தன. அவள் மந்திரநாயகத்தை நோக்கி ஒரு பயங்கரமான சிரிப்புச் சிரித்தாள்.




அந்தச் சிரிப்பிலே "நீயும் ஒரு வீரனா?" என்று கேட்பதுபோல் ஓர் ஏளனம் சிதறியது. மறு வினாடி சாருகேசி ஆவேசத்தோடு பேசினாள்:

"அரசர் பெருமானே! உங்களுடைய நிலைமைக்கு நான் அநுதாபப்படுகிறேன். வலம்புரித் தீவின் அரசியலிலே வீரமும் படை பலமும் மங்க ஆரம்பித்துப் பல்லாண்டுகள் ஆகிவிட்டன. இந்த நிலைமையில் இந்தத் தீவை அழிவிலிருந்து காப்பாற்றக் கூடிய மகத்தான பொறுப்பை யார்தான் வகிக்கப் போகிறார்கள்? எனக்கு நம்பிக்கையில்லை. இந்தத் தீவின் ஜீவநாடியான பேரியாழ் மறைந்த வினாடியிலிருந்து இந்த நாட்டின் ஆயுளை இனி எப்படி நிர்ணயித்துச் சொல்லுவது! ஆனாலும் இந்தப் பாணன் மகளுடைய உள்ளத்தின் கோடியிலே ஒரு சிறு நம்பிக்கை இருக்கிறது!"—இவ்வாறு பித்துப் பிடித்தவளைப் போலச் சொல்லிக் கொண்டே அந்தப்புரத்துக்கு ஓடினாள் சாருகேசி.

"அம்மா, இளவரசி! இந்தநாட்டிலே ஆடவர்கள் எல்லாரும் பெண்டிர்களைப் போல வீரங் குலைந்து நடு நடுங்குகிறார்கள். இந்தத் தீவின் அரசருக்கோ முதுமைப் பருவத்தில் உடம்பெல்லாம் ஆடி விட்டது. இளவரசு என்று பட்டம் சூடுவதற்குச் சந்ததி இல்லை. இந்த நிலைமையில் இந்த வலம்புரித் தீவின் பொறுப்பெல்லாம் உங்களுடைய பொறுப்பாகத்தான் நிற்கிறது. ஆடவர்கள் பெண்டிர்களாக மாறிவிட்ட இந்த வினோத நாட்டிலே பெண்கள்தான் இனிமேல் ஆடவர்களாக நின்று வீரத்தை நிலைநாட்ட வேண்டும். இளவரசியே! தமிழ் மக்களுடைய வீரமெல்லாம் உங்களுடைய இதயத்திலே வீறு கொண்டு பெருகட்டும். வலம்புரி அம்மன் ஆதிபராசக்தியாக வந்து உங்களுடைய கரங்களிலே வாளை ஏந்தி நிற்கட்டும். துரோகியைப் பிடித்துப் பேரியாழை இந்தத் தீவிலே கொண்டு வந்து சேர்க்கும் பொறுப்பை நீங்கள்தான் ஏற்க வேண்டும். அதற்கு முன்பு எதிர்பாராத விதத்தில் இந்த நாட்டின் மேல் படையெடுத்து இதை அழிப்பதற்காக வந்திருக்கும் பாண்டிய சேனைகளுக்கு உங்களுடைய வீரவாள்தான் விடை சொல்லவேண்டும்!"

இவ்வாறு சீறி நின்றாள் சாருகேசி. தரங்கவல்லிக்கு என்ன பேசுவது என்றே ஓடவில்லை. உள்ளத்திலே வேகம் எழுந்தது. தன்னை மணப் பெண்ணாக வரித்து வந்த அரசகுமாரன் இப்போது தனது தாய்நாட்டின் பகைவனாகப் படையெடுத்து வந்திருக்கிறான்! தன்னைப் போன்ற ஒரு பெண்ணை மாலை




விட்ட மணவாளனே, அவனுக்கு வஞ்சகம் செய்ததோடு, இந்த நாட்டுக்கே கேடு சம்பவிக்கும் வண்ணம் புனிதமான பேரியாழையே தூக்கிக் கொண்டு ஓடி விட்டான்! இப்படி நினைத்துப் பார்த்த தரங்கவல்லியின் தலை சுழன்றது. ஆடவர் குலத்தினிடமே பெருஞ் சீற்றம், எல்லை மீறிய ஒரு பேராவேசம் உண்டாயிற்று தரங்கவல்லிக்கு!

''அம்மா! இளவரசி என்ற உனது நிலையைச் சற்று மறந்து விட்டு ஒரு பெண்ணாக நின்று என்னுடைய வார்த்தைகளைக் கேட்கிறாய். அந்த அனுதாபம் உன்னுடைய விழிகளிலே தெரிகிறது. அதற்கு அஞ்சலி செலுத்துகிறேன். எனக்கு வஞ்சகம் செய்து விட்ட ஓர் ஆடவனைத் தண்டிக்க வேண்டும் என்று நீ நினைப்பது சரி. உன்னுடைய பெண்மையின் உணர்வுக்கு நன்றி கூறுகிறேன். ஆனால் அது சாமானியம். அம்மா! இளவரசி! நீ—இல்லை—நீங்கள் இந்த வலம்புரித்தீவின் அரசபீடத்திலே அமர வேண்டிய மகாராணி. உங்களுடைய கடமையை நீங்கள் செய்ய வேண்டிய காலம் இப்பொழுதே வந்து விட்டது. பாண்டியர்களின் படையெடுப்பை எதிர்த்து நிற்க வேண்டிய ஆண்மை, பெண்ணாகிய உங்களுக்குத்தான் ஏற்பட வேண்டும். ஒன்றுமட்டும் சொல்கிறேன். இந்தப் பாணனுடைய மகளின் உடம்பிலே ஒரு சொட்டு உதிரம் நிற்கும்வரை தாய் நாட்டுக்குக் கேடு வருவதைத் தடுப்பேன். நீங்கள் மட்டும் உறுதி கூறுங்கள். எதிரிகளுடைய படையெடுப்பிலிருந்து நாட்டைக் காப்பாற்றுவதோடு, இந்தத் தீவின் ஜீவாதாரமான பேரியாழை மீண்டும் வலம்புரி அம்மனுடைய சந்நிதியிலே ஒலிக்கும்படி செய்வதாக என்னிடம் உறுதி கூறுங்கள். மறைந்து போன நீலமேக யாழ்ப்பாணரின் ஆவிக்கு அமைதி கொடுங்கள், தாயே!''

சாருகேசியின் உடம்பெல்லாம் ஆவேச வெறியினால் ஆடியது. அந்த ஆட்டத்தையே பார்த்துக் கொண்டு நின்றிருந்த தரங்கவல்லிக்கு, உடம்பில் மின்னல் பாய்வது போல் இருந்தது. அவள் முகத்திலே புயல் சுழன்றது. 'விறுவிறு' என்று அந்தப்புரத்திலிருந்து



ஜி.எஸ்.எப். கொள்ளேகாலம் பட்டுப் புடவைகளை உபயோகித்து அவைகளின் விசேஷ சிறப்பை உணருங்கள்



கவர்ன்மெண்ட் ஸில்க் பிலேச்சர் கொள்ளே காலம் பட்டு ஜவுளிகள் 'ஆட்வுட்'. மிஷினில் முறுக்கேற்றிய உயர்தர பிலேச்சர் பட்டு நூல்களை உபயோகித்துத் தயாரிக்கப்பட்டிருப்பதால் சோபைக்கும் உறுதிக்கும் ஈடு இணையற்று விளங்குகின்றன.

கவர்ன்மெண்ட் ஸில்க் பிலேச்சர்ஸ்

கொள்ளேகாலம்

சென்னை சர்க்கார் கைத்தொழில் & வியாபார இலாக்காவின் ஒரு பகுதி

பேரரசன் நின்ற இடத்துக்கு ஓடினாள். திருவோலக்கத்தை யடுத்த மந்திரச் சாலையிலே ஒரு பெரிய பீடத்தில் சாத்தப்பட்டிருந்த உடைவாளை ஆவேசத்தோடு எடுத்தாள். உறையிலிருந்து வாளை உருவினாள். அதைக் கையிலே தாங்கிய வண்ணம் சாருகேசிக்கு முன்பாக வீரத்தோடு நடந்து வந்தாள்.

''பாணர் மகளே! கேள்! இந்தக் கணத்திலிருந்து, பூமாலை பிடித்த என்னுடைய கரம் போர் வாளைப் பிடித்து நிற்கும். வலம்புரித் தீவுக்கு என்ன கேடு, எப்படி வருகிறது என்பதை இந்த வாள் இனி அறைகூவும். சாருகேசி!''

—தரங்கவல்லியின் வார்த்தைகள் சாருகேசியின் செவியிலே அமுதத்தை வார்த்தன. ''இளவரசியாரே! என் தாய் நாட்டைப் பெருங் கேட்டிலிருந்து மீட்டு விட்டீர்கள். இது உறுதி. இந்த அண்ட பிண்ட சராசரங்கள் அனைத்துமே எதிர்த்து நின்றாலும் கவலையில்லை. வீர பராக்கிரமம் நிரம்பிய ஒரு பெண் இந்தப் பூமியிலே அவதரித்தாள் என்ற பெருமையிலே வலம்புரித் தீவு நிரந்தரமாக வாழும்! இளவரசி! இந்தப் பாணன் மகள் இனி இங்கிருந்து செல்ல வேண்டியவள்தான். ஏனென்றால் உங்களுடைய சபதத்தை நீங்கள் நிறைவேற்றுவதற்கு, இந்தக் கோட்டைக்கு வெளியே உங்களுக்கு அந்தரங்கமான உதவி செய்ய ஒரு துணை அவசியம். வீர மறக்குலத்து வீராங்கனையே! எனக்கு விடை கொடுங்கள். மீண்டும் உங்களை நான் வந்து சந்திக்க வேண்டிய நேரமும், சந்திக்க வேண்டிய நிலைமையும் வேறு. அப்பொழுது இந்தச் சாருகேசி மறுபடியும் இங்கே வருவாள்!''

இப்படிச் சொல்லிவிட்டு அதே பழைய வெறியோடு வேகமாக ஓடினாள் சாருகேசி.

இதுவரை நடந்த விஷயங்களைப் பார்த்துக் கொண்டு குழம்பிப்போய் நின்ற அரசர், முதுமையின் தள்ளாமையிலே உடம்பெல்லாம் ஆடுகிற நிலையில் தமது அருமை மகளின் அருகே வந்தார்.

''இதெல்லாம் என்ன விநோதமான வார்த்தைகள் கண்ணே? பாண்டியர்கள் நமது தீவின்மீது படையெடுத்து வந்திருக்கிறார்கள் என்றால் அது சாமானியமான காரியமா! நம்முடைய படைபலமும் நமது ஆயுதங்களும் சூரியனுக்கு முன்னால் மின்மினிப் பூச்சி போலத்தான் அம்மா!''

தந்தை இப்படிப் பேசிக் கொண்டே மகளின் அருகே வந்தவர், தரங்கவல்லியின் முகத்திலே அனல் விடுகிற கோப நெருப்பைக் கண்டு விட்டுச் சற்றுத் தயங்கினார். அப்போது வேகமாக நடந்து வந்தார் வலம்புரித் தளபதி.

''கோட்டை வாசலை அடைத்து விடும்படி கட்டளை யிட்டுவிட்டேன், அரசே! படையெடுப்பை எதிர்க்கக் கூடிய பலம் நமக்கு இல்லை. மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று யோசித்து முடிவு செய்வதற்குள் இந்தக் கோட்டைக்குள்ளே எதிரிகள் நுழைந்து விட்டால், எல்லாம் ஒரே குழப்பமும் வேதனையுமாக முடிந்து விடும். எனவே அரண்மனைக் கோட்டை வாசல்களை அடைத்தாகி விட்டது. மந்திரச் சுற்றத்தார்கள் உடனே கூடிப்பேசி அவசரமான முடிவுக்கு வரவேண்டும் என்று விண்ணப்பித்துக் கொள்ளுகிறேன்!''



இவ்வாறு தளபதி சொன்னதும் பேரரசர் அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டார். தளபதியை நோக்கித் தரங்கவல்லி பேச ஆரம்பித்தாள்:—

''தளபதி! படையெடுப்பை எதிர்க்க வேண்டியது என்பது உறுதியான முடிவு. அதைப் பற்றிச் சந்தேகமில்லை. அதற்கு முன்னேற்பாடாகக் கோட்டை வாசலை அடைத்ததும் சரியே. ஆனால் கோட்டைக்குள்ளே பதுங்கி யிருந்து விடலாம் என்ற நினைப்பு பிசகானது. உடனே மந்திர மன்றத்தில் நமது பிரதானிகளைக் கூட்டி ஆலோசிக்க வேண்டியதுதான். நம்முடைய மந்திர நாயகத்துக்கு அதற்கு வேண்டிய துணிவு இல்லையென்றால் இதோ நானே வருகிறேன்.''

இவ்வாறு கர்ஜனை செய்தாள் அரசகுமாரி தரங்கவல்லி.

இருபத்திரண்டாம் அத்தியாயம்

அந்த ஓவியம்!

அரண்மனைக் கோட்டையை விட்டு வெளியே வந்த சாருகேசி, அரச வீதியிலே நின்று சுற்றுமுற்றும் பார்த்தாள். சற்று நேரத்துக்கு முன்பு அதே தெரு வீதிகளில் ஓடியபோது தன்னை வெறித்துப் பார்த்த அதே மக்கள், இப்பொழுது சின்னாபின்னமாகச் சிதறிய மனத்தோடு அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருந்தார்கள். தொலைவில் துறைமுகத்திலிருந்து கேட்டபோரொலி, கண நேரத்துக்குள் நாட்டு மக்களின் உள்ளத்திலே அத்தனை பெரிய குழப்பத்தை உண்டாக்கி விட்டது. 'பாண்டிய சேனை வலம்புரித் தீவின் மேல் படையெடுத்து வந்து விட்டது' என்ற செய்தி, வனத்திலே தீப் பரவுவது போல அத்தனை வேகத்தோடும் கடுமையோடும் வலம்புரித் தீவின் வீதிகளிலே பரவி விட்டது. கையிலே குழந்ஜதையைத் தாங்கியவாறு அரண்மனை வாயிலின் வெளியே தெரு வீதியிலே நின்ற சாருகேசி, அந்தப் பரிதாபக் காட்சியைப் பார்த்தாள். மக்களின் ஓட்ட சாட்டங்களை உன்னிப்பாகக் கவனித்தாள். ''அட, தமிழ்க் குலமே! வீர பரம்பரையிலே உதித்த மக்களே! உங்களுடைய வீரமும் பராக்கிரமமும் இந்தக் கருநீலக் கடலிலே மூங்கி முழுகிப் போய் விட்டனவா!'' என்று சொல்லிப் பரிகசிப்பதுபோல ஒரு நெருப்புச் சிரிப்புச் சிரித்தாள்.

கோட்டை வாசல் சாத்தப்பட்டது. பதுங்கி ஓடித் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள நினைத்த மக்கள் எல்லாம் இரகசிய வாசலிலே நுழைந்து கோட்டையினுள் புகுந்து கொண்டார்கள். உயிரை அடிமடியிலே கட்டிக் கொண்டு ஓடிய பெண்களும், குழந்தைகளும், வயோதிகர்களும் சாருகேசியைக் கண்டு திகைத்தார்கள். எல்லாரும் கோட்டை வாசலுக்குள்ளே புகுந்தோடிய போது, இவள் ஒருத்தி மட்டும் கோட்டை வாசலிலிருந்து வெளியே ஓடினால் அந்தக் காட்சி எல்லாருக்கும் வியப்பைத்தானே கொடுக்கும்!

சாருகேசி இதொன்றையும் பொருட்படுத்தவில்லை. ஓடினாள். கையிலேந்திய பெண் குழந்தையோடு, தெரு வீதிகளையெல்லாம் கடந்து ஓடினாள் சாருகேசி ''பாண்டியர்கள் வந்து விட்டார்கள். கடற்படையும், வீரர்கள் படையும், கடலே பொங்கி வருவதைப் போல் வருகிறது!'' என்று மக்கள் ஓடியவாறே பேசிக் கொண்டார்கள், அவள் இந்தப் பேச்சொன்றையும் காதிலே வாங்கிக் கொள்ளவில்லை. அவள் ஓடினாள். நிற்காமல், தயங்காமல், பின்புறம் திரும்பிப் பாராமல் ஓடினாள்!

வலம்புரி அம்மனுடைய பிராகாரத்துக்கு வந்து சேர்ந்தாள் சாருகேசி. அங்கே வலது சுற்றின் முகப்பில் ஒரு சிறிய பீடம் உண்டு. தனது தந்தை நீலமேக யாழ்ப்பாணர் யாழ் வாசிக்கச் சந்நிதியிலே சென்று அமர்வதற்கு முன்பு, அந்தப் பீடத்தின் அருகிலேயிருந்துதான் பேரியாழின் நரம்புகளை மீட்டிக் கொள்வார். அந்தப் பீடத்தின் எதிரே சங்கீத தேவதையின் உருவச் சிலை, யாழ் ஏந்திய கையோடு அபாரமான சிற்ப எழில் வாய்ந்ததாய் நிற்கிறது. அந்தச் சிலைக்கு எதிரே சென்று நின்றாள் சாருகேசி. தந்தையின் நினைவிலே ஒரு கணம் மனம் சென்று ஒருமித்தது. சிலைக்கு அப்பால் இருந்த சித்திரச் சுவரைப் பார்த்தாள். வலம்புரித் தீவுக்குச் செந்தமிழ் நாட்டிலிருந்து கலைஞர்கள் வந்து குடியேறிய போது முதன் முதலாகக் கோயிற் சுவரிலே வரைந்த ஓவியங்கள் அவை! எந்தச் செடியிலிருந்து என்ன இலைகளையும் பூக்களையும் எடுத்து, எப்படிக் குழைத்து, இந்த வர்ணத்திலே சாயக் குழம்பு செய்தார்கள்! எந்த இலைகளின் சாற்றைப் பிழிந்து இப்படிப்பட்ட அற்புதமான வர்ணக் குழம்புகளை வடித்தெடுத்தார்கள்! அந்த அதிசயத்தைக் கூர்ந்து பார்த்த சாருகேசிக்குக் கண்கலங்கியது!

அதோ அந்த ஓவியங்களுக்கு மத்தியிலே 'மணி பல்லவம்' என்ற ஓவியம். அதற்கு அருகிலே 'இளந்திரையன்' என்ற ஓவியம். இந்த இரண்டுக்கும் அருகிலே 'கடல் தந்த காவலன்' என்ற ஓவியம்! அந்த ஓவியம், கம்பீரமான கோலத்திலே காட்சி தந்தது. இதோ அதற்கு அருகில் இன்னொரு வர்ணக் காட்சி. அந்தக் காட்சிதான் சாருகேசியை இதற்கு முன் எத்தனையோ முறை கவர்ந்துள்ள ஓவியம்! அந்த ஓவியத்தைக் குறித்துத்தான் சாருகேசியின் தந்தையும் வலம்புரித் தீவின் மந்திரநாயகமும் பலமுறை தர்க்கம் செய்திருக்கிறார்கள்! இப்பொழுது சாருகேசி அந்த ஓவியத்தின் முன்பாகச் சென்று நின்றுகொண்டாள்.

திரைகள் ஒலமிடுகிற நீல மயமான கடலின் பரப்பிலே படகொன்று தவழ்ந்து செல்லப் போகிறது. அந்தப் படகினுள், பால் மணம் மாறுத பச்சிளங் குழந்தையை வலம்புரிச்

பாதத்திலுள்ள புண்கள் நான்கு நாட்களிலேயே தகருகின்றன

குத்து வலியும் நமைச்சலும் 7 நிமிஷங்களில் நிறுத்தப்படுகிறது



வெறுப்பு தரும்படி பாதங்களில் அரிப்பு ஏற்படுகிறதா. பாதங்களில் ஏற்படும் வெடிப்புகளினல் தோல் உரிகிறதா. பாதங்களிலும், கால் விரல்களுக்கு இடையிலும் கொப்பளங்கள் உண்டாகி, அவைகள் உடைவதினல் வரும் அசுத்த நீரினல் புதிய கொப்பளங்கள் உண்டாகின்றனவா. பாதங்களின் புண்களிலிருந்து ரத்தக் கசிவு ஏற்படுகிறதா. இந்த உபாதைகளுக்கு மூலகாரணம் சருமத்திலுள்ள வியாதிக் கிருமிகளே. அவைகளை அடியோடு அழிக்காவிடில் உபாதைகளினின்று விடுதலையடைய முடியாது.

சாதாரண களிம்புகளும், தைலங்களும் அதிக பலனை அளிப்பதில்லை. ஏனெனில் அவை உபாதைக்கு மூல காரணத்தை அழிப்பதில்லை. அதிர்ஷ்ட வசமாக இந்த உபாதைகளிலிருந்து விடுதலையடைய, ஒரு பிரபல ஆங்கில சரும வைத்திய நிபுணரால் கண்டுபிடிக்கப்பட்ட நிக்ஸோடெர்ம் (Nixoderm) உள்ளது. இது மூன்று நிச்சயமான வழிகளில் குணமளிக்கிறது. (1) பாதங்களில் உபாதைக்குக் காரணமான கிருமிகளை அழிக்கிறது. (2) ஏழுநிமிஷத்தில் நமைச்சலைத் தடுத்து, சருமத்துக்குக் குளுமை தருகிறது. (3) சருமத்தைச் சுத்தமாக்கி, பட்டுப்போல் வழவழப்பாகச் செய்கிறது.

பரிசீலனைக்கு உத்தரவாதம்

மருந்து வியாபாரியிடமிருந்து நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்கி இன்று இரவு உபயோகித்து, அதன் அற்புத குணங்களை மறு நாள் காலை கவனியுங்கள். நான்கு தினங்களிலேயே உபாதைகளுக்குக் காரணமான வியாதிக் கிருமிகளை அழித்துச் சருமத்தைச் சுத்தமாகவும் ஆரோக்கியமுள்ளதாகவும் செய்கிறது. சரும உபாதைகளிலிருந்து பூரண பலனை அடைந்து திருப்தி பெற, தொடர்ந்து மூன்று நாட்கள் மருந்தை உபயோகிக்கவும். அந்த ஒரு வார முடிவில் உங்களுக்கு முழு திருப்தி ஏற்படாவிடில் அதன் காலி பாக்கெட்டைத் திருப்பி அனுப்பினல் அதன் விலை வாபஸ் செய்யப்படும். அதற்கு அளிக்கப்படும் உத்தரவாதமே உங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறது.


An inspiration!
MAX FACTOR
HOLLYWOOD
Color-fast
LIPSTICK
Seven Exciting New Shades
Max Factor's New Color-Fast Lipstick comes in these seven fascinating new fashion-right shades.
Magic Pink
a lovely rose-pink
Cheery Cherry
pure deep-red
Golden Flame
brilliant orange red
Wild Orchid
light fuchsia
Coral Spray
a delicate pink-coral
Brighter Red
sparkling medium red
Riding Hood Red—a ripe young red.
Yes, an inspiration to longer-lasting lip beauty
Max Factor's Color-Fast is the non-smear lipstick with the thrillingly lustrous sheen that goes on so easily, yet won't come off until you take it off. Because it's rich in Lanolin, it's a real beauty treatment for the lips—helps keep them soft, smooth, ever youthful. Color-fast's fine even texture and pure rich colors are the delight of every woman, as they are for Hollywood's lovely screen stars.
SOLE AGENTS IN INDIA: ORIENT COSMETICS PRIVATE LTD., MADRAS, BOMBAY, CALCUTTA.

சங்கோடு சேர்த்து வைத்துக் கடலிலே மிதக்க விட்டு விடுகிறாள் அவள்!

அந்தக் குழந்தை யாரென்றும், அந்தப் பெண்மணி யாரென்றும் நீலமேக யாழ்ப்பாணரும் வலம்புரித் தீவின் மந்திர நாயகமும் பலமாகத் தர்க்கிப்பதுண்டு. 'அது அந்தக் குழந்தையின் அன்னைதான்' என்பார் நீலமேக யாழ்ப்பாணர். உடனே அதற்குரிய காரணங்களைச் சொல்லுவார். மந்திரநாயகம். வேறு பல கதைகளைச் சொல்லி மறுப்பார். தர்க்கம் பலமாகி விடும். அப்பொழுதெல்லாம் சாருகேசிதான் விவாதத்தின் மத்தியிலே புகுந்து, தர்க்கத்திலிருந்து தந்தையை மீட்டுக் கொண்டு வருவாள்.

சாருகேசி இப்பொழுது அதே சித்திரத்தைப் பார்த்தாள்.

''பால் மணம் மாறாத குழந்தையைக் கடலிலே படகில் வைத்து மிதக்க விட்டு விடுகிறாள் அந்தக் குழந்தையின் அன்னை! ஏன்? வெறுப்பினாலா? வஞ்சகத்தினாலா? அந்தக் குழந்தையிடம் ஏற்பட்டுவிட்ட பகைமையினாலா? இல்லை! அன்பினால்! எல்லையற்ற பாசத்தினால்! அந்தக் கடலைப்போலக் கரைகாணாத வாஞ்சையினால் அப்படிச் செய்கிறாள் அவள்!''

இப்படிப் பேசுவார்கள் பாணரும் மந்திர நாயகமும்! இந்த வார்த்தைகள் சாருகேசிக்கு அந்தக் காலத்தில் வேடிக்கையாக இருக்கும்! இப்பொழுது அதே சாருகேசி அதே ஓவியத்தைப் பார்த்த போது, அவளுடைய உள்ளத்தில் அதே பழைய தர்க்கப் பேச்சு நினைவுக்கு வந்தது. ஆனால் இப்பொழுது அவள் வேடிக்கையென்று அந்த வார்த்தைகளைச் சிரித்துத் தள்ளிவிட வில்லை.

''குழந்தையின் அன்னை கடலிலே தான் பெற்ற குழந்தையை ஏன் அநாதையாகச் செல்ல விட்டாள்? வாஞ்சையினால்! அளவற்ற அன்பினால்! ஆம்; அன்பின் சக்தி அது! இன்னொருத்தி பெற்ற குழந்தையானால் வேறு விதமாகச் சொல்லலாம். இது அவளே பெற்றெடுத்த குழந்தை. அவளே பாலூட்டித் தாலாட்டிச் சீராட்டிய குழந்தை!'' — இந்த வார்த்தைகளை மனத்திலே ஓடவிட்டாள் சாருகேசி.

''கண்ணற்ற தீவிலே யிருந்து, கண்ணற்ற கடலிலே கொண்டு போய்ப் படகிலே வைத்துத் தள்ளி விடவேண்டும் என்றால், அந்தக் கண்ணுள்ள தாயினால் எப்படி முடிந்தது!'' என்று அந்தக் காலத்தில் பாணரும் மந்திர நாயகமும் அவநம்பிக்கையோடு தர்க்கிப்பதுண்டு. சாருகேசி இப்பொழுது அந்த வார்த்தைகளைக் குறித்து அவநம்பிக்கை கொள்ளவில்லை. 'ஒரு தாயின் உள்ளத்திலே உள்ள பாசத்தின் தன்மைகளையெல்லாம் முடிவு கண்டு சொன்னவர்கள் யார்? இதயத்தின் அந்தரங்கத்திலே உள்ள ஒரு தாயின் கனவுகளையெல்லாம் யார் கண்டார்கள்? பிறர் கண்ட கனவுகளையெல்லாம், தமிழ் நாட்டைச் சுற்றி நிற்கும் அந்த ஆழமான பரந்த கடல்தான் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தது. வெளி உலகம் காணாத கனவுகளையெல்லாம் தன் உள்ளத்திலே வைத்துப் பொருமிப் பொங்கியது அந்த நீலக் கடல்! நூற்றுக் கணக்கான ஆண்டுகளாகப் பொருமிப் பொங்கி அலை வீசிக் கொண்டிருந்தது. அந்தக் கடல்!'—இவ்வாறு எண்ணியதும் சாருகேசியின் உள்ளமும் பொருமிப் பொங்கியது. ''ஆம்; இத்தனையும் அந்தக் கருநீலக் கடலுக்குத் தெரியும். அன்றொரு நாள் கடலுக்குள்ளே ஒரு படகில் தனது குழந்தையைத் தன்னந் தனியாக வைத்து மிதக்க விட்டாளே அந்தத் தாயினுடைய உள்ளத்தைக் கருங்கடல்தான் அறியும்! வேறு யாருக்குத் தெரியும்? ஏன்? தனக்கும் தெரியும்'' — இப்படி ஒரு எண்ணம் சாருகேசியின் உள்ளத்தில் புதிதாக உண்டாயிற்று!

''ஆம்; ஒரு தாயின் உள்ளத்தை இன்னொரு தாய்தான் அறிவாள்'' — இப்படித் தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டாள் சாருகேசி. குழந்தையைப் பீடத்திலே வைத்துவிட்டு, இரண்டு கைகளையும் கூப்பினாள். ஓவியத்திலே தோன்றிய அந்த அன்னையின் சித்திரத்துக்கு வணக்கம் செலுத்தினாள்.

''அம்மா! தாயே! நீ யார் என்று எனக்குத் தெரியாது. நீதான் பீலிவளை என்ற அரச குமாரியென்றும், உனது தந்தைதான் **வளைவணன்** என்ற சக்கரவர்த்தி என்றும், உன்னை மாலையிட்டு மயங்க வைத்தவன்தான் **நெடுமுடிக்கிள்ளி** என்ற சோழன் என்றும், தர்க்கம் செய்யக் கேட்டிருக்கிறேன். நீ கடலிலே மிதக்கவிட்ட செல்வக் குமரன்தான் **இளந்திரையன்** என்றும், உன்னுடைய வம்ச பரம்பரைதான் பல்லவ சாம்ராஜ்யம் என்றும் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனால் நீ உன் செல்வக் குமரனைக் கடலிலே ஏன் தன்னந் தனியாக அனுப்பினாய் என்பதைப் பற்றி என் தந்தையும் மந்திரியும் ஏதேதோ முரண்பட்ட கதைகளைச் சொல்லித் தர்க்கம் செய்திருக்கிறார்கள். எந்தக் கதை எப்படி யிருந்தாலும் ஒன்று மட்டும் உண்மை. நீ உன் குழந்தையைக் கடலிலே மிதக்க விட்டதற்குக் காரணம் உன்னுடைய தாயன்புதான், தாயே! அம்மா! அன்னையே! உன்

னுடைய உள்ளத்தை இந்தக் கடல் அறியும். கடல் அறிந்தாலும் அறியா விட்டாலும் நான் இப்பொழுது அறி கிறேன்! அரச குடும்பத்தின் குல விளக்கே! அரச போகத்திலே மிதந்து தவழ்ந்த பேரரசியே! நான் ஒரு பாணன் மகள்! ஏழைப் பாணனின் ஏழை மகள்! என்றாலும் என் உள்ள மும் ஒரு தாயின் உள்ளம்! ஒரு சிறிய ஏழைத் தாயின் உள்ளம்! உன் உள்ளம் எனக்குப் புரிகிறது, தாயே!''

வெறி கொண்டவளைப் போல இவ் வாறு வேகமாக வார்த்தைகளை உதிர்த் தாள் சாருகேசி. அடுத்த கணம் பீடத் திலே வைத்த குழந்தையை எடுத்துக் கையிலே தாங்கியவாறு, முந்தானையி னால் மூடி, உடம்போடு சேர்த்து அணைத்து, அவள் அங்கிருந்து அதே வேகத்தோடு நடந்து சென்றாள்.

வலம்புரித் தீவிலே பாண்டிய சேனை இறங்கி விட்டது. சேனையின் தலைமைப் பொறுப்பைத் தாங்கி வந்திருக்கும் பாண்டிய அரச குமாரனின் கட்டளை என்னவோ தெரியவில்லை. படை வீரர்கள் எல்லாம் அந்தத் தீவிலே நின்ற பெரிய பெரிய மாளிகைகள், மாடங் கள், சிற்பச் சாலைகள், அழகிய விடுதி கள், தொழிற்கூடங்கள், — எல்லாவற் றையும் கோபமும் ஆவேசமும் வெறியும் மேலிட்டு அழித்துக் கொண்டே சென் றார்கள். ஒரு வருஷத்துக்கு முன்பு தங்களுடைய அரசன் செய்த சபதத் தின் வெப்பம், அத்தனையும் சேர்ந்து வலம்புரித் தீவின் அமைதியையும் அழ கையும் அழித்துத் தரை மட்டமாகச் செய்ய ஆரம்பித்தன!

படைகள் நெருங்குவதற்கு முன்னால், புயற்காற்றின் வேகத்திலே பாணரின் இல்லத்துக்கு வந்து விட்டாள் சாரு கேசி. தந்தையில்லாத அந்த வீடு ஒரே சூனியமாக இருந்தது. கைவிட்டோடிய கணவனின் நினைவைவிடப் பேரியாழின் மறைவு அந்தச் சூனியத்தைப் பூதா காரமாக மிகைப்படுத்திக் காட்டிற்று! நீலமேக யாழ்ப்பாணர் வழக்கமாகச் சாய்ந்திருக்கும் அந்தத் திண்டிற்கு அருகிலே வந்து, குழந்தையை வைத்து விட்டு ஒருவிம்மல் விம்மினாள் சாருகேசி.

சாருகேசியின் தலை சுழன்றது. அவளு டைய மனத்தின் சிந்தனைக் கண்ணுக்கு முன்னால் ஏதேதோ காட்சிகள் தெரிந் தன. தேவ கோபம் அந்தத் தீவிலே ஆவேசத்தோடு பரவத் தொடங்கியது போல, சாருகேசியின் மனக் கண்ணுக்கு முன்னால் பல காட்சிகள். மேகத்தி லிருந்து வெப்பமான தாரைகள் விழு கின்றன. மரங்களின் பட்டைகள் வெடிக்கின்றன. கோயிற் கொடி மரத் திலிருந்து இரத்தம் பாய்வது போல ஒரு மனப் பிரமை. சாருகேசி கண்களை இறுக மூடிக் கொண்டாள். ஒரே நிசி இருட்டாகத் தெரிகிறது. கன்னங் கரிய அமாவாசை இருள். அந்த இருளான இரவிலே பூத கணங்கள் கூத்தாடுகின் றன! அப்பப்பா! அவற்றின் காற் சிலம்பிலிருந்து இடியோசை கேட் கிறது! மறுகணம் தேவ கன்னிகைகள் அந்தத் தீவை விட்டு நடந்து போவது போல மெட்டிகள் ஒலிக்கின்றன! வலம்புரித் தீவின் அரசன் நடு நடுங் குவது போலவும், யாரோ கோட்டை யின் கதவுகளை நன்றாகப் பூட்டி முத்திரையிட்டு விட்டது போலவும் தோற்றங்கள்! கடலின் பரப்பில் பெரிய பெரிய மரக்கலங்கள் தெரிகின்றன. அருகிலே சிறு சிறு படகுகள் தெரிகின் றன. அழிவிலிருந்து தப்பிக்கும் பொருட்டு இதோ வலம்புரித் தீவின் மக்கள், மரக்கலங்களிலும், படகுகளி லும், மிதவைகளிலும் ஏறிக் குதித்து ஓடுகிறார்கள். கிழவர்கள், கன்னியர்கள் —ஏன் வீரர்களுங்கூட உயிருக்குத் தப்பி ஓடுகிறார்கள்!

"என்ன பயங்கரமான காட்சி!'' என்று சொல்லிக் கொண்டே இமை களைக் கசக்கி விட்டுக் கொண்டு எழுந் தாள் சாருகேசி. எழுந்தவள் அந்த வீட் டிலே ஒரு கணம்கூடத் தாமதிக்கவில்லை. இத்தனை ஓட்ட சாட்டங்களுக்கு மத்தி யில், உடற் பதற்றமோ, பசியின் கொடுமையோ, அல்லது முகத்திலே தவழ்கிற ஞானமின்னலின் போதமோ, அந்தப் பெண் குழந்தை இப்பொழுது வீறிட்டு அழ ஆரம்பித்தது.

''வலம்புரித் தீவு சமர்பூமியாக மாறி விட்டது. உனக்கு இந்தச் சமர்பூமி இனி வேண்டாமடி கண்ணே!'' என்று பரி வோடு அந்தக் குழந்தையிடம் சொல் லிக் கொண்டே, முந்தானையினால் குழந் தையைப் பாதுகாத்தவாறு நடந்தாள் பாணரின் மகள் சாருகேசி! தாயின் அரவணைப்பிலே சுகங் கண்ட அந்தக் குழந்தை, அழுகையை நிறுத்தியது! எத்தனை குழப்பங்கள், எத்தனை விப ரீதங்கள் வெளியுலகிலே நடந்தாலும் அன்னையின் முந்தானைக் காவலுக் குள்ளே தவழ்ந்த அப் பெண் குழந்தை புன்முறுவல் செய்தது—நீலமேக யாழ்ப் பாணரின் மின்னல் முறுவல் அது!

இரண்டாம் பாகம் முற்றிற்று

திருட இயலாத குடும்ப சைஸ் பாக்கில்

'அனஸின்'

வாங்குங்கள்

'அனஸின்' 32 வில்லைகள் கொண்ட டப்பா ஒவ்வொரு முறையும் நீங்கள் வாங்கும்பொழுது 4 அணாக்கள் மிச்சமாகின்றன. அனஸினை எப்பொழுதும் கையோடு வைத்துக்கொள்ளும் குடும்பங்களுக்காகவே இந்த டப்பாவை பிரத்தியேகமான முறையில் அமைத்திருக்கிறோம். அனஸினை அவர்கள் சதா வைத்திருப்பதற்கு காரணம் அதில் வலி நிவாரணத்தை விரைவில் அளிக்கும் 4 மருந்துகள் அடங்கியிருப்பதே:



1. கொயினா: ஜுரத்தடுப்பு குணமும், பலவிருத்தி செய்வதற்கும் பிரசித்தி பெற்றது. ஜுரத்தை குறைப்பதில் மிகத் துரிதமானது.
2. காப்பின்: பலஹீனத்திற்கும், மனச்சோர்வுக்கும் மிதமான தூண்டுகோல் மருந்தாக விதிக்கப்பட்டிருக்கிறது.
3. பினாஸிடின்: ஜுரத்தடுப்பு, வலி நிவாரணத் தன்மைகளுக்கு பெயர் பெற்றது.
4. ஆஸிடில் ஸலிஸிலிக் ஆஸிட்: தலைவலி அது போன்ற எல்லா வலிகளையும் போக்கடிப்பதற்கு மிகவும் உபயோகமுள்ளது.


அனஸினில் அடங்கியிருக்கும் இந்த நான்கு மருந்துகள் நரம்புகளின் முக்கிய சேர்க்கை பாகங்களில் கூட்டாக வேலை செய்து, பத்திரமாகவும், நிச்சயமாய், விரைவில் நிவாரணமும், தலைவலி, ஜுரம், ஜலதோஷம், பல்வலி மற்றும் தசை நார்களில் நோவு முதலியவற்றை போக்குகின்றது.

'அனஸின்' 2 வில்லைகள் கொண்ட பாக்கெட்டுகளிலும் கிடைக்கும்.

எப்பொழுதும் **அனஸின்** வில்லைகள் வேண்டுமென்றே கேளுங்கள்

A. 43

மட்டரக ப்ளேடுகளில் பணத்தை வீணாக்காதீர்கள்




ஒரு முறை முகக்ஷவரம்
செய்தபின்னர் காணப்
படும் மட்டரக ப்ளேடின்
உடைபட்ட நுனி



பல முறை முகக்ஷவரம்
செய்துகொண்ட பின்
காணப்படும் ஸெவன்
ஓ'க்ளாக் ப்ளேடின் நுனி

பலர் மட்டரக ப்ளேடுகளை வாங்கி பணத்தை மிச்சப்படுத்தப்பார்க்கின்றனர். ஆனால் இப்ளேடுகள் ஒன்று அல்லது இரண்டு முறை முகக்ஷவரம் செய்தபின் கூர்மை இழந்து பிரயோஜனமில்லாமல் எறிந்து விட வேண்டியனவாக காணப்படும். புத்திசாலிகள் கொஞ்சம் அதிகப் பணம் செலவு செய்ய பால் மாறாமல் ஸெவன் ஓ'க்ளாக் ப்ளேடுகளையே வாங்குகிறார்கள். நாளடைவில் அவர்களுக்கு பணமும் மிச்சமாகிறது. எப்படியெனில் ஒவ்வொரு ஸெவன் ஓ'க்ளாக் ப்ளேடும் பலமுறை முகக்ஷவரம் செய்து கொள்ள அவ்வளவு கூர்மையாக இருக்கிறது.

7 o'clock



BLADES

ஸெவன் ஓ'க்ளாக்
ப்ளேடுகள்



வெண்ணிமாலை

சங்கர்

காவிரிப் பூம்பட்டினத்தின் கடற் கரையிலிருந்த அந்தச் சிற்பசாலையிலிருந்து யாரோ ஒரு இளைஞன் வேகமாக ஓடி வருகிறான்.

நேரமோ அகாலம். நிசிப் பொழுதின் தனிமை. பனியிலும் பால் நிலவின் ஒளி வெள்ளத்திலுமாக நனைந்து, நனைந்து உலகின் உயிர்ப்பு அடங்குகிற வேளை. அந்நேரத்தில் அந்த இளைஞனுக்கு மட்டும் அப்படி என்ன வந்தது?

"சுவாமி! மன்னிக்க வேண்டும். ஓடுவது கௌதமன்தானே?" என்ற குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினார் மயநாத ஸ்தபதியார். அந்தப் பிரசித்தி பெற்ற சிற்பக்கூடத்தின் குருதேவர் அவர்.

எதிரே சியவனன்—அவருடைய சீடப் பிள்ளைகளில் ஒருவன்—நின்று கொண்டு புன்னகை புரிந்தான்! புன்னகையா அது? ஆயிரமாயிரம் ஒளி ஈட்டிகளைக் கொண்டு அவர் இதயத்திலே பாய்ச்சுவது போலல்லவா இருந்தது அந்த மாயப் புன்னகை!

அவன் இந்தச் சிற்பசாலைக்கு வந்ததே ஒரு அதிசயமான நிகழ்ச்சி. புத்த தேவனின் அருள் வழியிலே நின்று உலகம் உய்யப் பாடுபடும் பௌத்த சங்கத்திலே தன்னை அர்ப்பணித்துக் கொள்ள அவன் விரும்பினான். அந்த ஆசைதான் அவனைச் சாவக நாட்டிலிருந்து காவிரிப் பூம்பட்டினத்துக்கு அழைத்துக் கொண்டு வந்தது. வந்ததும் வராததுமாக, அவனையே நெடுநாட்கள் எதிர்பார்த்துக் காத்திருந்தவரைப் போல எதிர்கொண்டு அழைத்தார் மயநாத ஸ்தபதியார்.

சாவகநாட்டின் மோகனக் கலை படர்ந்த வசீகரமான முகம்; அதோடு இந்த இளம் வயதிலேயே பௌத்த சங்கத்தை நாடி வந்த அவனது உள்ளம்!—எல்லாவற்றையும் விடத் தானும் சிற்பத் தொழிலில் வல்லவன் என்று சொன்னதும் ஸ்தபதியாருடைய உள்ளம் எல்லையற்ற மகிழ்ச்சியை அடைந்தது.

அன்று மாலை வரையில் தம்முடைய சிற்பக் கூடத்தை யெல்லாம் சுற்றிக் காண்பித்து விட்டுத் தனியான ஒரு மாளிகைக்குள் அழைத்துக் கொண்டு வந்தார் ஸ்தபதியார். அங்கே கிடந்த பெரிய பளிங்குக் கல் பாளத்தைப் பார்த்து விட்டு மலைத்துப் போய் நின்றான் கௌதமன்.

"தம்பி! நீ மிகவும் பாக்கியசாலி! உன்னுடைய புனித கரங்களால் எனக்கு ஒரு

காரியம் ஆக வேண்டிய திருக்கிறது. எனக்கென்றால் எனக்கல்ல; இந்த உலகத்துக்கு. உன்னைப் போன்ற எண்ணற்ற இளைஞர்களைத் தவநெறிப்படுத்துவதற்கு.

''இதோ இந்தப் பளிங்குக் கல்லைப் பார்த்தாயல்லவா? இதற்குள்ளே மோனத் தவத்தில் ஆழ்ந்திருக்கும் போதிஸத்துவரை உலகத்துக்குக் காட்ட வேண்டியது உன் பொறுப்பு. வருகின்ற பௌர்ணமி தினத்திலிருந்து இந்தப் புண்ணிய திருப்பணியை ஆரம்பித்து விடலாம் என்று எண்ணுகிறேன். உனக்குச் சம்மதம்தானே....''

கௌதமன் அவருடைய ஆவேச மொழிகளிலே வயப்பட்டு நின்றான்.

பட்டினமெங்கும் பரவியது. ஆடல், பாடல், அழகு— இம் மூன்றும் ஒரே உயிர்க் கூட்டில் புகுந்து வந்து அவதரித்தமாதிரி அந் நகருக்கே அணியாக விளங்கிய ஆடலரங்கை, தேவ மாலை என்னும் கணிகையர் தலைவி தவச் சாலையாக மாற்றிவிட்டாளாம்! ஊரே ஒருமித்து நின்று ஆச்சர்யமும் கலக்கமும் அடைவதற்குத் தேவமாலையின் துறவுக் கோலம் மட்டும் காரணமில்லை. வாழ்வின் வஸந்த ருதுவாகிய இளமைப் பருவத்தை யெல்லாம் தாண்டி இப்போது இலையுதிர் காலத்தின் எல்லையிலே நிற்பவள் அவள். அவளுக்குத் 'துறவு' ஒரு ஆத்மீகத் தேவை. அவசியமானதும்கூட! ஆகவே அவளைப் பற்றி யாரும் கவலைப் பட்டிருக்க முடியாது!

ஆனால் அந்த ஆடல் அரங்கத்திலே கலை பயின்று வந்த பொன்மான்கள் என்ன ஆனார்கள்? வரப் போகிற இந்திர விழாவிலே இருபத்தெட்டு நாட்களிலும் காவிரிப்பூம் பட்டினத்தின் கடற்கரையைக் கந்தர்வலோகமாக்க வேண்டியவர்கள் அவர்கள்! அப்பேர்ப்பட்டவர்களையும் தவநெறிப்படுத்த முற்



ஆனால் இன்றோ....?

அந்தக் கட்டிலிருந்து — பந்தத்திலிருந்து விடுபட்டுக் கொண்டல்லவா ஓடுகிறான்? இப்படி நிசி நேரத்தில் யாருக்கும் தெரியாமல் ஓடிப் போய் விட்டு, ஒன்றுமறியாதவனைப் போல விடிவதற்கு முன்னால் திரும்பி விடுகிறானே! இந்தப் புறவாழ்வின் மர்மம்தான் என்ன? வில்லிலிருந்து விடுபட்ட அம்புக்கு எப்படியும் ஒரு இலக்கு இருக்க வேண்டும். அப்படியானால் இந்தக் கௌதம பாணம் எந்த இலக்கிலே போய்த் தைக்கப் போகிறது? நினைக்க நினைக்க மயநாத ஸ்தபதியாருக்கு மனம் தான் குழம்பியது!

இத்தகைய குழப்பமான சூழலுக்கு மத்தியிலும் சிற்பியின் கை வண்ணத்திலே உருவாகிக் கொண்டிருந்த புத்ததேவர் அருட் புன்னகை இதழ்க் கடையில் தெளிந்தோட, அமைதி தவழும் வதனத்துடன் பத்மாசனத்தில் ஆழ்ந்த நிஷ்டையில் அமர்ந்திருந்தார்!

★

காய்ந்து போன தாழம் புதரிலே தீ பரவுவதைப் போல அந்தச் செய்தி சம்பாபதிப்


பட்டு நின்றாள் தேவமாலை என்று அறிந்துகொண்ட பொழுது எத்தனை எத்தனை ரசிக உள்ளங்கள் திகைப்பும் வியப்பும் அடைந்தன!

அன்று இரவு ஆடல் அரங்கத்தின் சயன கூடத்திலே விடிவிளக்காக ஒளி பரப்பிக் கொண்டிருந்த பாவை விளக்கிலிருந்து ஒளிச் சொட்டுகள் கண்ணீர்த் திவலைகளைப் போலக் கீழே சொட்டிக் கொண்டிருந்தன! அந்தக் காட்சியைப் பார்த்தவாறே நிம்மதியின்றி மஞ்சத்தில் புரண்டு கொண்டிருந்த வெண்ணி மாலை சட்டென்று எழுந்து உட்கார்ந்தாள். கொஞ்ச நேரத்துக்கு முன்னால் தலைவி தேவமாலை கூறிவிட்டுச் சென்ற வார்த்தைகள் மீண்டும் அவள் காதுகளில் வந்து ஒலித்தன.

"போதியின் கீழ் மாதவனின் பொன்னடிகளில் அர்ப்பணிக்க வேண்டிய ஒரு புனித மலரை, கூந்தலிலே சூட்டி யாராவது அழகு பார்ப்பார்களா? வெண்ணி மாலை! சற்று நிதானித்துப் பதில் சொல், பார்ப்போம்!"

வெண்ணிமாலைக்கு இப்போதும் ஒரு வியப்பு ஏற்பட்டது! அவளுக்குத் தெரியாமலேயே அவள் கூந்தலில் எங்காவது ஒரு பூ பூத்து விட்டதோ என்ற ஐயத்தின் மேல் தேடிப் பார்ப்பவளைப் போல இரண்டு கைகளாலும் தன் அடர்ந்த அளகபாரத்தை அளைந்தபடியே கோதிவிட்டாள் அவள். கேச அலைகள் காற்றிலே கலைந்து விரிந்து பரந்தன. அன்று அவள் சரியாகக் கண்ணயரவில்லை. அயர முடியவில்லை!

மறுநாள் விடியற்காலையில் துயில் எழுந்ததும் ஒரு அதிசயமான காட்சியைக் கண்டாள் வெண்ணி மாலை. அவளுடைய தோழிகள் அனைவரும் கண் கவர் ஆடைகளுக்குப் பதிலாகக் காஷாய உடையிலே தவ வேடம் பூண்டு நின்று கொண்டிருந்தனர்; ஒரே நாள் இரவுக்குள் அத்தனை பேரும் இதய



REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

பரிபக்குவம் அடைந்து விட்டதைப் போல! ''இதென்ன கோலம்?'' என்ற பாவத்தில் அவர்களை வெறித்துப் பார்த்தாள் வெண்ணிமாலை. அவளுக்குச் சிரிப்புத்தான் வந்தது.

''வாடிப் போகிற இந்த உலகத்திலே வாடா மலராகப் போகிறோம் நாங்கள். பண்ணும் பரதமும் இனி எங்களுக்கு வேண்டாம். பகவன் நாமமே எங்கள் உயிர், மூர்ச்சனை எல்லாம்....''

''அப்படியானால் நான்?..அந்தப் பாக்கியத்துக்கு நான் மட்டும் அருகதையில்லையா?'' பச்சைக் குழந்தையின் குரலிலே தவழ்கிற ஒரு படபடப்போடு அழாக்குறையாகக் கேட்டாள் வெண்ணிமாலை.

ஒருத்தி தெளிவாகவே சொன்னாள்:

''வெண்ணிமாலை! உன் வேஷம் கலைந்து விட்டது. காதல் மயக்கத்தில் கணையாழியைக்கூட மாற்றிக் கொண்டவளுக்குத் துறவைப் பற்றி எதற்குக் கவலை? ஒருவேளை இனி மனத்தை மாற்றிக் கொண்டு விட்டாலும் அதன் மாசு எப்போதும் நீங்கப் போவதில்லை.....''

வெண்ணிமாலைக்கு நெஞ்சிலே 'திக்'கென்றது. ''கணையாழியாவது காதலாவது?'' என்று அவள் உதடுகள் முணுமுணுத்தாலும் இதயத்தின் ஒரு மூலையில் இதுகாறும் அருவமாக உறுத்திக் கொண்டிருந்த இனிய வேதனைக்குப் பளிச்சென்று ஒரு காரணம் மின்னியது. மறுவினாடியே என்றோ ஒரு நாள் எங்கோ கழன்று விழுந்து காணாமல் போன அவன் கண்டு விரல் மோதிரம் அவள் மனக்கண்முன் வந்து நின்றது.

''என்ன மாயம் இது! மோதிரத்தின் வட்டமான வளைவுக்குள்ளே தெரிவது தாமரை மலரா? இல்லை, மனித இதயமா?''

உள்ளுணர்வின் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் கற்சிலையாகத் திகைத்து நின்றாள் வெண்ணிமாலை!

★

''ஆமாம், கற்சிலைதான்! கந்தர்வப் பெண்ணோ என்று நினைத்தேன்!'' என்று சொல்லி முடியாத ஆச்சரியத்தோடு சிலையினின்றும் இரண்டு எட்டு தள்ளிநின்று பார்த்த வண்ணம் கூறினார் மயநாத ஸ்தபதியார். சிலையைப் பார்க்கப் பார்க்க அவருடைய உள்ளத்தில் படபடப்பு அதிகமாகியது. இதற்குத்தானா அந்த வெறிபிடித்த ஓட்டம்?

''சுவாமி! நான் அப்பொழுதே சொல்லவில்லையா? காதல் வேகம்தான் கௌதமனை இப்படி ஆட்டிப் படைத்திருக்கிறது! பாவம், துறவிலே நாட்டங் கொண்ட இளைஞனின் கையால் புத்தனைச் சிலாரூபத்தில் வடிக்க வேண்டும் என்ற தங்கள் லட்சியத்தைக் கெடுத்து விட்டானே இந்தக் கௌதமன்!''

மயநாத ஸ்தபதியார் காதுகளைப் பொத்திக் கொண்டார்.

ச்யவனன் மேலும் தூபமிட்டான்.

''சுவாமி! கல்லிலே நிற்கும் இந்தக் கட்டழகி யார் தெரியுமா? ஆடல் பாடல்களிலே வல்லவள். மருவூர்ப் பாக்கத்து ஆடல் அரங்கைச் சேர்ந்தவள். வெண்ணிமாலை என்பது இவளுடைய பெயர்....''

''ஆடல் அரங்கா . இப்போது தவச்சாலை அல்லவா அது!'' என்று அவன் பேச்சில் குறுக்கிட்டார் மயநாதர்.

''ஆமாம்! தேவமாலையின் விருப்பப்படி அத்தனை பெண்களும் பௌத்த சங்கத்திலே சேர்ந்து விட்டனர்—இந்த வெண்ணிமாலையைத் தவிர! பாவி! காதல் மயக்கத்தால் தன்னை அழித்துக் கொண்டதுமல்லாமல், உத்தமத் துறவி ஒருவனின் இதயத்தையும் பாழ்படுத்தி விட்டாளே!''—கலங்குவதைப் போலக் கண்ணீர் உகுத்தான் அவன். அவ்வளவுதான்! மயநாத ஸ்தபதியாருக்கு ஒரு ஆவேசமே வந்துவிட்டது. அந்தஇடத்தை விட்டு வேகமாக அகன்று சென்றார்.

ஊழ்வினை, விதி என்றெல்லாம் பேசப்படுகின்ற தத்துவம் அன்று காவிரிப் பூம்பட்டினத்திலே ஒரு விசித்திரமான காரியத்தைச் செய்தது.

பரிசுத்தமான உள்ளத்தோடு புத்த தேவனின் சிலையைச் செதுக்கி முடித்த திருப்தியுடன் ஆசனத்தை விட்டு எழுந்த கௌதமனுக்கு முன்னால் ரௌத்காரமான தோற்றத்துடன் வந்து நின்றார் மயநாதர். கோபத்தால் அவர் குரல் நடுங்கியது.

''கௌதமா! என்னை ஏமாற்றி விட்டாய். நீ மகா பாவி! உன் கைபட்ட சிலை புத்தனல்ல; வெறும் கல்! இன்றோடு உனக்கு விடுதலை. என் கண்முன் நில்லாதே! போய் விடு.'' உளிபட்டுச் சிதறும் உண்மையான கருங்கல் சில்லுகளைப் போல வார்த்தைகள் ஒவ்வொன்றும் கௌதமன் இதயத்தில் போய்க் குத்தி நின்றன.

திகைப்பு விஞ்ச விஞ்சக் கௌதமனுக்கு மனத்தில் ஒரு தெளிவே ஏற்பட்டது. சொன்னான்: ''சுவாமி! தங்கள் அன்புக்கு என் நன்றி. போய் விடுகிறேன்....''

கவிந்து வரும் இருட்படலம் உலகத்தை வளைக்கின்ற அந்த அந்தி நேரத்திலே கௌதமன் சிற்பக் கூடத்தை விட்டுச் சலனமற்ற உள்ளத்துடன் வெளியே இறங்கி நடந்தான். அவன் கால்கள் போன போக்கில் நடந்தான்.

★

சம்பாபதிக் கடற்கரையிலே....

நடந்து நடந்து கால் ஓய்ந்துபோன கௌதமன் தன்னைச் சுற்றிச் சூழப் படர்ந்திருந்த இருள் என்ற பெருவனத்தின் மத்தியிலே ஏதோ ஒரு ஒளி வந்து கலப்பதை உணர்ந்து சட்டென்று நின்றான். பாதங்கள் பூமணலின் மென்மையிலே பதிந்து நனைந்தன.

என்றோ ஒருநாள் மருவூர்ப் பாக்கத்து ஆவண வீதியிலே நடந்து வரும்பொழுது காலிலே தட்டுப்பட்ட ஒரு மோதிரத்தைக் கண்டெடுத்ததும், அதனையே மூலமாக வைத்துத் தன் கலையுள்ளம் கல்லிலே வடித்தெடுத்த கவின் பெரு வனப்பும் அவன் கண்ணுக்குள் வந்து நர்த்தனமாடின.

அந்த நினைவுகளை எல்லாம் ஒரு நொடியிலே மிதித்து விட்டு முன்னேறுபவனைப் போல அடுத்த அடி எடுத்துவைத்த கௌதமன் திடுக்கிட்டு விட்டான். இப்பொழுதும் ஏதோ ஒன்று காலடியிலே வந்து இடறியது!

"என்ன? ஒரு பெண்!"

கூச்சலிட்ட அதே கணத்தில் கௌதமனின் கரங்கள் அவனை யறியாமலேயே அவளைத் தழுவி எடுத்து அவன் மடியிலே ஆதரவாகக் கிடத்தின. என்ன செய்கிறோம் என்ற உணர்வின் சலனம் அற்று அவன் நடந்து கொண்டான். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் சந்திரிகையின் ஒளிவந்து மயங்கிக் கிடந்த அந்தப் பெண்ணின் முகத்திலே தவழ்ந்தது.

"ஆகா! இதென்ன விந்தை! கல்லுக்கு வடிவளித்தது நான்; ஆனால் யார் உயிரளித்தது?"

மறு விநாடி ஒரு மின்னல் துவண்டது. ஆம்! அந்தப் பெண் கொடி ஒரு துள்ளுத் துள்ளி எழுந்தாள். அவளது மெல்லிய உடலும் இதயமும் துடியாய்த் துடித்தன!

"என் உயிர் இன்னும் அணையவில்லையா? கருணைக் கடலே! உனக்கு என்ன தீங்கிழைத்தேன்? ஏற்றுக் கொள்ளாமல் புறக்கணித்து விட்டாயே! உயிரையாவது பறித்திருக்கக் கூடாதா?" நாணற் குழலிலே காற்று புகும்பொழுது ஏற்படும் சோக ஒலிபோல அழுதாள் அவள். அவளைப் பலவாறு சமாதானம் செய்தான் கௌதமன். கடைசியில் அவள் சொன்னாள்:

"கழன்று விழுந்த ஒரு கணையாழியோடு என் உள்ளமும் காணாமற் போனது உண்மைதான். காதல் என்றனர் என் தோழிகள்; காதல்தான் என்றேன் நான்! அவர்கள் குறிப்பிட்டது மாயை! நான் உணர்ந்ததோ தெய்விகம்....! இனி என்னைத் தீண்டாதீர்கள். நான் ஒரு துறவி....!"

"நீ தொலைத்தாய். நான் கண்டெடுத்தேன். காலம் நம்மை ஒன்று சேர்த்திருக்கிறது. இனி நீ மட்டுமென்ன, நானும் துறவிதான்! மெய்யான இன்பத்தில் உலகத்தை ஒன்று சேர்க்க வேண்டி அன்று மனைவியையும் மகனையும் மஞ்சத்தில் விட்டுவிட்டுப் பிரிந்து சென்றான் புத்தன். அதே வழியிலே துறவின் எல்லைக்குள் இன்று சந்தித்திருக்கிறோம் நாம்.

"நம் பிரார்த்தனையில் உலகம் ஒன்று சேரட்டும். உண்மைக் காதலும் இல்லறமும் தழைக்கட்டும். வா போகலாம்! அறவண அடிகளின் தவச்சாலை நமக்காகத் திறந்திருக்கிறது.

கௌதமன் மெள்ள நடந்தான். வெண்ணிமாலையும் அவனைத் தொடாமல் சற்று இடைவெளி விட்டுப் பின் தொடர்ந்தாள். ஆனாலும் ஒன்றாகச் சங்கமித்த அவர்களுடைய உள்ளங்களின் ஒருமைக்கு அத்தாட்சியாக இருவருக்கும் சேர்த்து ஒரேயொரு நிழல் நீளமாக, நிலவின் ஒளியிலே அந்த வெள்ளி மணற்பரப்பில் முன்னேறிக் கொண்டிருந்தது!

படித்துப் பாருங்கள்

தென்னிந்தியப் பயிர்கள்

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்றார் திருவள்ளுவர். மக்கள் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத உணவுப் பொருள்களைப் பயிர்த் தொழில் வளர்ச்சியின் மூலம் தான் பெற முடியும். நம் பாரத நாடு விவசாயத்தை நம்பி வாழும் நாடு. இந் நாட்டில், மேழிச் செல்வம் மேன்மேலும் செழிக்க வேண்டுமானால், விவசாயத்துறையில் நல்லறிவு மக்களுக்குத் தேவை. அப்பொழுது தான் உணவுப் பொருள் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும்.

இப்புத்தகத்தில், தானியப் பயிர்கள், துணை உணவுப் பயிர்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துப் பயிர்கள், கரும்புப் பயிர்கள், சம்பாரப் பயிர்கள், நார்ப் பயிர்கள், லாகிரிப் பயிர்கள், பசுந்தாள் எருப் பயிர்கள், தீவனப் பயிர்கள்—என்று பயிர் வகைகள் அவ்வளவையும் பற்றி விவரமாகக் கூறப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு பயிரையும் பற்றி வரலாறு, முக்கியத்துவம், சூழ்நிலைத் தகுதி, விஸ்தீரணம், சாகுபடி முறைகள், பாசனம், அறுவடை என்ற எல்லா அம்சங்களுடனும் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. தமிழ் மொழியில் இத்தகைய புத்தகம் வெகு நாளையத் தேவை. தென்னிந்திய விவசாயத் தொழிலுக்கு உபயோகமாகும் கருவிகள், பயிர்த் தொழில் முறைகள், பல வகைப் பயிர்களின் தோற்றங்கள் எல்லாம் நாற்பத்தைந்து புகைப்படங்கள் மூலம் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. பயிர்களைப் பற்றிய அனேக விஷயங்கள் இருந்தாலும், குறிப்பாக ஒவ்வொரு பயிருக்கும் பூச்சிகளினாலும் நோய்களினாலும் ஏற்படும் நாசத்தைத் தவிர்க்கப் பாதுகாப்பு முறைகளையும் பற்றி எழுதியிருந்தால் இன்னும் உபயோகமாயிருக்கும். 666 பக்கங்கள் கொண்ட இந்நூலை எழுதியவர் கோவை விவசாயக் கல்லூரிப் பேராசிரியராயிருந்த திரு வி. டி. சுப்பையா முதலியார் அவர்கள். இத்தகைய ஆராய்ச்சிப் பெருநூல்கள் சுதந்திர இந்தியாவின் வளர்ச்சிக்குப் பெரிதும் தேவை. புத்தகம் மிகவும் நல்ல முறையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

பிரசுரம்: அமுத நிலையம் பிரைவேட் லிமிடெட், தேனாம்பேட்டை, சென்னை—18; விலை: ரூ. 12. —எஸ். என். வெங்கடரமணன்,
ரிடயர்ட் விவசாய இலாகா அதிகாரி.

நவீன கீதம்

எளிய தமிழில் பாலர்களும் உணர்ந்து பாடும் வகையில் பக்திப் பாடல்கள் பல இந்நூலில் இடம் பெற்றிருக்கின்றன. பரம்பொருளின் பெருமையையும், அதன் சாம்ராஜ்யமான இவ்வுலகில் நிறுவ வேண்டிய நல்லறம், நல்லொழுக்கம் முதலியவற்றைப் பற்றியும் ராகதாளக் குறிப்புகளுடன் பாடல்கள் அமைக்கப் பெற்றுள்ளன. தமிழ் நாட்டு மக்கள் மட்டும் அல்லாமல், மற்றவர்களும் பயன் பெற வேண்டும் என்ற நோக்கத்துடன், அந்தந்தப் பாடல்களுக்கு அடியிலே ஆங்கில மொழிபெயர்ப்பும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

கிடைக்குமிடம்: ஸ்ரீ கே. நாராயணஸ்வாமி அய்யர், 9. டாக்டர் நாயர் ரோடு, சென்னை—17. விலை: ரூ. 2—8—0.

ஸ்திரீ ரத்தினம்

வாசலில் கட்டியிருந்த நாய் குரைத்தது. வில்லே போட்ட சேவகன் வெளியே வந்தான். வாசலில் ஒரு வயதான ஸ்திரீ நின்று கொண்டிருந்தாள்.

''யாரம்மா, என்ன வேணும்?''

''ஐயா இருக்கிறாரா? பார்க்கலாமா?''

''நீங்க யாரு? பேர் சொல்லுங்க. ஐயாகிட்டே சொல்கிறேன்.''

''அவங்க அக்கா வந்திருக்கிறேன் என்று சொல்லு. தெரிஞ்சுப்பாரு.''

அவன் உள்ளே போனான்.


அவள் அந்தக் கட்டடத்தை ஒரு நோட்டம் விட்டாள். பெரிய பங்களா, கார், நல்ல பெரிய உத்தியோகம் அவள் தம்பிக்கு இருந்தன. அவள் பெருமிதம் அடைந்தாள். தன் தம்பி நல்வாழ்வு வாழ்வதில் அவளுக்கு மகிழ்ச்சி.

அதே சமயம் ''அந்த மானம் கெட்டவள் வந்திருக்கிறாள். இருபது வருடம் கழித்துத் தம்பி உறவு கொண்டாடிக் கொண்டு வந்திருக்கிறாள். போய்ப் பாருங்கள்'' என்று ஒரு பெண் குரல் கேட்டது. அது அவள் காதில் நாராசமாய் விழுந்தது.

அதைத் தொடர்ந்து. ''பார்க்க முடியாது என்று சொல்லு'' என்று கடுமையான ஆண் குரல் கேட்டது.

சேவகன் வெளியே வந்ததும் வராததுமாக, ''முக்கியமான சமாசாரம் என்று சொல். ஐந்து நிமிஷம் பேசி விட்டுப் போய் விடுகிறேன் என்று போய்ச் சொல்லு'' என்று கூறி அனுப்பினாள் அவள்.





அந்தச் சேவகன் சற்று இளகிய மனம் பெற்றவன்.

உள்ளே போய்ச் சொன்னான்.

அதே சமயம், ''உனக்கு வேலையைக் காப்பாற்றிக் கொள்ளணும்னு விருப்பம் இருக்கா இல்லையா? பார்க்க முடியாது என்று சொன்னவுடன் கொண்டு போய் வெளியே தள்ளாமல் திரும்பித்திரும்பி வந்தாளென்னிடம் பேசறே?'' என்று உரத்த குரல் கேட்டது.

'நம்மால் ஒரு ஏழைச் சேவகன் வேலையை இழப்பானேன்?' என்று எண்ணித் திரும்பி விட்டாள் அவள்.

தன்னுடைய தம்பி தன்னைப் பார்க்க விரும்பாமல் விரட்டி அடித்து விட்டது அவளுக்கு அவ்வளவு துக்கமாக இல்லை. ஆனால் ஒரே ஒரு காரியத்துக்காக அவனைப் பார்க்க விரும்பினாள், அதுவும் இருபது வருடங்கள் கழித்து.

அது என்ன? ஏன் இருபது வருடம் கழித்து அவனைப் பார்க்கப் போனாள்? அவனுடைய தற்போதைய உத்தியோக உயர்வை, அந்தஸ்தைக் கண்டா அவள் வந்தாள்? இல்லை. பின் எதற்காக வந்தாள்?..

★

அவள் பெற்றோருக்கு அவளும், அவள் தம்பி சேகருமே குழந்தைகள். அவள் நல்ல அழகி. எஸ். எஸ். எல். ஸி. படித்துக் கொண்டிருந்த போது அவளுக்கு விவாகம் செய்துவிட அவள் பெற்றோர் ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்கள். அவள் தம்பி அப்போது மூன்றாவது பாரம் படித்துக் கொண்டிருந்தான்.

கடவுளின் திருவுள்ளத்தைக் கண்டவர் யார்? மூன்று நாள் ஜுரத்தில் அவள் பெற்றோர்கள் ஒருவர்பின் ஒருவராக இவ்வுலகை விட்டுச் சென்றார்கள்.

வேறு நெருங்கின உறவினர் யாரும் இல்லை, அவர்களைக் கொண்டு போய் வைத்துக் காப்பாற்ற. ஏதோ கையிலிருந்த பணத்தைக் கொண்டும் வயதான தூரத்து உறவினளான அம்மாளின் சரீர உதவியைக் கொண்டும் அவள் தன் தம்பியையும் தன்னையும் காப்பாற்றிக் கொள்ள முன் வந்தாள்.

அந்த வருஷமே எஸ். எஸ். எல். ஸி.யில் தேறி உபாத்தியாயினிப் பயிற்சியிலும் சேர்ந்து படித்து உள்ளூரிலேயே ஒரு பள்ளியில் ஆசிரியையாக வேலைக்கு அமர்ந்தாள்.

அவளுக்குத் தன் தம்பி சேகரிடம் அபார அபிமானம்.

தன் உடல், பொருள், ஆவி எல்லாவற்றையும் தன் தம்பியின் நல்வாழ்வுக்காக அர்ப்பணித்துக் கொண்டாள்.

சேகரும் எஸ். எஸ். எல். ஸி. பாஸ் செய்து விட்டான். மாகாணத்திலேயே அவன் முதலாவதாகத் தேறி விட்டான். அவனுக்கு வயதோ பதினைந்துதான்.

அவனை எப்படியாவது கலாசாலையில் சேர்த்துப் படிக்க வைக்கத் திட்டமிட்டாள் அவள்.

''கலாசாலைப் படிப்பு என்றால் சும்மாவா? நமக்கெல்லாம் அதற்குப் பிராப்தம் கிடையாது, அக்கா. சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் கற்றுக் கொண்டு எங்கேயாவது உத்தியோகத்துக்குப் போகிறேன். நாலு காசு சம்பாதித்து உனக்கு உதவி செய்கிறேன்'' என்றான் சேகர்.

''அந்தக் கவலை எல்லாம் உனக்கு எதற்கு?'' என்று கூறி அவனைக் கலாசாலையில் சேர்த்து விட்டாள். மாதா மாதம் அவனுக்குப் பணமும் அனுப்பி வந்தாள்.

அவன் லீவுக்கு வந்த போது, ''உனக்கு ஏது அக்கா பணம்? நீ வாங்குகிற பணம் குடும்பத்துக்கே போதாதே!'' என்றான்.

''மிட்டாதார் வீட்டில் மூன்று குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறேன். ஐம்பது ரூபாய் கொடுக்கிறார்கள். உன் கலாசாலைப் படிப்பு முடியும் வரையில் அந்த ட்யூஷன் நிலைக்க வேண்டும். என்ன கஷ்டம் வந்தாலும் அதை விடக் கூடாது என்று முடிவு செய்திருக்கிறேன்'' என்றாள் அவள்.

அவள் வயிற்றை வாயை ஒடுக்கி அவனைப் படிக்க வைத்தாள்.

அவள் தம்பி சேகர் என்ஜினீயரிங் கல்லூரியில் படித்துத் தேறியபோது அவள் அடைந்த பூரிப்பைச் சொல்லி முடியாது.

அவனுடைய புத்திக்கூர்மையைப் பார்த்த ஒரு கல்லூரிப் பேராசிரியர் அவனுக்குத் தம் மகளை மணம் முடிக்கவும் அவனை இன்னும் மேல் படிப்புக்காக வெளிநாடு அனுப்பவும் தீர்மானித்து அவனிடமே நேரில் கேட்டார்.

தம்பியின் எதிர்காலம் மகோன்னதமாக இருக்க வேண்டும் என்று மனக் கோட்டை கட்டிய தமக்கை அந்தக் கல்யாணத்துக்குச் சம்மதித்தாள்.

கல்யாணம் இனிது நடந்து முடிந்தது.

மணமான மறுமாதமே அவன் மேல் படிப்புக்காக அமெரிக்கா போய் விட்டான்.

பயிற்சி முடிந்து தாய் நாடு திரும்ப அவனுக்கு ஒரு வருட காலம் பிடித்தது.

அந்த ஒரு வருட காலத்தில் மூன்று தடவைகள் அவன் சகோதரி, சேகரின் மாமனார் வீட்டுக்குப் போயிருக்கிறாள். அப்போதெல்லாம் அவர்கள் அலட்சியமாக அவளை நடத்தினர்.

சேகர் வந்து மூன்று நாட்கள் ஆயின.

இரண்டொரு நண்பர்களை அவன் சந்தித்தான். அவனுடைய உன்னத ஸ்திதியைக் கண்டு பொறாமைப்பட்ட அவர்கள் ஜாடையாக, ''சேகருக்குக் கிடைத்தமாதிரி நமக்கும் ஒரு சகோதரி இருந்தால் நாமும் உயர்ந்த படிப்பு படித்திருக்கலாம்'' என்றார்கள்.

அவனுக்கு அது பெருமையாகவே இருந்தது. ஆனால் வாசற்படி தாண்டும் பொழுது

தான் அவர்களது உண்மையான அபிப்பிராயம் அவனுக்கு விளங்கியது.

''மிட்டாதாரின் மகன் மனசு வைத்தான். அள்ளி அள்ளிக் கொடுத்தான். அவன் அக்கா பலே கெட்டிக்காரி. அதைப் பயன்படுத்திக் கொண்டு தன் தம்பியைப் படிக்க வைத்து விட்டாள். ஏழையாக இருந்தாலும் கௌரவமாக வாழக் கூடாதா?''

அவர்கள் பேச்சு அவனுக்கு நாராசமாயிருந்தது. ஓடினான் வீட்டுக்கு. தன் சகோதரி மாகன்னவளா? அவனால் நினைத்துப் பார்க்கவே முடிய வில்லை.

வீட்டிலும் அதிர்ச்சி காத்திருந்தது.

அவன் மாமனார், ''சேகர், வித்தியாசமாக எண்ணாதே. உன் சகோதரியைப் பற்றி ஒரு மாதிரியான பேச்சு காதில் விழுகிறது. நம்முடைய அந்தஸ்துக்கு அவன் நம்முடன் சேர்ந்திருப்பது நமக்கு மிகவும் அவமானமாகும்'' என்று கூறினார்.

அவனுடைய சகோதரி அவன் அமெரிக்காவிலிருந்து திரும்பியதைக் கேள்விப்பட்டு ஆசையோடு பார்க்க ஓடி வந்தாள்.

வாசலிலேயே இருந்த சேகர், ''படி ஏற வேண்டாம். நாங்கள் மானத்துடன் வாழ விரும்புகிறோம். நீ அந்த மிட்டாதார் மகனுடனேயே தொலைந்துபோ'' என்றுசீறினான்.

இடி விழுந்தாற் போல் ஆயிற்று அவளுக்கு.

''நீ கூடவா சந்தேகப்படுகிறாய், சேகர்! உண்மையைச் சொல்கிறேன். பொறுமையோடு கேள்'' என்று கெஞ்சினாள்.

''கேட்கத் தயாராயில்லை. இங்கிருந்து போய்விடு'' என்று விரட்டி விட்டான்.

யாருக்காகத் தன் வாழ்வையே சுட்டுப் பொசுக்கிக் கொண்டாளோ, அவனா இப்படிப் பேசுவது?

ஆயிரம் பழுக்கக் காய்ச்சிய வேல்களை யாராவது பலம் கொண்ட மட்டும் அவள் மார்பில் பாய்ச்சி இருந்தால்கூட அவள் அவ்வளவு துடி துடித்து இருக்க மாட்டாள்.

ஆயினும் தம்பியின் மேலுள்ள பாசம் அவளுக்குக் குறைந்து விடவில்லை.

நடந்தவைகளை அப்படியே எழுதி அவனுக்குத் தபாலில் போட்டாள். அவை நிராகரிக்கப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்டு விட்டன. ஏழெட்டுத் தடவைகள் அவன் உத்தியோகம் செய்யும் இடத்துக்கே போய்ப் பார்த்தாள். அவன் தன் அக்காளைப் படி ஏறவே விடவில்லை.

மூன்று வருஷகாலம் அவள் எவ்வளவோ முயன்றும் அவன் வீட்டுப்படி ஏற முடியவில்லை. அவனிடம் ஒரு வார்த்தை பேசவும் அவளால் முடியவில்லை.

தன் வழி வேறு என்று தீர்மானித்துக் கொண்டாள் அவள்.

அதன் பிறகு இருபது வருடங்கள் ஓடி விட்டன. எங்கே இருந்தபோதிலும் அவள் சதா தன் தம்பியின் க்ஷேமத்துக்காகவே கடவுளை வேண்டி வந்தாள்.

ஆசிரியை வேலையில் அவளுக்கு எங்கெங்கேயோ மாற்றலாகிக் கடைசியில் ஒரு ஜில்லாவின் தலைநகரில் இருந்த பள்ளிக்கு வந்து சேர்ந்தாள். அப்போதுதான் அவள் தம்பி சேகர் அங்கே ஜில்லாவில் எஞ்ஜினியராக இருப்பதை அறிந்தாள்

அவள் வந்து ஒரு மாதம் ஆகிவிட்டது.

அடுத்த மாதம் அவளுக்கு ஐம்பத்தைந்து வயது ஆகி, அவள் வேலையிலிருந்து ஓய்வு பெற வேண்டும். தன் தம்பியை ஒரு காரியத்தை முன்னிட்டு அவள் அவசியம் பார்க்க விரும்பினாள். வருடங்கள் இருபது ஆகிவிட்டதால் அவன் மனம் மாறி இருக்கும் என்று அவள் பெரிதும் நம்பியே சென்றாள். ஆனால் அவள் துரத்தப்பட்டாள்.

ஒரு மாதம் சென்றது.

அந்த ஒரு மாதத்தில் எவ்வளவோ காரியங்கள் நடந்துவிட்டன. சேகருக்கு எதிராகச் சில தீய சக்திகள் வேலை செய்தன. அவன் உத்தியோக வாழ்க்கையில் நேர்மையானவன். நெறி தவறாதவன். தங்கள் பித்தலாட்டங்கள் அவனிடம் செல்லாததைக் கண்டு சில கயவர்கள் சதி செய்து விட்டார்கள். அதன் முடிவு?



சேகர் பேரில் லஞ்சக் குற்றம் சாட்டப்பட்டு அவனை வேலையிலிருந்து தற்காலிகமாக விலக்கி, நீதிஸ்தலத்தில் அவன் பேரில் வழக்கும் பதிவாகி விட்டது.

அவன் இவ்வளவு காலம் பெரிய உத்தியோகத்தில் இருந்தானே ஒழிய அதிகமாக ஒன்றும் சேர்த்து வைத்து விடவில்லை. பெரிய சம்சாரி. நல்ல செலவாளி. மூன்று நாலு பெண்களுக்குக் கலியாணம் செய்து கொஞ்சம் சளைத்திருந்தான். நல்ல வக்கீலாக வைத்து வாதாட அவனிடம் போதிய பணம் இல்லை.

அந்தச் சமயம் தான் அவன் பெயருக்கு ஒரு கடிதம் வந்தது. இவ்வளவு காலமாகத் தன் சகோதரியின் கடிதங்களை நிராகரித்துத் திருப்பி அனுப்பிய அவன் முதன் முதலாக அதை வாங்கிப் பிரித்துப் பார்த்தான். அது அவன் நல்ல காலத்துக்கேதான்.

''அன்புள்ள சேகர்,

உன்னிடம் நேரில் ஒரு விஷயத்தைச் சொல்லவே உன்னை இவ்வளவு வருஷங்கள் கழித்துத் தேடிவந்தேன். ஆனால் உன்னைப் பார்த்துப் பேசும் பாக்கியம் எனக்குக் கிட்டவில்லை.

நான் நெறி தவறியவள் என்று நீ நினைக்கிறாய். ஆனால் அது உண்மையல்ல. உன்னை மேல்படிப்பு படிக்கவைக்கும் பணியில் என் கெட்ட பெயரைக்கூட லட்சியம் செய்யவில்லை. உண்மையாகச் சொல்கிறேன். மிட்டாதார் மகன் என்னை ஒரு நாளும் நெருங்கியதே இல்லை. ஊரார் என்னைப் பற்றிக் கேவலமாகச் சொல்வதற்காக அந்த ட்யூஷனை விட்டிருந்தால் உன் கல்லூரிப் படிப்பு முடிந்திருக்காது. அப்போது மட்டும் ஊரார் பேச்சுக்காக நான் டியூஷனை விட்டிருந்தால்கூடப் பிறகு ஏதாவது கண் மூக்கு வைத்து ஏதாவது சொல்லாமலா விட்டுவிடும் உலகம்? உலகம் ஒரு விசித்திரக் கண்ணாடி. ஒவ்வொருவர் மனோபாவம் ஒவ்வொரு மாதிரி இருக்கும். எல்லோரையும் திருப்திப்படுத்த முடியாது.

உன் படிப்பு முடிந்ததும் நான் ஐயாயிரம் ரூபாய்க்கு இன்ஷ்யூர் செய்தேன். அது இந்த மாதம் பூர்த்தியாகி விடுகிறது. பிள்ளை குட்டி இல்லாத எனக்கு என்னத்துக்கு அந்தப் பணம்? அன்று உன்னை நான் பார்க்க வந்ததின் காரணமே அந்த இன்ஷ்யூரன்ஸ் தொகைக்கு உன்னை நியமனம் செய்து விட்டேன் என்பதைச் சொல்லிவிட்டு, அதற்காக உன்னிடம் ஒரு பாரத்தில் கையெழுத்து வாங்கிக் கம்பெனிக்கு அனுப்பத்தான். நான் வேலையிலிருந்து ஓய்வு பெற்று விட்டேன்.

வடக்கே காசி முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களைத் தரிசித்து விட்டு மிச்சமுள்ள காலத்தைக் காசியிலேயே கழித்து விடுவதற்குத் தீர்மானித்து விட்டேன்.

அன்புள்ள சேகர்! என் அருமைத் தம்பி! இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிக்காரர் பணம் அனுப்புவதை ஏற்க மறுத்து விடாதே.

இனி இந்தப் பாபி எப்போதுமே உன் கண்ணில் படமாட்டேன். அதற்காகவே என் விலாசம்கூட உனக்குக் கொடுக்கப் போவதில்லை.

தண்ணீரைத் தண்ணீர் அடித்து விலக்காது. நீ என்னை எவ்வளவு வெறுத்தாலும் நிதமும் நீ சௌக்கியமாக இருக்க வேண்டும் என்பதே எனது பிரார்த்தனை.

அக்கா

அன்றைக்கே இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியிலிருந்து சில பாரங்களில் கையெழுத்திட்டு அனுப்பும்படியும் அவன் தமக்கையின் பாலிஸி பூர்த்தியாகி விட்டதென்றும் கடிதம் வந்தது.

அந்தப் பணத்தை வாங்கியபோது அவன் உடல் எல்லாம் நடுங்கியது. அவன் அக்காவை நினைக்கும் போதெல்லாம் மெய் சிலிர்த்தது. 'அக்கா, அக்கா' என்று அவன் கதறித் தீர்த்தான். அவளைக் குலதெய்வமாகவே கொண்டாடினான். பெரிய வக்கீலாக வைத்து வழக்காடினான் அந்தப் பணத்தில்.

அதே சமயம் காசிமா நகரில் காசிவிசுவநாதர் சன்னிதானத்தில் நின்று கொண்டிருந்த ஒரு ஸ்திரீயிடம் ''யார் பேருக்கு அம்மா அர்ச்சனை?'' என்று கேட்டார் குருக்கள்.

''ஸ்ரீ வத்ஸ கோத்ரம். கேட்டை நக்ஷத்திரம். பெயர் சேகர்'' என்று சொல்லிவிட்டு ''பகவானே, என் தம்பி சேகருக்கு ஒரு குறையும் இல்லாமல் வைக்க வேண்டும். என்னை வேண்டுமானாலும் எவ்வளவு சோதனையும் செய்'' என்று மனமுருகி வேண்டினாள், அந்த ஸ்திரீ ரத்தினம்—சேகரின் அக்கா.

அந்தப் புண்ணியவதியின் வேண்டுகோளுக்கு ஆண்டவன் செவிசாய்த்து விட்டார் என்பது மறுநாளே தெரிந்துவிட்டது. மறுநாள் சேகர் பேரில் குற்றமில்லை என்று அவன் விடுதலைசெய்யப்பட்டதுடன் அவனுக்குத் திரும்பவும் அதே உத்தியோகமும் கொடுக்கப்பட வேண்டும் என்று நீதிபதி தீர்ப்புக் கூறியிருந்தார்.

Printed and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk, Madras-10 for the Proprietors Messrs Bharathan Publications Private Limited
Managing Editor: T. Sadasivam

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon